Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

**சிலோன் எலக்றிக்கல்ஸ்**

180, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விளம்பி, பங்குனி 15-ஆம் நாள். (28-3-59) சனிக்கிழமை இதழ் 8.

# "தமிழரைப் பொறுத்த வரை யு. என். பி. செத்துவிட்டது"

## எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது ?

### தமிழ் பேசும் மக்களைப்பிரிக்க ஏற்பாடு

— நமது அரசியல் நிருபர் —

**அடுத்த தேர்தலுக்குள், அதாவது இரண்டு வருஷத்தில், இலங்கை அரசியல் அரங்கிலே என்னென்ன மாறுதல் ஏற்படும் என்று யாரும் நிச்சயமாகக் கூறமுடியாது.**

சென்ற பொதுத்தேர்தலுக்குச் சில வாரங்களுக்கு முன் தான் எம். ஈ. பி. என்ற "சாம்பார் கட்சி" அவசரமாக அமைக்கப்பட்டது. தேர்தலில் அதிக தொகையான பிரதிநிதிகளைப் பெற்று மந்திரி சபையைத் தனித்து அமைக்க முடியுமென்று பண்டாரநாயக்காவும் நினைக்கவில்லை. சற்றும் எதிர்பாராத விதமாக, குருட்டாம் போக்கிலே எம். ஈ. பி. க்குச் சில ஸ்தானங்கள் அதிகமாகக் கிடைத்தது. ஆட்சி அதிகாரமும் அவர்கள் கைக்கு மாறியது. இதற்கான காரணங்களை இங்கு நாம் ஆராயப் போவதில்லை.

### ஒரே காரணம்

ஆனல் சென்ற பொதுத் தேர்தலுக்குமுன் என்ன நடந்ததோ, அதேபோல அடுத்த தேர்தலுக்கு முன்பும் அரசியற் கட்சிகளிற் பெரிய மாறுதல்கள் ஏற்படுவது சாத்தியமே. சென்ற மூன்று வருஷங்களில் எம். ஈ. பி. ஆட்சியில் சமூக ஒற்றுமை குலைந்தது. கலவரங்கள் ஏற்பட்டுள்ளன. தொழில் அமைதியும் இல்லை. வகுப்பு வெறியர்கள் பேயாட்டம் ஆடினர். நிலைமையை ஒருவிதமாகச் சமாளிப்பது பெரிய காரியமாயிற்று. எம். ஈ. பி. கட்சிக்குள்ளும், மந்திரி சபைக்குள்ளும் எவ்வளவோ கட்சி பிரதி கட்சிகள். இடதுசாரி—வலதுசாரி பிணக்குகள் அம்பலத்துக்கு வருகின்றன. அடிக்கடி சில மந்திரிகளே மற்ற மந்திரிகளையும் அரசாங்கத்தையும் கண்டித்துப் பகிரங்கமாகப் பேசுகிருர்கள்.

ஆகவே அடுத்த இரண்டு ஆண்டு வரை இந்த எம். ஈ. பி. தேர் ஓடுமா? என்று அடிக்கடி சந்தேகமேற்படுகிறது. ஆனல் "பதவி போனல் வராது" என்ற பொதுக்காரணமும், பிரதமரின் அரசியல் தந்திரமும்தான் பிளவுகளையெல்லாம் ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டு இந்த ஆட்சித்தேரை ஓட்டி வருகிறது. பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க, மற்றும் சிலர் இக்கட்சியிலிருந்து விலகலாம். பல மாற்றங்களும் ஏற்படக்கூடும்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## புகையிரதப் பகுதித் தொழிலாளர் போலிசாரின் உதவியை நாடுகின்றனர்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் புகையிரதக் கடவைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் போலிஸ் பாதுகாப்புக் கோரி யிருக்கின்றனர். சமீப காலமாக அவர்கள் அடிக்கடி தாக்கப்பட்டு வருவதே போலிசாரின் உதவி கோரப்பட்டிருப்பதற்குக் காரணமாகும்.

சிரும்பியடி புகையிரதக் கடவையில் உள்ள தொழிலாளி சமீப நாட்களுக் கிடையில் இரு தடவை காடையர்களால் தாக்கப்பட்டுள்ளாரெனத் தெரிகின்றது. புகையிரதம் போவதற்காகக் கதவு சாத்தப்பட்ட பின்னர் அதைத் திறந்து தங்கள் வாகனங்கள் செல்ல இடமளிக்குமாறு அடாத்தாக வற்புறுத்துபவர்கள் கடைசியில் கைவரிசையைக் காட்டி விட்டுச் சென்று விடுகின்றனராம்.

அண்மையில் தாக்கப்பட்டுத் தரையில் விழுந்துகிடந்த ஒருவர் புகையிரத நிலைய அதிபருக்குத் தன் அவலநிலை பற்றி முறைப்பாடு செய்திருக்கிருர் எனத் தெரிகிறது.

## "தெய்வத் தமிழுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை"

—திரு. சு. நடேசபிள்ளை

— நமது கொழும்பு நிருபர் —

தெய்வத்தமிழுக்குப் பிறரால் எவ்வித ஆபத்தும் வந்துவிட முடியாது. ஆனல் தமிழராகிய நாம் தமிழையும் தமிழ்ப் பண்பினையும் மறவாமல் பேண வேண்டும். அதுவே முக்கியம் என்ற கருத்துப்பட திரு. சு. நடேசபிள்ளை, கொழும்பிலே அவருக்குப் பல தமிழன்பர்களால் அளிக்கப்பட்ட ஒரு விருந்துபசாரக் கூட்டத்தில் பேசுகையில் அர்த்த புஷ்டியுடன் கூறினர்.

சென்ற பல்கலைக்கழகத்தின் ஆதரவில் 'திருவள்ளுவர்காலம்' பற்றி அவர் நிகழ்த்திய 3 விரிவுரைகளையும் கேட்க சென்னை செனட் சபை மண்டபம் தாங்காமல் கூட்டம்கூடியிருந்ததாம். ஹைகோர்ட் நீதிபதிகள் உள்ளிட்டு பல பிரபல தமிழ் அறிஞர்களும், அன்பர்களும் அப்பிரசங்கத்தை ஆவலுடன்வந்து கேட்டனர். தமிழில் இல்லாத பிரசங்கங்களுக்கு சென்னைப் பல்கலைக்கழகம் ஒழுங்கு செய்தது இதுவே முதல்தடவை. இப்பிரசங்கங்களை சீக்கிரத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்க பல்கலைக் கழகம் ஒழுங்கு செய்துள்ளதாக அறிகிறேன்.

### இசை அரசு

இசை அரசு தண்டபாணி தேசிகர், பல வருடங்களுக்குப் பிறகு ஈழநாட்டுக்கு வந்து, கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இன்னிசை விருந்தளித்தார். ஏராளமான மக்கள் ஆவலுடன் கூடி அவரது இன்னிசையைக் கேட்டு இன்புற்றனர்.

பத்து நாட்களுக்கு முன்பாகவே அவர் இலங்கை வந்திருக்கவேண்டும். ஆனல் பாஸ்போட் தயக்கங்கள் காரணமாக அது பின்போடப்பட்டது. அவர் மட்டுமன்றி, என்.எஸ்.கே. மதுரம் நாடகக் கோஷ்டியினரின் வருகையும் இவ்விதமே தடைபட்டது.

அண்மையிலுள்ள இலங்கை, இந்தியா இவ்விரு நாடுகளின் கலாசார உறவுகள் பலப்பட வேண்டுமாயின், இரு தேச கலைஞர்களும் வீண் சங்கடங்களின்றித் தாரளமாகப்பிரயாணம் செய்ய இரு அரசாங்கங்களும் விசேஷ வசதியைச் செய்துகொடுக்கவேண்டுமென்பது பொதுவாகக் கலாபிமானிகளின் விருப்பமாகும்.

### "வாட்ச் அன் வார்டு"

ஜனப்பிரதிநிதி சபைத் தலைவர் இல்லாமல் பாதுகாப்பு திருத்த மசோதா விவாதத்தைத் திடீரென முடித்ததையும், பின்னர் பொலிஸார் சபையில் புகுந்து எடுத்த நடவடிக்கைகளையும் கண்டித்து, தலைவர்மீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்றது. இது எதிர்பார்க்கப்பட்டதே.

ஆனல் சபைக்கு எக்காரணம் பற்றியும் பொலிசார் புகுந்து மெம்பர்களைப் பலாத்காரமாக அகற்றுவது சபையின் கௌரவத்துக்கு உகந்ததல்ல. பழைய டில்லி அசம்பிளியிலே, திரு வி. ஜே. பட்டேல் தலைவராக இருந்தபோது, இதுபற்றி ஒரு நல்ல ஏற்பாடு செய்தார். "வாட்ச் அன் வார்டு" என்ற காவல் பாதுகாப்புப் படையை அவர் தமது தலைமையில் அமைத்து, டில்லி சட்ட சபைக்கு உள்ளும் வெளியும் பாதுகாக்கும் பொறுப்பை அதனிடம் ஒப்புவித்தார். பொலிசுக்கு உள்ள அதிகாரமனைத்தும் அப்படைக்கும் அளிக்கப்பட்டது. எக்காரணம் பற்றியும் பொலிசார் சபைக்கு உள்ளே நுழையக் கூடாதென்று ஒழுங்கு செய்தார். அவ்விதமே இங்கும் பார்லிமென்ட் சபைத் தலைவரின் கீழ் அவ்வித விசேஷ ஒழுங்கைச் செய்வது, சபையின் கௌரவத்துக்கும் ஒழுங்கு முறையைப் பாதுகாக்கவும் வழி செய்யும்.

## தொகுதிகளின் எல்லைகள் கட்சிகளின் பரிசீலனை

### கிழக்கு மாகாணத்தில் புதிய சிக்கல்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

தொகுதி நிர்ணய விசாரணைச்சபைக்குச் சமர்ப்பிப்பதற்கான அறிக்கைகளைத் தயாரிப்பதில் இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் மிகுந்த சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருக்கின்றன. தமிழ்ப் பகுதிகளின் தொகுதிப் பிரிவினை சம்பந்தமான அவற்றின் திட்டவட்டமான கருத்துக்கள் இன்னும் சில தினங்களில் வெளியாகலாம்.

தொகுதிகளின் எல்லைகளை வகுப்பது, அவற்றின் தொகையைப் பெருக்குவது ஆகியவை பற்றிப் பலதரப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்து வருவதாயும் குறிப்பிட்ட ஒரு சில கட்சிகள் இது விஷயமாக மிகவும் நுணுக்கமான பரிசீலனையில் ஈடுபட்டிருப்பதாயும் தெரிகிறது.

### கிழக்கு மாகாணம்

வடபகுதியைப் பொறுத்த வரை மட்டுமல்ல கிழக்கு மாகாணமே இந்தச் சிக்கல்களுக்கெல்லாம் காரணமாயிருந்து வருகிறது. அங்கு சில முஸ்லிம் பிரமுகர்கள் கிளப்பிவரும் புதிய பிரச்சனைகளுக்குத் தகுந்த முடிவைத் தேடிக்கொள்வது சம்பந்தப்பட்ட அரசியற் கட்சிகளுக்குத் தலையிடியைக் கொடுத்துள்ளதாம். கிழக்கு மாகாணத்தில் தொகுதி நிர்ணயம் பற்றிய கருத்து மும்முனைகளிற் சென்று கொண்டிருக்கிறது. புதிய சிங்களக் குடியேற்றங்களைப் பக்க பலமாக

(9-ம் பக்கம் பார்க்க)

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்

**BRIDGESTONE TYRES**




**DISTRIBUTORS**
**TUCKERS AUTODROME**

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

ஏக விநியோகஸ்தர்கள் :

**ஓட்டோஸ் லிமிடெட்**

யாழ்ப்பாணம்

போன் : 496 தந்தி : "ஓட்டோஸ்"

**நிருபர்கள் தேவை**

மட்டக்களப்பு,கண்டி ஆகிய இடங்களிலிருந்து செய்திக் கடிதங்கள் அனுப்பக்கூடிய பொறுப்பு வாய்ந்த நிருபர்கள் தேவை. தபாற்பெட்டி எண்:49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு மனுச் செய்க.



உங்கள் கார் பற்றறிகளைத் திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்றிங் முதலிய வேலைகளுக்கும் உகந்த இடம்




**சுந்தரம்ஸ்**

**பற்றறி சேவிஸ்**

402, கே. கே. எஸ். வீதி : : யாழ்ப்பாணம்



உங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

**இரும்புச் சாமான்களுக்கு**

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ் வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர் : ஆ. சண்முகராசா

**222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

போன்: 697







ஆசிரியருக்குக் கடிதங்கள்

# ஆசிரியர்களும் வேலை நிறுத்தமும்

பள்ளிக்கூட ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்வது உகந்ததா? நேரடி நடவடிக்கைகளில் அவர்கள் இறங்குவது ஏற்றதா? என்ற கேள்விகள் மக்களிடையே இன்று எழுந்துள்ளன. ஆசிரியர்களே நாட்டின் எதிர்காலப் பிரஜைகளைப் பக்குவம் செய்து வருகின்றனர். அவர்களைப் பாதிக்கும் இன்னல்களை அரசினர் தீர்த்துவைத்தால்தான் அவர்கள் நிம்மதியுடன் சேவை செய்யமுடியும். இப்போது நாடுள்ள நிலைமையில் ஆசிரியர்களைப் பல பிரச்சினைகள் எதிர்நோக்கியுள்ளன. அவற்றைத் தீர்க்கவேண்டுமாயின் ஆசிரியர்கள் நேரடி நடவடிக்கைகளைக் கையாளவேண்டியவர்களாகின்றனர். அழுத பிள்ளைதான் பால்குடிக்குமென்பது ஆன்றோர் மொழியாகும்.

வட்டுக்கோட்டை, **ஆசிரியன்.**

## சேர் பீரிஸ் உபதேசம்

இலங்கையிற் சனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டு வருகின்றது எனவும் அதனைப் பேணிக் காக்க வேண்டியது மக்களின் முக்கிய பணியாகுமெனவும் காலஞ்சென்ற தேசபிதா ஸ்ரீ சேனநாயக்காவின் நினைவு விழாவுக்குத் தலைமை வகித்த முன்னாள் சபாநாயகர் சேர் அல்பேட் பீரிஸ் கூறியிருக்கின்றார். 'ஸ்ரீ கோதா' வில் யு. என். பி. யின் ஆதரவில் இவ்விழா நடைபெற்றிருக்கின்றது என்பதை எவரும் அறிவர். சகல மக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழ்ந்து சனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமென முன்னாள் சபாநாயகர் விரும்புகின்றார். இது உண்மையானால், அவர் யு. என். பி. கட்சியின் தூண்களுக்கும் ஒற்றுமையின் அவசியத்தை உபதேசித்தேயாக வேண்டும். யு. என். பி. களனியில் மாநாடு கூடிச் சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக வேண்டுமெனத் தீர்மானித்தது. இத்தீர்மானம் நாட்டின் ஒற்றுமைக்கு உலைவைத்து விட்டதென்பதை சேர் அல்பேட் பீரிஸ் அறியாதிருப்பது விந்தையேயாகும்.

கொழும்பு 6, **கனகசுந்தரன்.**

## காசநோய் தடுப்புச் சங்கம் யாழ்ப்பாணத்துக்குப் பாராட்டு

காசநோயைத் தடை செய்யும் பணியில் யாழ்ப்பாணம் முன்னணியில் நின்று உழைத்து வருகின்றதெனக் கொழும்பிலுள்ள இலங்கைத் தேசிய காசநோய் தடுப்புச் சங்கத்தின் தலைவர் டக்டர் ஜே. எச். எப். ஜயசூரியா யாழ்ப்பாணத்தில் உள்ள கிளைச் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற் பேசுகையிற் குறிப்பிட்டார். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமை வகித்தார். இக்கூட்டம் ஜுபிலி சுகாதாரநிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

## முல்லைத்தீவு வட்டாரப் பாடசாலைகளின் கலை விழா

இவ்விழா 14-3-59 சனிக்கிழமை பிற்பகல் 6- மணிக்கு முல்லைத்தீவுச் சைவவித்தியாசாலை மண்டபத்தில் வடமாகாணப் பகுதி வித்தியாதிகாரி திரு. ரீ. ஜே. இம்மானுவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற் பள்ளிக்கூடங்கள் பல பங்குபற்றின.

நடனம், கும்மி, தமிழ்த் தாய் வணக்கம், ஆகிய நிகழ்ச்சிகள் சிறந்து விளங்கின.

## அருள்நெறி மாநாடு

வருகிற ஏப்ரல் மாதம் 4, 5, 6, திகதிகளில் திருக்கோணமலையில் 'அருள்நெறி மாநாடு' நடாத்த திருக்கோணமலை இளைஞர் அருள்நெறி மன்றம் துரிதமாக ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றது. இம்மகாநாட்டினைத் திருவண்ணாமலை ஆதீன சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆரம்பித்துவைத்து மூன்று தினங்களும் அருளுரையாற்றுவார்கள். அறிஞர்கள் பலர் விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

## தொழிலாளர் சபதம்

திருக்கோணமலை நகரசுத்தித் தொழிலாளர் சங்கத் தொண்டர் படையினர் அண்மையில் கூடிக் கள் அருந்துவதை அடியோடு நிறுத்துவதெனச் சபதஞ் செய்தனர். அவ்வமயம் தொண்டர் இ. சண்முகராசா, ஆசிரியர் மைக்கல் ஆகியோர் அறிவுரை கூறினர்.

## பரமஹம்சர் விழா

சென்ற புதன்கிழமை காலை இந்துக் கல்லூரியில் அதிபர் எஸ். அம்பலவாணர் தலைமையில் பரமஹம்சர் விழா கொண்டாடப்பட்டது. கூட்டு வழிபாட்டின் பின்னர் ஆசிரியை திருமதி. சாமித்தம்பி அவர்கள் பரமஹம்சர் நினைவுப்பாடல் பாடினார். பண்டிதர் வடிவேல் அத்தகைய தினத்தில் அன்னாரைப்பற்றி அறிவதோடு நின்றுவிடாது அவரைப்போல் வாழப் பழகுதல்வேண்டும் என்றார். அடுத்துப் பேசிய ஆசிரியர் பெ. பொ. சிவசேகரனார் தூய வாழ்வின் அவசியத்தை வற்புறுத்தினார்.


## வரி விளம்பரம்

### தேவை

நகரசபை எல்லைக்குள் ஒரு வீடு தேவை. த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.

சிறந்த முறையில் "ரைப்பிறைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ்அன்ரூவை ஆலோசியுங்கள்—4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்துப் படிப்பதற்கு, யோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

திறமையுள்ள பைன்டர்கள் (Binders) தேவை. கலாநிலைய பதிப்பகம், P. O. Box 49, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

கொழும்புத்துறையில் மடத்திற்கருகில் வீடு வாடகைக்கு விடப்படும். த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானல் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள நகைகளுக்கு, து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி,யாழ்ப்பாணம்.

குறித்த தவணையில் விரும்பிய டிசைனில் ஆடர் நகைகள் செய்வதற்கு து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி,யாழ்ப்பாணம்.

புதிய டிசையின் நெக்கிலஸ் முதலியன வேண்டுமானல், து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



★ நகைகளுக்கும்
★ வைரங்களுக்கும்



**நகைமாளிகை**

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்

65, கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்

# ஆசிரியர்கள்- நிர்வாகிகள்- அரசியல்வாதிகள்

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தாரின் "ஸிலோன் டீச்சர்" எனும் சஞ்சிகையின் இம்மாத இதழில் இரு தலையங்கங்கள் பிரசுரமாகியுள்ளன. ஒன்று, "ஆசிரியர்கள், நிர்வாகிகள், அரசியல் வாதிகள்" என்ற தலைப்புடனும், மற்றொன்று "ஒழுங்குமுறை" என்பது பற்றியும் எழுதியுள்ளனர்.

இன்று நாடெங்கும் ஆசிரியர் - நிர்வாகிகள் பிரச்சனை அதிகமாகி, இருப்பதால் ஆசிரியர்களின் கருத்துக்களை எடுத்து விளக்கும் இத்தலையங்கங்களை இங்கு மொழிபெயர்த்து வெளியிடுகிறோம்.

—ஆசிரியர்

ஆசிரியர்கள், நிர்வாகிகள்' அரசியல் வாதிகள் என்ற தலைப்பில் வெளியான தலையங்கம் வருமாறு:-

ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்வது பற்றியும், விசேஷ பதவிகள் அளிப்பது குறித்தும் கல்வி அமைச்சர் சமீபத்தில் சில திருத்தப்பட்ட விதிமுறைகளை வெளியிட்டார். அது ஆசிரியர்களின் முக்கியமான மகா சாசன பத்திரமென்று ஆசிரியர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அ. இ. ஆசிரியர் சங்கத்தார் இவ்விஷயமாக எடுத்த முயற்சியையும், அமைச்சரின் அனுதாபமான மனப்பான்மையையும் ஆசிரியர்கள் நன்றியுடன் வரவேற்றனர்.

ஆனல் இந்த விதிகள் எவ்விதமாக அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்பதைப் பொறுத்தே அதிகமிருக்கும். மானேஜர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் தகராறுகளில், நீதி நியாயம் ஒன்றையே கவனிக்க வேண்டுமேயன்றி, சம்பந்தப்பட்டவரின் செல்வாக்கு அந்தஸ்து இவற்றைவைத்து தீர்ப்பளிக்கக் கூடாது. இவ்விதம் எப்போதும் இராதென்றே அஞ்சுகிறோம்.

மானேஜர்கள் தேவர்கள் என்றும் அவர்கள் கருத்து மிகப் புனிதமானதென்றும் கொண்டுள்ள கருத்து இன்னும் நீங்கவில்லை. மானேஜர்களிலும், பிரின்ஸிபால்மாரிலும் சிலர், இலாகா அதிகாரிகளை நேரில் கண்டு அவர்களைத் தம் வசப்படுத்த முயலும் அளவுக்கும் செல்லுவதாகத் தெரிகிறது. அவர்கள் இதில் வெற்றிபெற்றதாக நாம் கூறவில்லை, ஆனல் முயற்சிகள் நடந்துள்ளன.

இவ்வித விரும்பத்தகாத நிலையில் அரசியல்வாதி தலையிடுகின்றார். எம். பியோ அல்லது செனேட்டரோ மானேஜர் சார்பாகத் தம் செல்வாக்கைப் பயன்படுத்துகின்றார். இவ்வித நிலையில் ஆசிரியர் நிலை மிகவும் சங்கடமாகி, யூனியன் மூலம் கிடைத்த உரிமைகளும் வீணாவதும் சாத்தியம்.

சத்தியம், ஒழுங்கு, நீதிஎன்ற பெயரால் சம்பந்தப்பட்ட அனைவரும் நேர்மையாக நடக்கவேண்டுமென்று வேண்டுகிறோம். நாங்கள் பொறுப்புடன் நடந்துகொள்வோம். இலாகா அதிகாரிகளும் எவ்வித சூழ்ச்சிகளுக்கும், தலையீடுகளுக்கும் உள்ளாகாமல் தங்கள் புனிதமான பொறுப்பை சரிவர நிறைவேற்றவேண்டும். செனேட்டர்கள், எம். பிக்களும் எங்கள் இலாகாவில் தலையிட வேண்டாம். அரசியல் நோய்களை அதில் புகுத்தவேண்டாம்.

ஆசிரியர்களுக்கும் இவ்விஷயமாக ஒரு வார்த்தை. மானேஜருக்கும் ஒரு மெம்பருக்கும் தகராறு ஏற்படும்போது, யூனியனின் போக்கு சரியாக இருக்குமாயின் அதையே ஆசிரியர்கள் ஆதரிக்க வேண்டும். தவருயின் அதைத் திருத்த முயலவேண்டும். தவறு செய்யும் மானேஜரை அடிமை போல ஆதரிப்பது வெட்கமற்றதும் தொழில் பண்புக்கு மாருனதுமாகும். நாம் அவ்வித மனப்பான்மை காட்டினல், எதிர்காலத் தவறுகளை எதிர்க்கும்படி, இன்றுள்ள குழந்தைகளுக்கு நாம் எவ்விதம் பயிற்றி வழி காட்டமுடியும்?

புனிதமான ஒரு தொழிலைச் சேர்ந்த ஆசிரியர்மார்கள், வகுப்பு, அரசியல் முதலிய பற்றுகளையும் சுயநலன்களையும் மறந்து, தொழிலின் மேலான நன்மையையேபேண வேண்டுமென்பதை கூறத்தேவையில்லை. ஆசிரியர்களாகிய நாம் இவ்விஷயத்தில் வழிகாட்ட வேண்டும். இலாகா அதிகாரிகள், மானேஜர்கள், அரசியல் வாதிகள், ஆசிரியர்கள் இவர்களுக்கு இவ்வித வேண்டுகோள் விடுக்க வேண்டிய தேவை இராதென்றே நம்புகிறோம்.

## ஒழுங்குமுறை

"ஒழுங்குமுறை" என்ற தலைப்பில்அதே சஞ்சிகை எழுதுவது:-

ஒழுங்கு பற்றி பல கட்டுரைகள் வெளியிட்டோம். ஒழுங்குமுறையை யாவரும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இப்போது மிகவும் அதிகமாகும். நாளுக்கு நாள் நிலைமை மோசமாவதை பார்க்கிறோம். ஆசிரியர் பொறுப்பு சுலபமானதல்ல. வளரும் குழந்தைகளுக்கு,மேலான முன் மாதிரிகாட்டி, ஊக்கமளிக்க வேண்டியது அவசியம். நமது பொது வாழ்க்கையிலே ஒழுக்கம் வேகமாகக் குன்றி வருகின்றது. மேலிடத்திலே பலபல அரசியல் தலைவர்களும் பார்லிமென்ட் நெறிகளுக்கு மாருக நடப்பதுடன், ஜனநாயக அரசியலிலே தங்கள் பதவிகளை சுயநலத்துக்காகவும் பயன்படுத்தும் கண்ருவியைப் பார்க்கின்றோம். அன்ருடம் பலரது பார்வையிலுமுள்ள அவர்களிடத்திலும் ஒழுங்கீனமும், நெறி தவறல்களுமிருப்பின் வளரும் குழந்தைகளுக்கு அது மிகவும் தீங்காகும்.

லஞ்சம், லாவணம், முதலிய பலபல ஊழல்கள் மலிந்து நமது பொது வாழ்வையே சீர் குலைத்துவருகின்றன. சரியான புள்ளிகளுடன் தொடர்புகொண்டவர்கள், பகிரங்கமாகத் தவறுகள் இழைக்கிருர்கள். கேட்பாரில்லை. மக்களில் சில சார்பினரிடையே செல்வாக்குள்ள சில தலைவர்கள் வகுப்புவாத, சமய வெறிகளையும் விரோதங்களையும் கிளப்பிவிடவும் தயங்குவதில்லை. ஜனநாயகம் என்ற பெயரில், மெஜாரிட்டி எனும் பூதம், சிறிய 'மைனரிட்டி' களை நசுக்கி ஒழிக்கவும் கூடியதாகவுள்ளது. தொழிற் சங்க இயக்கத்தால் நன்மைகளிருப்பினும், தொழிலாளர் சமூகத்துக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் அது வற்புறுத்தாமல் அவர்களது உரிமைகளைப் பற்றியே தூண்டிவருகின்றது. இவ்வித முன் மாதிரியைக் காட்டினல், இளைஞர்களும் இயற்கையாக இதைப் பின் தொடருவது இயற்கை.

இவ்வித நிலையிலே ஆசிரியர்களின் கடமை இரட்டிப்பு சங்கடமாகிறது. தனது மாணவர்களிடையே ஒழுங்கும் பொறுப்பு உணர்ச்சியும் ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு மேலான முன்மாதிரியான பல திசைகளிலிருந்தும் பரவும் தீய இயக்கங்கள் அவர்களை பாதியாவண்ணம் பாதுகாக்கவும் வேண்டும். பெரியவர்கள் தங்கள் நடத்தை மூலம் மாணவர்களுக்கு ஒழுங்கைப்பற்றிய கல்விபுகட்டுகின்ருர்கள். இதை உணர்ந்து நடக்க வேண்டும். பொது வாழ்விலே உள்ள ஒரு சிலரை முன்மாதிரியாக எடுத்துக்கூறி அவர்களைப் பின் பற்றுமாறு மாணவர்களுக்கு நாம் வகுப்பில் சொல்லக்கூடியதாக இருக்கவேண்டும். அவ்விதம் செய்தால் ஒழுங்குமுறைக்கான கல்வி போதிப்பது சுலபமாகும். ஆனல் அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பது மிகமிக துர்லபமாகி வருகின்றதென்ருல் அது மிகையாகுமா? பொது வாழ்விலே ஈடுபட்ட ஆண்களும் பெண்களும், இவ் விஷயமாக எங்களுடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம். எங்கள் முயற்சியை வீணாக்க வேண்டாம். பெரியவர்கள் தாங்கள் வாழ்ந்து காட்டுவதன் மூலமே, மாணவர்களிடையே ஒழுங்கும் நற் பண்பும் வளரமுடியும்.

---

## இலங்கை அபிவிருத்தித்திட்டம்: 1

# வலவை கங்கை பயன்தரு திட்டம்

வ. மகாதேவன்

இலங்கையின் பெரிய நதிகளுள் ஒன்ருகிய வலவை கங்கை 83 மைல் நீளமுடையது. இலங்கையின் உயர்ந்த பீடபூமியாகிய ஹோட்டன் சமவெளிகளில் (Horton Plains) உற்பத்தியாகித் தென் கரையோரத்திலிருக்கும் அம்பலாங்தோட்டைக்குச் சமீபமாக (அம்பலாங்தோட்டைக்குப் 10 மைல் மேற்கே) கடலை அடைகின்றது. அப்புத்தலை மலையிடை வெளி (Haputale Gap) இந்நதியின் நீர்ப்பிரி மேட்டின் பின்னணி நிலப்பகுதியாக இருக்கின்றது.

### பொருளாதார நன்மை

இலங்கையின் இரண்டாவது பல பயன்தரு திட்டத்தை இந்நதிப் பள்ளத்தாக்கில் அமைக்க வேண்டும் என இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருந்தது. 1951 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கைக்கு வந்த உலக வங்கியின் தூதுக் குழுவினர் தமது சிபார்சுகளில் "வலவை கங்கை பல பயன்தரு திட்டத்தை நிறைவேற்றுவதனல் ஏற்படும் பொருளாதார நன்மைகளைக் குறித்து நாம் பெரிதும் சந்தேகிக்கின்ருேம்" என்று கூறி இத்திட்டத்தை நிராகரித்தனர். ஆனல் இலங்கை அரசாங்கம் இம்முடிபை ஏற்றுக்கொள்ளாமல் 1954 கலிபோணியா எஞ்சினியரிங் கொம்பனியிலிருந்து ஒருதூதுக் குழுவினரை வரவழைத்து இத்திட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமானதா என ஆராயுமாறு வேண்டினர். இந்த அமெரிக்கக் கொம்பனியின் குழுவினர் தமது அறிக்கையில் இத்திட்டத்தை நிறைவேற்றுதல் சாத்தியமானது என்றும் இதனல் குறிப்பிடத்தக்க அளவு சமூக பொருளாதார நன்மைகளை இலங்கை மக்கள் அடைவர் என்றும் அறிவுறுத்தினர்.

### 28 கோடி ரூபாய் செலவு

இந்நதிவழியாக ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 11,50,000 ஏக்கர் கன அடி (Acre-feet) நீர் கடலை அடைகின்றது என்றும், இந்நீரைச் சேமித்தால் ஏறத்தாழ 2,00,000 ஏக்கர் பிரதேசத்தில் நெல்விளைவிக்கலாம் என்றும், இலங்கை நீர்ப்பாசனப் பகுதியினர் மதிப்பிட்டனர். இத்துடன் நீர் மின்சார சக்தியையும் உருவாக்கலாம் எனக் கருதினர்.

அப்பொழுது(24-1-1956) இலங்கை முதலமைச்சராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல இத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். இத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு எட்டுவருடகாலம் செல்லும் என்றும் 22 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

### மாபெரும் அணை

நதியின் கழிமுகத்திலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள எம்பிலிப்பிட்டி (Embilipitiya) என்ற கிராமத்தில் இந்நதியின் குறுக்கே ஒரு பெரிய அணை கட்டப்படுகின்றது. இவ்விடம் பெல்மதுளை — அம்பலாங்தோட்டை வீதியில் 104 மைல் கல் நாட்டப்பட்டுள்ள பிரதேசமாகும். கட்டப்படும் அணை 17,000 அடி நீளமானதாகவும் 100 அடி உயரமானதாகவும் இருக்கும். இவ்வணையின் நடுப்பாகத்தில் 1000 அடி நீளமான 120 அடி உயரமான பாகம் கொங்கிறீற்ருல் கட்டப்பட்டு வெள்ள நீர் பாய்வதற்கு ஒன்பது கதவுள்ள மதகுகளும் அமைக்கப்படும்.

நதியின் வலது கரையில் கொங்கிறீற் அணைக்கு வலது பக்கத்தில் நீர்மின்சார சக்தி நிலையம் அமைக்கப் பெறும். இதன்மூலம் 6000 குதிரைவேக மின்சாரசக்தி உருவாக்கலாம். இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்குக் குழாய்மூலம் குடிநீர் வழங்கலாம். சூழ்ந்துள்ள சில பட்டினங்களுக்கும் குடிநீர் வினியோகிக்க முடியும் எனக் கருதப்படுகின்றது.

### நீர்ப்பாசன வசதி

இந்நீர்த் தேக்கத்தில் 2,50,000 ஏக்கர் கன அடி நீர் கொள்ளும். இதன் மேற்பாகம் 10,000 ஏக்கர் விஸ்தீரணம் உடையதாக இருக்கும். வலது பக்கத்திலமைக்கப்பட இருக்கும் கால்வாய்மூலம் 48,500 ஏக்கர் பிரதேசத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இதில் 28,500 ஏக்கர் நிலத்தில் இருபோக நெற்சாகுபடி செய்யலாம். 5000 ஏக்கர் நிலத்தில் காலபோக நெற்செய்கையும் சிறுபோகத்தில் தோட்டச் செய்கையும் மேற்கொள்ளலாம். தங்காலை, பெலியாத்தை முதலிய இடங்களில் வசிக்கும் மக்கள் இதனல் பயனடைவர். எம்பிலிப் பிட்டிக்கு மேலுள்ள மலை நிலங்களில் 15,000 ஏக்கர் பிரதேசமும் விருத்திசெய்யப்படும்.

### கால்வாய் மூலம்

இடது பக்கத்தில் அமைக்கப்படும் கால்வாய்மூலம் 18,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். மலைநிலத்தில் 5000 ஏக்கர் விருத்திசெய்யப்படும். இத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் இப்பிரதேசத்தில் ஏறக்குறைய 15,000 ஏக்கர் நெல்வயல்களுக்கு இரண்டு போகச் சாகுபடிக்கு நீர்ப்பாசன வசதியிருந்தது. இத் திட்டம் பூர்த்திசெய்யப்பட்ட பின்பும் இந்த வசதி தொடர்ந்து கிடைத்துவரும்.

வலவை கங்கையின் கழிமுகத்திலிருந்து ஏறத்தாழ 12 மைல் தூரத்திலிருக்கும் லியநகந்தோட்டை (Liyanagantota) என்ற இடத்தில் ஒரு அணைக்கட்டு (Anicut) அமைக்கப்பட்டு இருபக்கமும் கால்வாய்கள் மூலம் நீர்பாய்ச்சப்படுகின்றது. இடதுபக்கக் கால்வாய் ரிடியகம ஏரிக்கு (Ridyagama Tank) நீர்பாய்ச்சுகின்றது. இவ்வேரியிலிருந்து ஏறக்குறைய 5,600 ஏக்கர் நிலத்திற்குக் கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசன வசதி இருக்கின்றது. ஏறக்குறைய 17 மைல் நீளமான வலதுபக்கக் கால்வாய்மூலம் ஏறக்குறைய 6,200 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி இருக்கின்றது.

வலவகங்கை பல பயன்தரு திட்டம் பூர்த்தியானதும் "லியநகந்தோட்டை நீர்ப்பாசனத் திட்டம்" பாதிக்கப்படாமல் இருந்துவருமாம்.

வலவகங்கைத் திட்டம் பூர்த்தியானதும் இப்பிரதேசத்தில் வருடமொன்றுக்கு 24,00,000 புசல் நெல் விளையும் என்றும், 22,750 குடும்பங்கள் குடியேறுவதற்கு வசதிகள் கிடைக்கும் என்றும் தெரிகின்றது. 1964 இல் இத்திட்டம் பூர்த்தியாகலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

வெடித்துக் குருத்து விட்ட தென்னம்பாளை அனில் அரிப்பதனுல் வளர்ச்சியிழந்து உதிர்வதுபோல் நேற்று விஸ்வலிங்கமாக விளங்கியவன் இன்று பிணமாகிச் சிதையில் வெந்து கொண்டிருந்தான்.

வேதனை அலைவீசத் திரும்பிப் பார்த்தேன். சூழ்ந்து வரும் காரிருளை விழுங்க முயலும் பயங்கரப் பூதத்தின் நாப்போல் கொழுந்து விட்டது சிதை. ஏற்கனவே எரிந்த சாம்பல் குவியல்கள் சில, அவ்வொளியிலே தெரிந்தன. இச்சிதையும் நாளை அவற்றில் ஒன்று!

"வாழ்வு அநித்தியம். எப்படி முயன்ருலும் விதியின் வேகத்தை நிறுத்துவது துர்லபம்." என்றெல்லாம் வேதாந்தக் கருத்துக்களைக் கரைத்துக் குடித்திருந்தாலும்; சமயத்துக்குக் கைகொடுக்கச் சக்தியற்றவைதாம் அவை.

"முடிசார்ந்த மன்னரும் மற்று
முள்ளோரும் முடிவில் ஒரு
பிடிசாம்பர் ஆவர்"

இவ் வாக்குக்கு அவன் ஒரு நிதர்சன உண்மை. மன்னனுக முடிசூடா விட்டாலும் வேண்டிய வசதிகளைப் பெற்ற குடும்பத்திற் பிறந்தவன் அவன்.

* * *

எட்டிச் செல்லும் கூட்டத்துடன் கலந்து கொண்டேன்.

"பாவம் இந்த வயதில் இப்படி ஆகக்கூடாது."

வயது இருபத்தைந்துக்கு மேற்படாது. வாழ வேண்டிய வயதிற் சாவு."

"தம்பையா பணத்தை அள்ளிக் கரைத்தார். அலையாத இடம் கிடையாது. கொடுத்து வைத்தது அவ்வளவுதான்."

"அவனவன் தனது கர்மாந்தர பலனை அனுபவிக்கத் தானே வேண்டும்."

"நோய் என்ருல் அதுக்கு எல்லை கிடையாதா? ஒரு வருடத்துக்கு மேலாக ஆட்டிவைத்தது. அதுதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிருன்."

இந்த வேதாந்தம், அனுதாபம், ஊக்கம் அனைத்தையும் கவனிக்கின் விஸ்வலிங்கத்தின் மரணத்துக்குத் தற்கொலையே அடிப்படை என்பது புலனுகும்.

அவற்றில் விரவியுள்ள வைத்தியம், நோய் என்ற வார்த்தைகள் தீராத வியாதியில் வாடினுன் என்பதை விளக்குகின்றன. அதை உறுதிப் படுத்த அவன் எழுதிய கடிதம் இது:

அரசாங்க அதிகாரிகளுக்கு,

ஏறக் குறைய ஒரு வருட காலத்துக்கு மார்பிலும் வயிற்றிலும் தீராத வலியுறுத்தியது. எவ்வித வைத்தியத்திலும் குணமடையாததினுல் தற்கொலையை மேற்கொள்கிறேன்.

**விஸ்வலிங்கம்.**

விசாரணை தெளிவாகவும் உற்ருர் உறவினர் அனுதாபம் கொள்ளவும் இந்தக் கடிதம் அவசியம். இல்லாவிடில் செத்துத் தொலைந்த உடலைக் கீறிக் கிழித்து புரியாத மர்மத்தைக் காண முயலுவர்.

அவனுக்கு நோய் பிடித்தது; வைத்தியம் செய்தது; அனைத்துக்கும் சாட்சியம் உண்டு. ஆனல் அவனுக்கு இந் நோய் ஏற்படக் காரணம் எது? எவருக்குமே தெரியாது. ஆராய முற்படவுமில்லை.

ஒருவருடத்துக்கு முன் அவனை நோயாளி என்று கூற முடியுமா? சுருண்டசிகை, நிமிர்ந்த நாசி, புன்னகைதவழும் இதழ், எடுப்பான தோற்றம், பார்த்தவர்கள் ஆசை கொள்ளும் பருவம், இவைகளின் மொத்த அழகுப் பிம்பமே விஸ்வலிங்கம்.

சிறுகதை

# மர்மம்

— இ. நாகராஜன் —

இன்று நேற்றல்ல கிராமத்து ஆரம்ப பாடசாலையிலிருந்தே நானும் அவனும் ஒன்ருகப் படித்துக் கல்லூரி வரை சென்றவர்கள். இப்படிப்பட்ட இருவர்க்கிடையில் பரஸ்பரம் அந்தரங்கங்கள் பரிமாறப்படாமலிருக்குமா?

தொழிலுக்காக ஒன்றரை வருடத்துக்கு முன்பு கொழும்புக்கு வந்துவிட்டேன். தரிசனம் தடைப்பட்டாலும் எம் இதயங்கள் கடிதங்கள் மூலம் பேசிக்கொண்டன.

அக்கடிதங்களுட் சிலவற்றை திகதிக்கிரமமாக வரிசைப் படுத்தினுல் மற்றவர்களுக்குத் தெரியாத சில உண்மைகள் வெளியாகும்.

விஸ்வலிங்கம் ஓரளவு இலக்கியப் பரிச்சயமுடையவனென்பதை முதலிற் சொல்லிவிடுகிறேன். அவனது கடிதங்கள் சாதாரணமானவர்களின் கடிதம் போலன்றி ஓரளவு சுவை படச் சித்திரிக்கப்பட்டவை.

அவற்றை அப்படியே இங்கு தரின் கால விரயத்தையும் சில இடங்களில் விரசமான சுவையையும் தருமாகையால் வேண்டிய அளவைமட்டும் இங்கு தருகிறேன்.

* * *

நண்ப!

உனது பிரிவும் அதனுல் ஏற்பட்ட சோர்வும் இங்கு என்னைத் தனியாக இருக்கவிடவில்லை. நீண்டநாட்களாக எமது குடும்பத்துடன் தொடர்புற்றிருந்த பூர்வக்கிராமமான முல்லைவனத்துக்குச் சென்றவாரம் வண்டியேறினேன்.

நான் சென்றிருந்த சமயம் உச்சிவானில் கதிரவன் நின்று தனது ஆதிக்கத்தை உலகத்தவர் மீது பிரயோகித்தான்.

ஊரின் நடுவிலமைந்த சந்தியில் வண்டி என்னை இறக்கிவிட்டு, நீண்ட வீதியில் ஓடத் தொடங்கியது. நான் தேடி வந்த எங்கள் உறவினர் வீடு எத்திசையிலுளது என்பது எனக்குத் தெரியாது. அச் சமயத்தில் வீதியில் ஆட்கள் எவரையும் காணவில்லை. கால் போன திசையிற் சென்று கொண்டிருந்தேன்.

வீதியின் இருமருங்கும் வளர்ந்து செழித்த பெரு மரங்கள் என் தலையில் வெயில் பிடியாது குடை பிடித்தன. வீதி முடியும் இடத்திலேதான் ஊர்க் குளம். அங்கு யாராகினும் நிற்கின்ருர்களா என்று கண்கள் துழாவின.

இடுப்பிற் குடத்துடன் நான் நிற்கும் திசையாக ஒரு பெண் வந்தாள். வெயில் ஒளியில் அவளது இடுப்புக் குடம் தங்கக் கலசமாக மின்னியது. அசைந்து நடை பயிலும் அவளின் எதிரே நின்றேன். அவள் தயக்கத்துடன் நாணி நின்ருள்.

"கந்தையா என்பவரின் வீட்டிற்கு எவ்வழியாற் போக வேண்டும்."

"மேற்கே சிறிது தூரம் நடந்தால் ஓர் ஒழுங்கை குறுக்கிடும்; அதன் வழிச் சென்ருல் நான்காவது வீடு" என்று சொல்லி மின்னென மறைந்தாள்.

அவள் காட்டிய திசையில் நடந்து கொண்டிருந்தேன். குறிப்பிட்ட வீட்டின் கதவைத் திறந்துகொண்டு ஒரு பெண் நுழைந்தாள். அவள் யாருமில்லை; எனக்கு வழிகாட்டிய — நான் தேடிப் போகும் எனது உறவினரின் பெண்ணே தான்.

பட்டினத்துப் பெண்களின் குறும்பை ரசிக்க முடியாத எனக்கு அவளது பவ்வியமான நடத்தையும், குறும்பும் பிடித்தன. அன்றுவரை என் உணர்வில் கலக்க முடியாத ஒருவித பிடிப்பு முளையிட்டது.

சென்ற கடிதத்தில் குறிப்பிட்ட எனது உறவுப் பெண் பூவதி என்னவோ என்னிடம் அளவளாவவோ — அன்றிப் புதிய தத்துவத்தை வளர்க்கவோ முன்வரவில்லை. ஆனல் அமைதியும் — சந்துஷ்டியும் நிறைந்த அந்தப் பெண்ணை நோக்கி எனது உள்ளம் நொடிக்குநொடிமுன்னேறியது.

முல்லைவனத்தைவிட்டு நான்கு நாட்களில் திரும்பிவிட்டேன். ஆனல் அந்த நான்கு நாட்களும் எனது வாழ்வில் மறந்துபோக முடியாத நிகழ்ச்சிச் சித்திரங்களை உள்ளப் பாறையிற் செதுக்கிவிட்டிருந்தன.

கதைகளில் நாம் எத்தனையோ பாத்திரங்களைச் சந்திக்கிருேம். அவர்களுக்கு அநேக சிக்கல்களை உண்டாக்கிச் சுமுகமான முடிவைக் காட்டுகிருர்கள். எனது வாழ்விலும் பல சிக்கல்கள் பின்னப்பட்டு விட்டன.

எனது அண்ணு ஒருவர் மலாயாவில் உத்தியோகம் பார்த்தது உனக்கு ஞாபகமிருக்கும். அவர் சமீபத்திற்ருன் ஊர்வந்தார். வந்ததும் வராததுமாக அவருக்குப் பெண் தேட முல்லைக்காட்டுக்குக் குடும்பம் படையெடுத்துச் சென்றது. அதன் பலன்? நான் முன்பு குறிப்பிட்ட பூவதியே மணப் பெண்ணுகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். இதற்கு மேல் நான் இக் கடிதத்தில் விளக்க விரும்பவில்லை.

எனது நெஞ்சு தனது நிலையினின்று வழுவிச் சிறுகச்சிறுக வரண்ட வெளியை நோக்கிச் செல்கிறது.

கோழைத்தனமான செயல் என்று நீ குறை கூறுவாய். அண்ணுவுக்குப்பெண் ஒழுங்காகிவிட்டது. எனது இதயத்தை நான் எப்படிக் குடும்பத்தாருக்குத் திறந்துகாட்ட முடியும்? எனது நினைவுகளை வேதனை மணலால் பலவந்தமாக மூடி வருகிறேன். அதன் பலன், உடலிலே புதுவித நோய்கள் இடம் பெறுகின்றன. மார்பிலும், வயிற்றிலும் வலி.

நீ இங்கிருந்து செல்லும் போது சந்தித்த விஸ்வலிங்கத்தைத் திடீரென வந்தால் கண்டு கொள்ளமாட்டாய். ஒட்டிய எலும்புக் கூடு ஒன்று நடைப் பிணமாக இங்கு உலவுகிறது.

எனது நோயைத் தீர்க்க வீட்டார் எடுத்து வரும் பிரயாசைகள் அளப்பில. அவர்களது எண்ணத்துக்கு எற்றுண்டு தினம் ஒவ்வொரு புதிய வைத்தியர்களைச் சந்தித்து வருகிறேன். முக்கிய விஷயம்: அண்ணுவின் விவாகம் விரைவில் நடைபெறும்.

இதுவே நான் எழுதும் கடைசிக் கடிதமாக அமையப் போகிறது. இக்கடிதம் கிடைத்ததும் பறந்தோடி இங்கு வந்துவிடலாம் என்று மனப்பால் குடிக்காதே! நீ எவ்வளவு முயன்ருலும் எனது திட்டத்தை முறியடிக்க முடியாது. தோல்வியே கிடைக்கும்.

அண்ணு மனைவியுடன் வீட்டுக்கு வந்திருக்கிருர். அவர்கள் சிரஞ்சீவியாக வாழட்டும்!

இப்போதுதான் எனது வாதை சுடர்விடுகிறது. எந்த விதகுளிர்க்காற்றும் இதமாக்கி விடமுடியாது. அக்கினியின் சக்திக்கு வரைகட்ட முற்பட்டால் அது எனது இதயத்திலிருந்து ஆராய்ச்சி செய்யப்படவேண்டும்.

ஆகவே, என்னுள் ஒரு பீதி; சந்தர்ப்பம் என்ற மகுடி கேட்டதும் எனது உள்ளப் புற்றில் வாழும் உணர்ச்சி நாகம் படமெடுத்து ஆடிப் பண்பாட்டை மீறிக் கடித்துவிட்டால்! ...... நானே எனது குடும்பத்தின் பழிக்குக்காரண கர்த்தாவாகி விடுவேன்.

ஒருவீட்டில் வசித்து - எனது எண்ணத்தின் வீழ்ச்சிக்குக் காரண கர்த்தாவாகியவர்களுடன் நெருங்கிப் பழகமுடியுமா? இதனை ஆரம்பத்தில் நான் எப்படி வெளியிட்டிருக்க முடியும்? எனது மனப்பாங்கை வெளியிடக் கூடிய பக்குவம் எனக்கில்லை. அண்ணுவின் பிரச்சனைக்குக் குறுக்கே நின்றேன் என்று என்னை வெறுப்பர். அத்தோடு நான் மட்டும் அவளுக்காக ஏங்குகிறேனே தவிர, அவளது மனநிலை எதுவென என்னுற் புரிந்துகொள்ள முடியவில்லை, பண்பின் உறைவிடமான கிராமத்துப் பெண்ணிடம் 'கன்னு பின்னு' என்று எதையாவுதல் பேசமுடியுமா?

என்னதான் அறிவும், திருவும் அவளிடம் குடிகொண்டிருப்பினும் இன்றைய நடைமுறை உலகின் கோணற் சம்பிரதாயங்களை அவள் அறிந்திருக்கவில்லை. சைகைகள் நடிப்புகள் இவற்ருேடு ஒட்டி உணர்ச்சிப் பிரவாகத்தில் எற்றுண்டு செல்லும் பெலவீனம் அவளுக்குக் கிடையாது.

ஏன்? அவை இல்லையென்ற ஒரு காரணத்துக்காகத்தான் என் இதயம் அவளை விழைந்தது! அத்தகைய மாசு மறுவற்ற உள்ளத்தில் எனது வெறி ஒருவித சலனத்தை ஏற்படுத்திவிட்டால் தீராத உள் நோய் அவளுக்கு உண்டாகும்.

நண்ப!

ஆரம்பத்தில் அண்ணுவுக்கு அவளை நிச்சயம் செய்த அன்றே, நான் எனது மனதை வீட்டாருக்குத் திறந்து காட்டாத நியாயமும் இதுதான்! அவளை 'நான் விரும்புகிறேன்' என்று ஒரு வார்த்தை கூறியிருந்தாற்போதும் அந்த ஒலியின் சக்தி பூவதியின் பெற்ருேரை நிலை கலங்கச் செய்து இல்லாத கற்பனையைப் புகுத்தி—மகளிடம் ஏதோ புரியாத மர்மத்தைக் கண்டுபிடிக்கத் தூண்டியிருக்கும்.

ஒரு தலைப்பட்சமான அந்த உணர்வுப் போராட்டம் அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை, எனவே தான் அதை மறைத்தேன். அதனை மறைக்க மறைக்க எனது மார்பிலும்—வயிற்றிலும் சிறுகச் சிறுக நோய் புக இடம்கொடுத்தேன். அந்த நோய் தீர்வதற்கு எந்த வைத்தியமும் பயன்படாமற் செய்தது எனது நடிப்புத்தான். என்றைக்கு அண்ணுவுக்கு அவளை ஒழுங்கு செய்தார்களோ அன்று தொட்டுக் கவலை உறுத்தத் தொடங்கியது. இதனுல் பலவீனமடைந்த உடலில் ஏற்பட்டநோய் ஆரம்ப வைத்தியத்தில் தீர்ந்தது. ஆனல் இதய நோய் தீர்வ

[12-ம் பக்கம் பார்க்க]

இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கின்ஸ்

ஹெப்பற்ரூ - B12

(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:

புதிய மலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி

268, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

# ஏழ்மை எனும் சாபத்தீட்டை ஒழித்துக்கட்ட வழி செய்ய வேண்டும்

**"ஏழ்மை எனும் சாபத்தீட்டை ஒழித்துக்கட்டத்தான் நாம் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டியுள்ளது. ஏழ்மையைத் தீர்க்க அது ஒன்றுதான் வழி. இதற்கு ஒரு விரிவான அமைப்புத் திட்டப்படி நாம் நமது பொருளாதாரத் திட்டத்தைச் சமதர்ம முறையில் தயாரிக்க வேண்டும்" என்று அமைச்சர் பிலிப் குணவர்த்தன இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.**

நமக்கு இப்போது கிடைத்திருக்கும் அரசாங்க அமைப்பு முறையின் மூலம் ஒரு சமதர்மக்கொள்கையைக் காரியப்படுத்த முடியுமென என்னைப் பொறுத்தவரை நான் நம்பவில்லை. வேறு சில நாடுகளிலே வேறு சில தேவைகளுக்காக வேறு சமயங்களிலே, தயாரித்து உருவாக்கிய அரசியல் முறையே இதுவாகும். நமது தற்போதைய தேவைகளுக்கு இது கூடாதது: பயன்படாதது. நமது வாழ்க்கையிலே மிகச் சில அம்சங்களிலும் சமதர்மக் கொள்கையைப் பின்பற்ற அரசாங்கம் இரண்டொரு முயற்சிகளைச் செய்தாலும், இப்போதுள்ள ஆட்சிமுறை அந்த முயற்சிக்குத் தடையாக குறுக்கே நிற்கின்றது.

மேற்கே பார்லிமென்ட் ஆட்சி முறையை வளர்த்த நாடுகளும் கூட, அந்த முறையால் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமற் போயின். உடன் அதை அடியோடு மாற்றிக்கொள்ளத் தயங்குவதில்லை. ஆனால் இதே சமயம், இந்த ஆட்சி முறையைக் கண்டுபிடித்து உருவாக்காத நாமோ, இதை ஏதோ பெரிய வரப்பிரசாதமென்று கருதுகிறோம். தொடவும் கூடாதென்றும், நுணுக்கமாகப் பரிசீலனையும் செய்யப்படாதென்றும் மதிக்கிறோம். இதை நினைத்துப் பார்த்தால் எனக்குக் கசப்பான ஒரு வேடிக்கையாக இருக்கிறது.

## சிக்கலான முறை

இந்த முறையானது சிக்கலானது; அங்கியமானது; இதனால் பணச்செலவு அதிகமாகும்; பயனற்ற வீண் வேலைகளுக்கும், மலையான 'சிவப்பு நாடா' தவக்கங்களுக்கும் இடமளிப்பதாகும். இதை அடிப்படையாகக்கொண்டு இங்குச் சமதர்ம சமூக முறையை அமைக்க முடியாதென்று யாராவது சற்றுத் துணிச்சலுடன் சொல்லிவிட்டாலும் போதும் உடன் "சர்வாதிகாரி" என்ற கூச்சல் கிளம்பிவிடுவதைக் கேட்கிறோம்.

அமெரிக்க ஜனாதிபதி இருக்கிறாரே அவர் கையில் எவ்வளவு விசேஷ அதிகாரங்கள் உள்ளன? பிரான்ஸின் தலைவர் கையிலும், மாக்மிலன், அடினார் இவர்கள் வசமும் என்னென்ன அதிகாரங்கள் உள்ளன என்பதை அறிய நம்மில் யாரும் முயலுகின்றோமா? தலைமுறை தத்துவமாக ஆட்சிபுரியும் மகாராணியின் கையிலே எவ்வளவு அதிகாரம் உள்ளதென்பதையாவது நினைக்கிறோமா? ஜனநாயகம் என்று சொல்லப்படும் ஓர் அரசியல் அமைப்பிலே இப்படிப்பட்டவர்களுக்கு ஏன் இடம் அளிக்கப்பட்டுள்ளதென்பதற்கான காரணங்களே விளங்கவில்லை.

## அலங்கார வார்த்தைகள்

நம்மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த 'பார்லிமென்டரி' முறைதான், ஜனநாயகம் என்று நாம் நம் மனத்தைக் குழப்பிக் கொள்ளக் கூடாது. 'பார்லிமென்டரி ஜனநாயகம்' என்று பறை சாற்றப்படும் சொற்றொடர் வெறும் அலங்கார வார்த்தை, ஆபத்தானவை. ஏமாற்றுவதும்கூட. ஏனெனில் வேறு எவ்வித பார்லிமென்ட் முறையும், ஆட்சி அமைப்பும் ஜனநாயகமாகாதென்றும், இவ்வித பார்லிமென்ட் முறையில்லாவிடில் ஜனநாயகமே இருக்க முடியாதென்றும் கருதும்படி செய்கின்றது.

சமதர்மமென்பது புரட்சியாலே, ஒரு புதிய இனத்தினர் அதிகாரத்தைக் கைப்பற்றியதின்மீது அமைக்கப்படுவதாகும். இலங்கையில் நிலையோ வேறு. இங்கு சமதர்ம முறையை அமைக்க வேண்டுமென்று பொது மக்கள் தேர்தல் மூலம் அரசாங்கத்துக்குக் கட்டளை அளித்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் கட்டளையின்படி நடக்க இந்த அரசாங்கம் தயாராக இல்லை. இதனால் இலங்கையின் முந்திய ஆட்சியாளருக்கு ஏற்படக்கூடிய சமூக, பொருளாதார பாதகங்களை விளைவிக்க அரசாங்கம் துணியவில்லை.

இதன் பயன் என்ன? திரிசங்கு சுவர்க்கம் போன்ற நிலை ஏற்பட்டுள்ளது. நமது சமுதாயத்திலே சமதர்மத்தை ஆதரிப்பவர்கள், அது வளருவதற்கான சில நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருகின்றார்கள்.

## மூன்று உதாரணங்கள்

இதற்கு மூன்று உதாரணங்களைக் கூறலாம். பஸ் போக்குவரத்தை தேச உடைமை ஆக்கியது. துறைமுக கார்ப்பொரேஷன் அமைத்தது. நெற்காணிச் சட்டத்தை நிறைவேற்றியது.

பஸ்ஸுகளின் பழைய முதலாளிகள் முட்டுக்கட்டை போடாமல் தடுப்பதற்கான அதிகாரத்தையும் நமது அரசாங்க அமைப்பு அளிப்பதாக இல்லை. நஷ்டஈடு அளிப்பதாயினும்கூட படகுகள், லாஞ்சுகள் இவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு அவற்றின் சொந்தக்காரர்களைக் கட்டாயப்படுத்தவும் அதிகாரமில்லை. நெற்காணிச்சட்டத்தைச் சரிவர நடைமுறைக்குக் கொண்டு வருதற்கு அதிகாரமில்லை. ஏனெனில் சாகுபடிச் சபைகள் மீது அரசாங்கத்துக்கு எவ்விதமான அதிகாரமும் கிடையாது. பஸ் போக்குவரத்து ஊழியர்களும், துறைமுகத் தொழிலாளரும் உண்மையாகவும் உழைப்பார்கள் என்றே நம்பியிருக்கவேண்டியுள்ளது. விவசாயிகள் நெற்காணிச் சட்டத்தால் கிடைக்கக்கூடிய நன்மைகளை இவ்வாண்டில் இல்லாவிடினும் அடுத்த ஆண்டிலும் அதன் பிறகும் அதிகமாக உணர ஆரம்பிப்பார்கள். அதுவரை அவர்களும் ஒத்துழைப்பார்கள் என்றே நம்பியிருக்கவேண்டும்.

நமது அரசாங்க அமைப்பு அனைத்துமே அடியோடு மாற்றி அமைத்துப் புதுப்பித்து பல இடங்களுக்குப் புதியவர்களை நியமிக்க வேண்டியிருப்பதாகவே நம்புகிறேன்.

## சமதர்மம் ஏற்படவேண்டும்

அரசாங்கத்திட்டத்தை அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது வேறுகாரணத்தாலோ எதிர்ப்பவர்கள் கேந்திரஸ்தானத்திலிருந்தால், சந்தர்ப்பமும் கிடைத்தால் அவர்கள் சமதர்ம ஏற்பாடுகளைக் குலைத்துக் கவிழ்த்து விடுவார்கள் என்பதிலையமில்லை. பெரிய பட்டங்களையும், கல்வித்தரங்களையும் நாங்கள் மதிக்கவே செய்கிறோம். ஆனால் அப்படிப் பெரிய பட்டங்கள் பெற்றவர், நில முதலாளிகள்பால் அனுதாபம் கொண்டவராயின், அவர் நெற்காணிச் சட்டத்தைச் சரிவர நிறைவேற்றத் தகுதியற்றவராவார்.

'ஆமாம் சாமி' போடுவதை நாம் விரும்பவில்லை. அதை நிராகரிக்கவும் செய்கிறோம். ஆனால் சொத்துரிமை விஷயமாகத் துரிதமான மாறுதல்கள் ஏற்படவேண்டிய காலத்திலே, நம்பிக்கையான முக்கிய ஸ்தானங்களில் சமதர்மத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் இருத்தல் வேண்டுமென்றே கருதுகின்றோம். இலங்கையிற் சமதர்மம் ஏற்படவேண்டுமென்றே நம் மக்களும் சென்ற தேர்தலில் வாக்களிப்பு மூலம் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

நாம் இதுவரை முயன்றுள்ளதைவிட அதிகமானதைச் செய்யவேண்டுமென்பதே மக்கள் இட்டுள்ள கட்டளை என்று நம்புகின்றேன்.

அற்ப அரசியல் வம்புப் பேச்சுகளை விட்டுவிட்டு, உண்மையான அரசியல், பொருளாதார விஷயங்களில் நாம் நமது சிந்தனையைத் திருப்ப வேண்டும். ஓயாத பேச்சுகளை நிறுத்தி, நமது பொருளாதாரத்திலே கூட்டான உருப்படியான வேலையில் இறங்கவேண்டும்.

## சுயதேவைப் பூர்த்தி

நமக்குத் தேவையான முக்கிய உணவுப் பொருள்களை நாமே உற்பத்தி செய்யும் சுயதேவைப் பூர்த்தித் திட்டத்தை நடத்திவைக்க வேண்டும். எனது அமைச்சு வெளியிட்ட விவசாய திட்டத்திலே இது கூடிய சீக்கிரத்தில் சாத்தியமே என்பது விளக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நாம் பல கோடி ரூபாய்கள் இலங்கையிலிருந்து வெளியேறாமல் தடுக்கலாம்.

ரப்பர், தேயிலை, தேங்காய் முதலிய வர்த்தக விளைபொருள் உற்பத்தியைப் பெருக்கலாம். மருந்துவகை முதல், கைத்தொழில் இயந்திரங்கள் வரைநாம் இறக்குமதி செய்யும் பொருள்களுக்கான அங்கியச் செலாவணியை, இந்த ஏற்றுமதிமூலம் சரிக்கட்டலாம்.

நமது மீன்பிடித் தொழிலை நவீன முறையில் துரிதமாக அபிவிருத்தி செய்யலாம். இவ்வேலையை கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. இலங்கையைச்சுற்றி கடல்மீன் செல்வம் அதிகமிருந்தும், நாம் வருஷத்திலே 6 கோடி ரூபாய் வரை இறக்குமதி மீனுக்காக வீணாக்கும் விசித்திரம் தீரலாம்.

அரைகுறைத் திட்டங்கள் சரிவர நடைபெறா. காரணம் பொருளாதாரத்தின் எல்லா அம்சங்களும் ஒன்றுக்கொன்று இணைந்திருப்பதுதான்.

கைத்தொழில்களுக்கு விவசாய விளைபொருள்கள் தேவையாகும். விவசாயத்துக்கும், கைத்தொழில் இயந்திரங்கள், மற்றக் கருவிகள், செயற்கை உரங்கள், கட்டட தளவாடங்கள் எல்லாம் வேண்டும்.

போக்குவரத்துகள், பாலங்கள், நிலங்கள், துறைமுக அபிவிருத்தி இவை இல்லாமல், எதுவும் முன்னேறமுடியாது.

## குடிசைத் தொழிலுக்கு மின்சார சக்தி

இதில் ஒன்றுக்கொன்று ஏதாவது ஒரு விதத்தில், மின்சார சக்தியின் விநியோகத்தைப் பெறுதற்காக இணைந்திருக்கின்றது. நமது மகத்தான பலமுக ஜலசக்தி மின்சார திட்டங்களைத்தவிர, விஞ்ஞானிகளாகிய நீங்கள், கிராமக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மலிவாக விவசாய, குடிசைத் தொழில்களுக்காக மின்சார சக்தி கிடைக்கும்படி வழிவகை கண்டுபிடிக்க உங்கள் அறிவாற்றல்களைப் பயன்படுத்த வேண்டும்.

(12-ம் பக்கம் பார்க்க)

---

**சுயநலமே பொறுமைக்குக் காரணமென்பதை இக்கட்டுரையில் விளக்கும் ஆசிரியர் மனிதனுடைய வளர்ச்சியிற் காணப்படும் பல குணங்களையும் ஆராய்ந்துள்ளார்.**

# ஓர் அனுபவ உண்மை

ப. முருகன்

[தமிழ்ப் பேராசிரியர், அரசினர் கலைக்கல்லூரி, கோவை]

[சென்றவாரத் தொடர்ச்சி]

அறுபதுக்குமேல் மாட்டின் குணம். மாட்டின் குணம் நமக்கு நன்கு தெரியும். மாடு பொதி சுமக்கும். சாதுவானது. எல்லாவற்றைக் காட்டிலும் மாட்டினிடத்தில் ஒரு குணம் சிறப்புப் பெற்று விளங்குவதைக் காணலாம். வயது முதிர்ந்த மாடு, மரநிழலில் படுத்து அசைபோட்டுக்கொண்டு, தலையினை அசைத்துக் கொண்டிருக்கும். இப்படியும் அப்படியுமாகத் தலையினை ஆட்டிக்கொண்டிருக்கும். மாட்டினிடத்திற் தலைசிறந்து விளங்குவது இந்தத் தலையாட்டும் குணமேயாகும். அறுபதுக்கு மேல் நம் வீட்டிலுள்ளோரைக் கண்டால் இக்குணம் விளங்கும். எதைக் கேட்டாலும் தலையாட்டும் குணத்தையும், மாடு அசைபோடுவதைப்போல் பல்லில்லாத வாயில் எதையாவது போட்டுக்கொண்டு அசைபோட்டுக் கொண்டிருப்பதனையும் காணலாம்.

மாட்டுக்கு மரநிழல் தேவை. இவர்களுக்கு ஒரு திண்ணை தேவை. வெறும் வாயைக் கூட மென்று கொண்டிருப்பார்கள். வாய் அசைந்துகொண்டே இருக்கும். இதனைத்தான் நாம் பொக்கு வாயனுக்கு அவல் கிடைத்ததுபோல் எனக் கூறுவதுண்டு. எப்போதும் வாய் அசையும். மற்றும் எதைக் கேட்டாலும் ஏதோ தலையை ஆட்டுவார்கள். எண்ணிப் பார்க்க மாட்டார்கள். எண்ணிப் பார்க்க முடியாது, மனம் சுவையில் ஈடுபடுகிறது. பழையதை நினைத்துக் கொண்டும் புல்லைத் தடவித் தடவி மெல்லமுடியாமல் இன்புறும் பல்லில்லாத கிழட்டுப் பசுவைப்போல், (குறுந்தொகை பாடல் 204) பழைய நினைவுகளில் தம்மனத்தைச் செலுத்தி வாயசைய, தலையாட்டிக் கொண்டிருப்பார்கள் பெரியவர்கள். அவர்களுக்கு எதிர்காலம் என்பதில்லை; அதனால் அவர்கள் தாம்வாழ்ந்த காலத்திற் சென்று, அந்தக்காலத்தில் அப்படியென்று பழையதைச் சொல்லி இன்புறுவார்கள். புதியதாகக் கேட்டால் ஒன்றும் சொல்லமுடியாது தலையை ஆட்டுவர். இங்ஙனம் பெரும்பான்மையினர் அறுபதிற்கு மேல் செய்வதைக் காணலாம். இதனைத்தான் அறுபதுக்கு மேல் மாட்டுக்குணம் என்கின்றோம்.

## ஆந்தையின் குணம்

எண்பதுக்குமேல் ஆந்தையின் குணம். ஆந்தையைக் கூகை, கோட்டான் என்றபெயரால், பலதிசைகளில் வழங்குவதுண்டு. அதனை "ஊமக்கோட்டான்" என்றும் தமிழ்நாட்டிற் சில பகுதிகளில் வழங்குவர். ஊமக்கோட்டான் என்ற அடையடுத்து வருவது அதனுடைய இயல்பினை நன்கு எடுத்தியம்புகின்றது. ஆந்தைக்குப் பகலில் கண்தெரியாது: இரவில் தூங்காது; எப்போதும் ஊம், ஊம் என்று "ஊங்கொட்டும்." கண்ணை நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டிருக்கும். ஆனால் கண்தெரியாது. எதிரில் இருப்பது தெரியாத காரணத்தால் விழிக்கின்றது; இதனைத்தான் ஆந்தைபோல் விழிப்பது என்கிறோம். இரவிலே ஆந்தை உறங்குவதில்லை, தூங்கவிடாமற் சும்மா இருப்பதும் இல்லை. 'ஊம் ஊம்' என்று குழறும்; அந்த ஒலியைக்கேட்டு மக்கள் அஞ்சுவர். சங்க இலக்கியப் பாடல்களில் தலைவி கூகையின் குழறலைக்கேட்டு அஞ்சுவதைக் கூறுநிற்கின்றன. (குறுந் 153, நற். 218, அகம் 158) எண்பதுக்கு மேற்பட்டவருக்குக் கண் ஒளிமங்குவதுண்டு. பட்டப் பகலிலே தம் கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு விழிப்பார்கள். கண்ணொளி மங்கிவிட்ட காரணத்தினால், கண்ணிலுள்ள மணி (Pupil) காண்பதற்கேற்ப அசையாது விழிக்கும். நமக்கு ஆந்தை விழிப்பதுதான் நினைவு வரும். இரவிலோ பெரியவர்கள் எல்லோரும் உறங்குகின்ற போது உறங்காது விழித்துக் கொண்டிருந்து எல்லோருக்கும் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பார்கள். அதுமட்டும் அன்று. இரவில் ஊங் கொட்டிக்கொண்டு சிறுவர்களுக்கெல்லாம் அச்சத்தையும் ஊட்டுவார்கள்! வீட்டிலே மூலையிற் கிடக்கும் ஆந்தை என்

(12-ம் பக்கம் பார்க்க)

மாதர் பகுதி

# அதிகப் பேச்சும் அடக்கமும்

— இந்திரா —

வாழ்க்கை எனும் தேரில் இணைக்கப்பட்ட அச்சாணியே பெண். அந்த அச்சாணி மிக மிகச் சிறியதாயினும் தேரின் முழுப் பாரமும் அதிலேதான் தங்கியுள்ளது. எனவே வாழ்க்கையின் வீழ்ச்சியோ, உயர்ச்சியோ அக்குடும்பப் பெண்ணையே சார்ந்திருக்கிறது.

இப்பெண் தன்னை உயர்த்த வேண்டுமானல் தனது குடும்பத்தைச் சீராக்கவேண்டும். இச்சீர்மைக்கு வேண்டிய அம்சங்களில் முக்கியமானது தன்னடக்கம்.

நாணம், பொறை, மடம், அச்சம் ஆகிய பண்பாடுகளை மையமாகக் கொண்ட தமிழ்ப்பெண்களுக்கு இதுபற்றிய விளக்கம் தேவையில்லை. இருப்பினும் இன்றைய பெண்களிற் சிலர் இப் பண்பாடுகளை நீக்கிய குணம்சங்கள் பொருந்தியவர்களாக இருப்பது கண்கூடு.

வீட்டில் அடங்கி ஒடுங்கிப் பதுமைகளாக இருக்கும் பெண்கள் குளத்தங்கரையிலோ, கிணற்றடியிலோ கூடிவிட்டால் புதியஅரசாங்கத்தைத்தாபித்து அதில் பலவித அங்கங்களையும் பெற்றுக்கொள்வர். அரட்டைகள், கோள் — குண்டணிகள் மூலம் முற்றும் புதியதான பாணியில் அவர்களது பேச்சுக்கள் தாவும். அவர்களது சிரிப்புக்கள், கேலிகள் பக்கத்தாற் செல்பவரின் காதைச் செவிடுபடும்படியாக்கிவிடும்.

புதிய முகங்களைக் காணக் காண அவர்களது அரட்டைகள் அத்துமீறுமே தவிர அடங்கிப் போவதில்லை. இது மகா தவறென்பதைப் பல சகோதரிகள் உணராதிருப்பது வேதனையைத் தருவதாகும்.

"பெண்டுகள் சேர்ந்திடிற் பெரிய சண்டையே" என்று விவேக சிந்தாமணியில் ஓர் பாடலின் அடி முடிகிறது. அப்படி அழுத்திச் சொல்வதிலே தவறில்லை. அந்தக்காலத்துப் பெண்களின் நிலையையே இப்படிப்பாடிவிட்ட கவிஞன் இன்று இருந்திருப்பின் மிக மிக உச்சத்திலேற்றி விடுவான் என்பதிற் சந்தேகமேயில்லை.

எனவே, சகோதரிகள் தம் நிலையை என்றும் மாசுபடுத்திக் கொள்ளாதிருக்கக் கடமைப் பட்டவர்கள்.

"அவளைப் பாருங்கள் மிதித்த இடத்துப் புல்லுச்சாகாது" என்று பிறர் தம்முள் பேசிக் கொள்ளும்வகையில் ஒவ்வொரு பெண்ணின் நடையும் அமைதல் வேண்டும். இப்படி நடையிலே அமைதியையே கவனித்து ஏற்றிப் புகழ்ந்தவர்கள் ஒவ்வோர் அம்சத்தையும் ஊன்றிக் கவனித்து ஒவ்வொரு முதுமொழிகளை ஆக்கி வைத்திருக்கின்றனர்.

"புகையிலை விரிச்சாப்போச்சு பெண்டுகள் சிரிச்சாப்போச்சு"

என்பது அம்முது மொழிகளில் ஒன்று. புகையிலையை விரித்துவிடின் அதன் மணம் குன்றிக்கிழிந்து விடுவதுபோல் பெண்களும் தமது நிலையினின்றும் சீரழிந்து விடுவதற்குச் சிரிப்பும் காரணமாகிறது.

'உர்' என்று முகத்தை வைத்துக் கொள்வதுதான் வேண்டுமென்பதல்ல. சதா புன்னகை தவழும் வதனம் வேண்டும். இரசிக்கும் காட்சிகளைக் கண்டு கிளர்ந்து வரும் உணர்ச்சியிலுண்டாகும் சிரிப்பு மிகவும் மென்மையாக இருத்தலே சாலச்சிறந்தது.

அதிகப் பேச்சு, அடக்கமின்மை, நீண்டசிரிப்பு ஆதியன இக்காலத்துப் பெண்மணிகள் சிலரிலுட்அமைந்திருப்பதை மறைப்பதற்கில்லை.

வீதியில் நடந்து செல்லும் போதோ அன்றி மோட்டார் வண்டிகளிற் பயணம் செல்லும் போதோ அவர்களிற் பலர் கூடிவிட்டால் அப்பப்பா காதே அடைத்துவிடும். அந்தவகையில் அமைகிறது அவர்களது சிரிப்பும், பேச்சும்.

கூட்டிச்செல்லும் ஆசிரியைகள் இதுபற்றி எந்தவிதமான கண்டிப்பும் காட்டாது இருப்பதுதான் அவர்களின் குறும்புகள் அத்துமீறிப் போவதற்கு ஏதுவாகின்றது.

இது எம்நாட்டுக்கு மட்டுமல்ல உலகம் முழுவதிலுமுள்ள பெண்களுக்குமே பொதுவானது. ஆனல் நமக்கென்ற வழிவந்த பண்பாட்டின் சுவட்டில் நிற்கவேண்டும். தனித்துவம் எமக்குண்டு. அதற்குத் தக அமைப்பினில் நின்று தான் நாம் முன்னேறவேண்டும்.

ஒரு சில பெண்களிடம் மிகப் பலவீனமான குணங்கள் இடம் பெற்றுவிடுகின்றன. தாம் ஒருவருடன் ஒருவர் உரையாடும் போது மூன்ருவது பேர்வழி அதனைக் கவனித்தால் உரையாடல் அத்துமீறிப் போய்விடுகிறது. இது தங்களின் பிரதாபம் தெரியப் படுத்தப்படுகிறது என்று அவர்கள் கருதுவார்களானல், அது தோல்வியே. இப்படியான செயல் மூலம் தம்மைத் தாம் தாழ்த்திக்கொள்கிருர் எனும் உண்மையே இது. தவிர, அவர்கள் எதிர்பார்க்கும் சிறப்புக் கிட்டுவதில்லை.

பெண்ணெனப் பிறந்துவிட்டால் பல பீழை யுண்டாகிறது என்றபெலவீனத்தைத்துடைத்தெறிந்து—வாழ்க்கையில் நல்ல ஒழுங்குடன் முன்னேறுவதற்கு அடக்கம் இன்றியமையாதது. எனவே, பண்டைய நம் இனத்தார் காட்டிச்சென்ற சீரிய நெறிகளில் நாம் கால் கொண்டிட நாம் நம்மை உயர்த்திவிட்டால் நாடே உயர்வடையும்.

இயற்கையையே ஆண் பெண் என உருவகப்படுத்தி அதிலே தெய்வீகத்தைக் கண்டவர் நமது முந்தையர். அன்னரின் நெறிகளைப் பின்பற்றி நமது பண்டைய சோதரிகள் வாழ்விற் செம்மையை நிலைநிறுத்தினர். அந்த ஒழுக்கத்தின் உறுதியிலே மிகப் பலமான காரியங்களைச் சாதித்துள்ளனர்.

எனவே, பழமையிற்காலூன்றியே புதுமையை நோக்கி நாம் விரைய வேண்டும். இது தவிர முன்னையதை ஒதுக்கித் தள்ளி, திரும்பிப் பார்க்காது விரைவதல்லப் புதுமை. சிறப்பான அம்சங்களை அறிவதற்குத் தடையாக உள்ளவை காலத்துடன் ஒட்டி வந்த சில மாற்றங்கள். அவற்றை — மற்றவர்களின் திருப்திக்காக மேற்கொள்ளாது பெண்மையின் கௌரவத்தை நிலைநாட்ட நாம் வெறுத்துத் தள்ளவே வேண்டும்.

அதிகப் பேச்சின்றிய அடக்கம் நமக்குப் புதியதல்ல. புராண — இதிகாச காலத்துத் தெய்வீகப் பெண்மணிகளின் வாழ்க்கையின் அனுபவமே இது. அவர்களின் நிலை உயர்வதற்கும் நமது நிலை தாழ்வதற்கும் உரிய காரண — காரியத் தொடர்புகளை ஊன்றிக் கவனித்து நம்மைச் சீர்ப்படுத்தல் அவசியம்.

பெண்மை அப்போது தான் சுமுகமான நிலையில் உயர்வடையும். காலத்தோடொட்டிய கருத்துக்களோடு கூடிய நன் நெறிகளையும், வழிவழி வந்த ஒழுக்க நிலையையும் ஏற்று முன்னேறுவோம்.

# குடும்பத் தலைவி

'மதிமங்கை'

ஒரு பருவ மங்கை 'திருமணம்' என்னும் கோட்டையினுள் காலடி எடுத்து வைத்தவுடன், அவளைப் பல கடமைகள் சூழ்ந்து விடுகின்றன. குடும்பத்தைச் சுமக்கும் குடும்பத் தலைவியாகி விடுகிருள், அவள். அவளை நோக்கிப் பல சிக்கல்கள், கஷ்டங்கள், பொறுப்புக்கள் தலைமேல் நிற்கின்றன. அவற்றைத் திறம்படச் செயலாற்றுவதில்தான் அவள் கடமை தங்கியிருக்கிறது.

குடும்பத் தலைவியாய்ப் பேருக்கு மாத்திரம் இருந்துவிட்டாற் போதாது; ஒவ்வொரு பிரச்சினையிலும், கணவனைப் பராமரித்தல், குழந்தைகளைப் பேணுதல், பெற்ரேரை, மற்ரேரை, உடன் பிறந்தோரை ஆதரித்தல், மாமன்—மாமி, மைத்துனர், மைத்துனி முதலானேரைக் கௌரவித்தல் என்பனவற்றில் அவள் தலைவியாக விளங்கி நற்பெயர் பெற வேண்டும்.

"இல் வாழ்க்கைக்குத் தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானல், ஒருவனுடைய வாழ்க்கை எவ்வளவு சிறப்புடையதானலும் பயனில்லை"—என்று திருக்குறள் கூறுவதை ஒவ்வொரு பெண்ணும் செவி சாய்த்து, குடும்பத் தலைவியாய் இருந்து நற்பெயர் ஈட்ட வேண்டும்.

குடும்பம் என்னும் கடலிலே, கடமை என்னும் படகை, அன்பு, திறமை ஆகிய இரு துடுப்புக்களால், குடும்பத் தலைவி புயல், மழை, வெயில் முதலியவைகளுக்கு அஞ்சாது திறம்பட ஓட்டிச் செல்ல வேண்டும். இதிலேதான் அவள் திறமை இருக்கிறது. வெற்றி பெற்ருல் அவளே உண்மையான குடும்பத் தலைவியாவாள்.

ஒவ்வொரு பெண்ணும் குடும்பத் தலைவியாகுமுன் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகியவற்றை அணிகலன்களாகப் பூணவேண்டும். "கற்புள்ள மனைவி மழைக்குச் சமானம். அவளால் குடும்பம் தழைக்கிறது; உண்மையான மனைவி, கணவனுடைய இல்லத்திலும், இதயத்திலும் அரசி"—என்ற பொன் மொழிகளை வாழ்விலே கடைப்பிடித்தல் நன்று.

குடும்பத் தலைவி காணும் அமைதி, ஆனந்தம் படித்துப் பட்டம் பெற்றுக் கன்னியாக வாழும் பெண்ணும் காண முடியாது என்பது திண்ணம்! ஒவ்வொரு பெண்ணும் குடும்பத் தலைவியாய் மாறிப் பணிவிடை செய்வது மிகவும் நன்று!

இல்லற மல்லது நல்லற மன்று—என்று ஒளவைப் பிராட்டியார் கூறியதை 'கன்னியாக வாழுவோம்' என்று சபதம் செய்யும் நாரிமணிகள் நன்கு கவனித்தல் அவசியம். அவர்கள் கன்னியாக எத்துணை ஆனந்தம் கண்டாலும், குடும்பத் தலைவி காணும் பேரானந்தம், அதாவது, கணவனின் தூய அன்பு இனிய உள்ளம், குழந்தைகளின் மழலை மொழி இவைகளை, அவர்கள்—கன்னியாக இருக்கும் வரை—ஒற்றைக் காலில் நின்று தவம் செய்தாலும் காண முடியாது.

"சிறந்த மனைவியாகவும், தாயாகவும், பண்புள்ள குடும்பத் தலைவியாகவும் இருந்து குடும்ப நலனைப் பேணுவதை விடப் பெண்ணுக்கு வேறெந்த அந்தஸ்தும் தேவையில்லை" என்று பிலிப்பைன் தூதுவர் திருமதி லிகார்டா கூறுவதை ஒவ்வொருவரும் நன்கு கவனிக்க வேண்டும்.

'இல் வாழ்க்கையிற் கற்பு என்னும் உறுதி நிலை பெற்ருல், பெண்ணை விட மேம்பட்டபொருள் உலகில் வேறு என்ன இருக்கின்றது?' என்று திருக்குறள் கூறுகின்றது. 'கணவன், குழந்தைகள், வீடு இவர்களுக்குச் செய்ய வேண்டிய முதற் கடமைகளைச் செய்துவிட்டு அதன் பின்னர் விரும்பினுல் புதுப் பொறுப்புக்கள் ஏற்கலாம்' எனத் திரும்தி லிகார்டா கூறியுள்ளார். குடும்பப் பொறுப்புக்களை ஏற்கப் போகும் யுவதி இவற்றைப் பேணி இல்லறத்தை நல்லறமாக்க முயல வேண்டும்.


'ஹென்றி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்றி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.



வாழ்க்கையில் இன்பந்தருவது எது?
உங்கள் வனப்பைக் காட்டும்
மங்களகரமான புகைப்படங்கள் தான்!
தத்ரூபமான புகைப்படங்கள் பிடிக்க
பாரத் ஸ்ருடியோ
தயாராயிருக்கிறது.
யாவரும் விரும்பும் எல்லாவித சந்தர்ப்பங்களிலும்
போட்டோ பிடிக்க அழையுங்கள்

BHARAT STUDIO
PHOTOGRAPHERS
Phone 252 Grams BHARATFOTO
82/1, Kasturiar Road, JAFFNA

கருத்தரங்கம்

# ஐக்கிய இலங்கைக்கு சமஷ்டி ஆட்சியே உகந்தது

தி. பஞ்சாட்சரம்

தமிழினம் எங்கு இருக்கின்றதோ, இந்திய நாட்டிலும்சரி, ஈழநாட்டிலும் சரி அல்லது வேறு நாடுகள் எதுவாகினும் சரி அங்கெல்லாம் அடிமை இனமாக அரசியல் விடுதலையற்று, அண்டிப் பிழைக்கும் சாதியாக இருக்கின்ற அவல நிலையைக் காணும்போது எந்தத் தமிழன் இதயமும் வருந்தாதிருக்க முடியாது. ஒரு காலத்தில் மாற்றாரைப் புறங்கண்டு, மன்பதைக்கு நீதி வழங்கி வாழ்ந்த இனம், சீர்கெட்டுச் சின்னபின்னப்பட்டு இத்தகைய கீழ் நிலைமையில் இருப்பதன் காரணத்தை அறிந்து, நோய்கண்டு மருந்து நல்கும் மருத்துவன்போல அதற்கு ஏற்ற முயற்சிகளில் தமிழர்களாகிய நாம் ஈடுபடாதொழியின், அந்தோ தமிழினம் உலகத்தில் ஓர் இனமாகத் தப்பிப் பிழைப்பது எவ்வாறாமோ!

## அரசியல் அந்தஸ்து

ஓர் இனம் தனது மொழி, கலை, பண்பாடு முதலியவற்றைப் பாதுகாத்து வாழவேண்டுமாயின், அந்த இனத்துக்குத் தனக்கு என்றொரு நாடும், ஆட்சியும் இருந்தேயாக வேண்டும். அரசியல் உரிமையற்ற எந்த ஓர் இனமும் உருப்படியாக - சுதந்திரமாக இருக்க முடியாது என்பதை நாம் சரித்திர வாயிலாக அறிந்து கொள்ளலாம். பிரான்ஸ் மொழி ஆட்சி மொழியாக இருந்தபோது ஆங்கிலத்துக்கு மதிப்புக் கிடையாது. அது ஒரு தாழ்ந்த மொழியாகவே இருந்தது. உலகத்தைக் கட்டியாளும் அரசியலுரிமைகளைப் பெற்று எப்போது ஆங்கில மொழி ஆட்சி மொழியாக ஆகியதோ, உலகம் கண்டு வியக்கத்தக்க அளவுக்கு ஆங்கிலம் வளர்ந்தது, நாடெங்கும் பரவியது. இன்னும் அந்த அத்திவாரத்திலேயே அம்மொழி மதிப்பும் பெறுகின்றது. விஜயநகர் மன்னர்களின் ஆட்சிக் காலத்திலே தெலுங்குமொழி வளர்ந்தது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆட்சி நடத்திய போது தமிழ்மொழி செழித்து வளர்ந்தது.

ஆட்சி அதிகாரமில்லாத எந்த மொழியும் நிலைத்து நிற்க முடியாது என்பதை நாம் இலகுவில் உணரலாம். எனவே ஓர் இனத்தின் மொழி, பாதுகாக்கப்பட வேண்டுமாயின், அவ்வினமும், அவ்வினத்தின் மொழியும் அரசியல் அந்தஸ்துப் பெற வேண்டும் என்பது புலனாகின்றது.

## அநீதியை எதிர்த்தல்

ஈழ நாட்டில் தமிழ் பேசும் இனத்தின், குடியுரிமை, மொழியுரிமை, அரசியலுரிமையாவும், பெரும்பான்மை இனத்தவரால் பறிக்கப்படும்போது, அந்த அநீதியை எதிர்த்து நிற்பது தமிழ் பேசும் மக்களின் கடமையேயாகும். தம் இன அழிவைத் தடுத்து, இனவுரிமைகளைப் பேணி வாழ்வதற்கு மார்க்கம் தேடுவதில் அவ்வினம் தலைப்பட்டால் அது வகுப்புவாதம் என்று கருதமுடியாது. இந்நாட்டுக்குக் கிடைத்துள்ள ஒற்றையாட்சி அரசியல் முறையால் பெரும்பான்மையினரின் கையிலேயே அரசியலதிகாரம் முழுவதும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இது காரணமாகவே பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை அடக்கி, ஒடுக்கி அடிமையாக்க முனைகின்றது. இந்த ஒற்றை ஆட்சியின் கீழ் சிறுபான்மைத் தமிழினம் உரிமையோடு வாழ முடியாது. எத்தகைய கொள்கை உடைய கட்சி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தாலும், அரசியலதிகாரம் முழுவதும் தனி ஓர் இனத்தின் கையிலேயே இருக்கும் என்பதை எவருமே மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. எனவே, இந்த ஒற்றை ஆட்சியில் எத்தகைய முற்போக்குடையவர்கள் ஆட்சி நடத்தினாலும் தமிழினத்தின் உரிமைகள் யாவும் பாதுகாக்கப்படும் என்று நாம் கருதுவது அறியாமையேயாகும். ஒற்றை ஆட்சியில் ஐக்கிய இலங்கையை உருவாக்குவதாகக்கூறிய ஐ. தே. கட்சி முடிவில் எக்கருத்தினை நிலைநாட்டியதோ! தேசியப் போர்வைக்குள் வகுப்புவாதமே நடந்தது. அதனால் சிறுபான்மைத் தமிழினம் பாதிக்கப்பட்டது என்ற உண்மையை நாம் அனுபவ வாயிலாக உணரலாம்.

## பெரிய தவறு

இன்னும் ஒற்றை ஆட்சியில் தேசியம் பேசித் தமிழினம் வாழலாம் என்று கருதுவது பெருந் தப்பிதமாகும். இரு இனமும் தத்தம் மொழி, கலை பண்பாடு முதலியவற்றைப் பாதுகாத்து சுதந்திரமாகவாழ வேண்டுமேயானால், இரு இனமும் இணைந்து வாழ்வதற்கு ஏற்றதோர் அரசியல் முறை சமஷ்டியே ஆகும். பல இனங்களும் ஒன்று கூடி வாழுகின்ற நாடுகளில் எல்லாம் அவ்வாட்சியே நடைபெறுகின்றது. அந்நாட்டில் வசிக்கின்ற இனங்களெல்லாம் அரசியல் சுதந்திரத்தை நன்கு அனுபவிக்கின்றன. இதுவே, உண்மையான ஜனநாயகமாகும். இக் கருத்தினை ஈழ நாட்டுப் பெரும்பான்மை இனம் ஏற்றுக்கொள்ளாமல் தமக்குக் கிடைத்துள்ள அரசியலதிகாரத்தைக் கொண்டு சர்வாதிகார ஆட்சி நடத்துகின்றது. இவ்வநீதியை எதிர்ப்பது இந்நாட்டிலுள்ள தமிழினத்தின் கடமை மட்டும் அல்ல, இந்நாட்டிலுள்ள ஜனநாயக வாதிகளான சிங்கள இனத்தவர்களினதும் கடமையாகும். அழிவுறுகின்ற இனம் தமதுரிமைக்காகக் குரல் எழுப்பினால் அது வகுப்புவாதம் என்றும், பெரும்பான்மையினர் என்ற ஒரே காரணத்தைக் கொண்டு சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்கின்ற பெரும்பான்மையினரின் குரல் தேசியம் என்றும் வர்ணிக்கப்படுவது எமக்கு வியப்பாக இருக்கிறது.

## ஏற்ற வழி

இரு இனமும் கூடி வாழ்வதற்கு ஏற்றதொரு மார்க்கம் சமஷ்டி ஆட்சியே என்றால் அது எவ்வாறுவகுப்புவாதமாகுமோ எமக்குத் தெரியவில்லை. சிறுபான்மையினர் தமது மொழி, அரசியல் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதுவதில் தவறு என்ன இருக்கின்றது. பெரும்பான்மையினரின் உரிமைகளெதையும் நாம் கேட்கவில்லை. உங்கள் உரிமைகளைப் போல், எமதுரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ளவே அவாவுகின்றோம். அது காரணமாகவே 'சமஷ்டி' கோரப்படுகின்றது. ஐக்கிய இலங்கையை அமைக்க வேண்டும் என்று கருதுபவர்கள் இரு இனமும் சுதந்திரமாக வாழ்வதற்கேற்ற ஆட்சியை ஏற்படுத்துவதற்கு ஏன் பின்நிற்க வேண்டும். சமஷ்டி ஆட்சியே இரு இனமும் இணைந்து வாழ்வதற்கு ஏற்றதொன்றாகும். தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழச் செய்வதே அதன் தத்துவமாகும். அதுவே உண்மையான ஜனநாயகப் பண்புமாகும். இந்த நீதியான மார்க்கம் கைகூடாது போனால் தமிழினம் தனித்து வாழவேண்டும் என்று நினைப்பதில் தவறு எதுவும் இல்லை.

## உண்மைக்காக உழைத்தல்

தமிழ்பேசும் மக்களாகிய நாம் எமது உரிமைக்காக நீதியான மார்க்கத்தில் அயராது உழைக்க வேண்டும். எமதுரிமையைக் காப்பது எமது தலையாய கடமையே யாகும்.

ஆண்டுகள் எத்தனையெத்தனை கடந்து போனாலும், உரிமைக்காக உழைத்தால் அது வீண்போக மாட்டாது. மக்களின் ஓயாத ஒழியாத முயற்சியாலும், தியாக சிந்தனையாலுமே நாம் இனவிடுதலை அடைய முடியும். உலக நாடுகளில் நடைபெற்றிருக்கின்ற விடுதலைப் போராட்டத்தின் வரலாறுகளை நாம் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். விடுதலைக்காக, உரிமைக்காகப் போராடிவந்த எந்த ஒரு இனமும் தோல்வி கண்ட சம்பவம் வரலாற்றிலே காணமுடியாது. எனவே, எமது இனத்தினுரிமைக்காக ஒன்றுபட்ட மனத்தினராய் அயராது உழைப்பதே தமிழ்பேசும் மக்களாகிய எமது முக்கிய கடமையாகும். எமது இனவுரிமைகள் யாவும் நிலை நாட்டப்பட வேண்டுமாயின், அதற்காக ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் எதனையும் நாம் அனுபவித்தே யாகவேண்டும். ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாக மாற்றானுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த தமிழினத்துக்குச் சுதந்திர உணர்வு இன்றுதான் அரும்பியிருக்கின்றது. இந்த அரும்பு மலராகி, காயாகி, கனியாகுங் காலம் அதிக தூரத்தில் இருக்க முடியாது. தமிழினத்தின் விடுதலைக்காகத் தமிழ்பேசும் மக்களனைவரும் உள்ளத்தினால் ஒன்றுபட்டுச் செயலாற்றுவதே அவசியமும் அவசரமுமாகும். அறப்போர் வழியிலே பலாத்காரமற்ற சாத்வீக முறையிலே — ஜனநாயகப் பாதையிலே உறுதியாக நின்று எமது உரிமைக்காகப் போராடினால் வெற்றி நிச்சயம். இதனைக் கைவிட்டு நாட்டுக்கு ஒவ்வாத அரசியல் திட்டத்தின் கீழ் குறுக்குவழி ஏதும் இருக்கிறதா? என்று பார்ப்பது பெருவிந்தையேயாகும். தமிழ்பேசும் மக்கள் இந்த ஒற்றையாட்சியின்கீழ் தேசியம் பேசிச் செயலாற்றுவார்களானால் முடிவில் தமிழினம் என்ற ஓர் இனம் இந்நாட்டில் இருக்க முடியாத நிலைமை தான் ஏற்படும் என்பதில் சிறிதுமே சந்தேகம் இல்லை. எனவே, தமிழ்பேசும் மக்களனைவரும் தங்கள் இனவுரிமைகளைப் பெற்றுச் சுதந்திரமாக வாழுவதற்கு ஏற்ற முயற்சிகளில் ஈடுபடுதலே அவர்களின் கடமையாகும்.

# பிரதமரின் தேர்தல் கவலை

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சாதாரணமான அரசியல்வாதிகளுக்கெல்லாம் கவலையும் கவனமும் அடுத்த தேர்தலையும் போட்டிக் கட்சிகளையும் பற்றித்தான். அடுத்த தேர்தலில் யு. என். பி. கட்சியைத் தவிர வேறு கட்சிகளைப் பற்றிப் பிரதமருக்கு அவ்வளவு கவலையில்லை. டாக்டர் என். எம். பெரராவின் சமசமாஜக் கட்சியின் அரசியற் கொள்கைக்கும் பிலிப் குணவர்த்தனவின் அரசியற் கொள்கைக்கும் எவ்வித வேற்றுமையும் இல்லை; தனிப்பட்ட புகைச்சல்கள் தான். ஆகவே தேர்தலுக்கிடையே பிரதமர் தலையிட்டு இவ்விருவருக்குள்ளும் ஒரு சமரசம் செய்வதாயின் அதில் வியப்பில்லை. ஏற்கெனவே வெளியேறிய ஸ்ரீ சுபசிங்கா இவ்விதமான ஒரு முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கொம்யூனிஸ்ட்டுகள் அரசாங்கத்தை அநேகமாக ஆதரித்து வருவதால் பிரதமருக்கு அக் கட்சியைப்பற்றிக் கவலையில்லை.

## வடக்கும் கிழக்கும்

சென்ற தேர்தலிலேயே வட மாகாணம், கிழக்கு மாகாணம் இரண்டிலும் எம். ஈ. பி., யு. என். பி. இவ்விரு கட்சிகளுமே தங்கள் மொழிக் கொள்கை காரணமாகத் தலைகாட்ட முடியாமல் ஒதுங்கிவிட்டன. மொழி விஷயமாக மனம் மாறாதவரை அடுத்த தேர்தலிலும் இதே நிலைதான் நீடிக்கக் கூடும்.

புதிய பார்லிமென்டில் மொத்தம் 172 ஸ்தானங்கள் இருக்கலாமென்று கூறப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு எவ்வளவு கிடைக்கும் என்பது தெரியவில்லை. 25 அல்லது 30 ஸ்தானங்கள் கிடைத்தால் மிக அதிகம். கிழக்கு மாகாணத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் சில தொகுதிகளிற் சரிசமமாக வாழுகின்றனர். அவற்றை இரட்டை மெம்பர் தொகுதிகளாக்கி முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முயற்சி நடைபெறுவதாயும், தமிழ் பேசும் மக்களைப் பிரிக்கும் நோக்கத்துடனேயே காரியங்கள் நடப்பதாயும் தொகுதி நிர்ணய சபையிலே மூவரில் முஸ்லிமையும் நியமித்துள்ளது குறிப்பிடத்தக்கதென்றும், விஷயமறிந்த ஒரு முஸ்லிம் அரசியல் வாதி என்னிடம் தெரிவித்தார்.

சென்ற தேர்தலில் சமஷ்டிக் கட்சி ஆதரவில் நின்று வெற்றி பெற்ற கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதிகள் பிறகு கட்சி மாறி விட்டதால், அடுத்த தேர்தலில் சமஷ்டிக் கட்சியின் ஆதரவில் இன்றி, புதிய கட்சி அமைத்தோ, அல்லது தனிப்பட்ட முறையிலோ போட்டி போடலாம். பிறகு அவர்கள் அரசாங்கக் கட்சியை ஆதரிக்கக்கூடுமென்பது அரசாங்கக் கட்சியின் நம்பிக்கையாக இருக்கலாம். இது எப்படியாயினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்குமாதலால் தாங்கள் அதைக் குறித்து அதிக கவலைப்படத் தேவையில்லையென்று எம். ஈ. பி. யும் யு. என். பியும் நினைக்குமாயின் அதில் வியப்பில்லை. மலை நாட்டிலே பத்து லட்சம் தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலோரும் நாடற்றவராதலால், இன்றுள்ள நிலையின்படி அவர்கள் சார்பாக ஒரு பிரதிநிதியும் தெரிவுசெய்யப்படுவதற்கில்லை.

இந்நிலையில் எம். ஈ. பிக்கு பலமான ஒரே ஒரு போட்டிக் கட்சி யு. என். பி. ஒன்றுதான். எம். ஈ. பி. யிலிருந்து பிரிந்த ராஜரத்ன, இரியகொல்லை இவர்களது சில உதிரிக் கட்சிகள் வகுப்புவாதத்தை அடிப்படையாகக்கொண்டு எதிர்க்கலாம். ஆனால் அடுத்த தேர்தலுக்கிடையே வேறு மாறுதல்கள் ஏற்படாதவரை, எம். ஈ. பிக்கும், யு. என். பிக்கும் தான் விசேஷ போட்டி இருக்கும். எம். ஈ. பி ஒரு தேர்தல் கட்சியேயாதலால், அதன் அமைப்பும் பெயரும் அடுத்த தேர்தலுக்கிடையே மாறினாலும் அதில் வியப்பில்லை.

## யு. என். பி.

முன்னர் யாழ்ப்பாணத்திலே யு. என். பியின் தூண் என்று கருதப்பட்ட ஒருவரை, "யு. என். பியின் எதிர்காலம் என்ன?" என்று கேட்டதற்கு, "காலஞ் சென்ற யு.என்.பியா?" என்று பதிலளித்தார். மற்றப் பகுதிகளில் எப்படியாயினும். மொழி விஷயமாக யு. என். பி தன் கொள்கையை களனியில் மாற்றியபின், யாழ்ப்பாணத்தையும் தமிழ் பேசும் பகுதிகளையும் பொறுத்தவரை யு. என். பி. செத்துவிட்டதென்றே கருத வேண்டுமென்றார். மொழிக் கொள்கை மாற்றத்துக்கு ஸ்ரீ டட்லி சேனநாயக்கா பொறுப்பில்லாமல் இருக்கலாம். களனி மகாநாட்டில் அத்தீர்மானம் நிறைவேறியபோது அவர் அக்கட்சியிலிருந்து ஒதுங்கியிருந்தார். ஆனால் அவர் திரும்ப அக்கட்சியின் தலைவரான பிறகும், தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெறுவதற்கான முறையில் எவ்வித திட்டமான அறிக்கையையும் வெளியிடவில்லை.

அவருடைய தகப்பனார் பெரிய சேனநாயக்கா, சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டுமென்று செய்த ஏற்பாட்டை, யு. என். பி. மாற்றியபின், தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கையை அடியோடு இழந்தது. இனி அதைத் திரும்பப் பெறுவதென்பது சுலபமல்ல.

"டைம்ஸ்" பத்திரிகையில் ஒருகார்ட்டூன் சமீபத்தில்வெளியாயிற்று. "பாதுகாப்புச் சட்ட மசோதா கிளர்ச்சியாலும் அரசாங்கத்தை அசைக்க முடியவில்லை. இனி வரட்சிகாரணத்தைக்காட்டி, அரசாங்கத்தைவிரட்ட முயலுங்கள்" என்று ஜே. ஆர். ஜயவர்த்தன, டட்லியைபின்னால் இருந்து தூண்டுகிறாராம்! அதாவது இந்த அரசாங்கத்தை விரட்டி, தாம் பதவிக்குவர, ஜே. ஆர். எந்தக் காரணத்தையும் பயன் படுத்த ஆவலுடன் காத்திருக்கிறார் என்பதைக் காட்டுகின்றது அந்த கேலிச்சித்திரம்.

யு. என். பிக்கு, பத்திரிகை, பணம், செல்வாக்கு, கட்டுப்பாடு, நிர்வாக அனுபவம் எல்லாம் உள்ளன.

ஸ்ரீ டட்லிக்கு மக்களிடையே ஓரளவுசெல்வாக்குமிருக்கிறது. அவரது கூட்டங்களுக்கு அதிக மக்கள் வருகிறார்களாம் அடுத்த தேர்தலுக்கான முஸ்தீபுகளை இப்போதே அக்

(15 ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு

யாழ்ப்பாணம், விளம்பி ஆண்டு பங்குனி மீ 15 உ (28-3-59)

# நேருஜி காட்டும் வழி

விவசாயத்தில் மட்டுமன்றி கைத்தொழில் முதலிய பல துறைகளிலும் கூட்டுறவுக் கொள்கையைப் புகுத்த வேண்டிய சமயம் வந்துவிட்டதென்று இந்தியப் பிரதமர் நேருஜி வற்புறுத்தி வருகின்றார். இதுவரை ஏகபோகமான உரிமைகளை அனுபவித்து வந்தவர்களுக்கு இது பிடிக்காது. இதனாலேயே பல ராஜ்யங்களிலும் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் கிளம்பியுள்ளன.

நாகபுரியிலே கூடிய காங்கிரஸ் செய்த தீர்மானம் காங்கிரஸ்காரர்களிலேயே சிலருக்குப் பிடிக்காமல் எதிர்க்கின்றார்கள். இதைக்காரணமாகக் கொண்டு காங்கிரஸிலேயே பலத்த பிளவு ஏற்படுமோ என்று அஞ்சப்படுகின்றது. கூடுமானவரை பிளவுகள் ஏற்படாமல் தவிர்க்கவும், இப்பொருளாதார சீர்திருத்தங்களை அமைதியான முறையிற் செய்யவும் அரசாங்க மூலம் நேருஜியும் காங்கிரஸ் மூலம் இந்திரா காந்தியும் முயன்று வருகின்றனர்.

சொந்த நிலமானால் ஒருவர் அதில் அதிக ஊக்கம் காட்டி, அதன் அபிவிருத்திக்காகவும், உற்பத்தியைக் கூடுமானவரை உயர்த்தவும் சுயநலம் காரணமாகவாவது பாடுபடுவார்கள். எல்லாவற்றையும் கூட்டுறவுப் பண்ணையாக்கினால் பொதுச் சொத்துதானே என்று எல்லாரும் அசிரத்தை கொண்டு, முடிவில் உற்பத்தி குறைந்து, நிலமும் பாழாகுமென்றும், இதை எதிர்ப்பவர்கள் காரணம் கூறுகின்றார்கள். மேலும் கூட்டுறவு என்ற பெயரால், அரசாங்கமே சர்வாதிகாரியாகி, இப்பண்ணைகள் அரசாங்க அதிகாரிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாக மாறிவிடுமென்பது மற்றொரு முக்கிய ஆட்சேபனை.

ஒருவர் தம் குடும்பத்துக்காகப் பத்து அல்லது இருபது ஏக்கர் நிலத்தை வைத்துச் சாகுபடி செய்தால் அதைக் கூட்டுறவுப் பண்ணையாக்கும் உத்தேசமில்லை. 50 ஏக்கர் அல்லது ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்துக்கு மேல் வைத்திருப்பவர்கள், அதிகப்படி நிலங்களை நஷ்டஈடு பெற்று அரசாங்கத்திடம் கொடுக்க வேண்டுமென்றும் அவ்விதம் சேரும் நிலங்களை நிலமற்ற விவசாயிகளைக் கொண்டு கூட்டுறவுப் பண்ணைகளாக நடத்துவதென்றும், பெரிய பண்ணைகளே பொருளாதார முறையில் அதிக பலன் கொடுக்குமென்றும் சமாதானம் கூறப்படுகின்றது. ஆகவே ஒரு குறிப்பிட்ட அளவுவரை நிலம் வைத்துச் சொந்தத்தில் சாகுபடி செய்யக்கூடியவர்கள் இதனாற் பாதிக்கப்படமாட்டார்கள். கூட்டுறவென்பது அதில் சேர்ந்துள்ளவர்கள் தாங்களே இஷ்டப்படி பிறர் தலையீடின்றி நிர்வகித்து நடத்துவதுதான் அரசாங்கம் கூடுமான உதவி அளிக்கும். ஆகவே, அரசாங்க அதிகாரிகளின் ஆதிக்கம் ஏற்படுமென்பது அவசியமற்ற பீதி. கூட்டுறவுமுறை முடிவில் கொம்யூனிஸ்ட் சர்வாதிகாரத்தில் முடிந்து விடுமோ என்பது வேறு விஷயம்.

இன்று கைத்தொழில் முதலிய துறைகளில் அமைதியில்லை. வேலைநிறுத்தம் முதலிய கிளர்ச்சிகள் ஏற்படுவதுடன், தொழிலாளரின் கோரிக்கைகளும் வரவர அதிகரித்துக் கொண்டே போகின்றன. அதையும் கூட்டுறவுக் கொள்கைப்படி நடத்தி, அதில் வேலை செய்யும் தொழிலாளரையும் பங்குதாரராகச் செய்து, லாபத்தில் பங்களித்தால் அவர்கள் அத்தொழிலைத் தங்கள் சொந்தமாகக் கருதி, அதிக ஊக்கத்துடன் வேலை செய்வர். வீணாக வேலைநிறுத்தங்கள் நடைபெற மாட்டா. தொழில் அமைதிஏற்பட்டு, உற்பத்தியும் பெருகும் என்ற நோக்கத்துக்காகவே நேருஜி இதை வற்புறுத்தி வருகின்றார். இது மிகமுக்கியமான சீர்திருத்தம். நேருஜியின் தலைமையில் இந்தியாவில் நடைபெறும் இந்தப் பரீட்சை இலங்கைக்கும் பயன் பட வேண்டும்.

இங்கு விஞ்ஞானிகள் மாநாட்டில் விவசாயஉணவு அமைச்சர் பிலிப் குணவர்த்தனா பேசுகையில், நேருஜி பொருள் உற்பத்தி விஷயமாக, புதிய முறைகள் வேண்டுமென்று கூறியதை எடுத்துக் காட்டி அது இலங்கைக்கும் பொருந்துமென்றார். இங்கு ஏழ்மை எனும் பிணி நீங்கவேண்டுமாயின், சமதர்மக் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்றார். அவர் பேச்சுஅதிக கடுமையாக இருக்கலாம். ஆனால் இப்படி விஷயங்களில் நேருஜியின் தலைமையிலே இந்தியா செல்லும் நிதானமான வழிகளில் இலங்கையும் பின்பற்றுவது அதிக பத்திரமாகும்.

## 18 வயதில் வாக்குரிமை

18 வயதானவர்க்குவாக்குரிமை அளிப்பதை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஆசைப்பிள்ளை புதிய காரணம் சொல்லி வரவேற்றார். அவ்வாலிபர்கள் சுயநலம், கைலஞ்சம் முதலிய நோக்கங்களின்றி வாக்களிப்பரென்றும், இது ஜனநாயகத்துக்கு நல்லதென்றும் கூறினார். வகுப்பு, ஜாதி முதலிய வெறிகளுக்கு வாலிபர்கள் வயதானவரைப்போல் அவ்வளவாக உள்ளாவதில்லையாகையால் இந்த மாறுதல் வரவேற்கத்தக்கதே.

ஆனால் இவ்விஷயத்தில் சிறப்பாக ஆசிரியர்களுக்கும் பள்ளிக்கூட அதிபர்களுக்கும் அதிக பொறுப்பு உண்டு. தீவிரமான அரசியற் கிளர்ச்சிகளில் மாணவர்கள் நேரடியாக ஈடுபட்டால், அவர்களது படிப்புக் கெடுவதுடன், பலவித அரசியற் போட்டாபோட்டிகள் மிகுந்து, பள்ளிக்கூட ஒழுங்கும் கட்டுப்பாடுமே சீர்குலையும். மாணவர்களுக்கு மேலான கல்வி புகட்டுவதுடன், ஒழுங்குமுறை தவறாமல், கட்டுப்பாடாகப் பண்புடன்வாழ்க்கை நடத்தப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் தலைவர்களும் உதவ வேண்டும். துரதிருஷ்டவசமாக இன்று சில பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களும், அதிபர்களும் அரசியலில் தீவிர பங்கு பற்றுவதால், மாணவர்களின் நன்மைக்கு இது மாறாகின்றது.

வேறு விஷயங்களில் கவனம் திரும்பாமல் கல்வி போதிப்பதிலேயே பூரண கவனமும் காட்டுகிறவர்களிடமே மாணவர்களுக்கு விசேஷ அன்பும் மரியாதையுமுண்டு. எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் மிகப் புனிதமான பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களும் பள்ளிக்கூட அதிபர்களும், அரசியல் முதலிய வெளிவிஷயங்களில் தீவிரமாக ஈடுபடாமல், பயனுள்ள கல்வியை மாணவர்களுக்குப் போதித்து அவர்களை ஆளாக்க முழுநேரத்தையும் செலவிட்டு தங்களைச் சில கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கித் தியாகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்த அவசியம், இனி 18 வயதானவருக்கு வாக்குரிமை கிடைக்கும் போது அதிகமாகும்.

## வரட்சி

இலங்கையில் மீண்டும் வரட்சி ஏற்பட்டுப் பல இடங்களிலும் மக்களைப் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாக்குகின்றது. உதவிப்பணம் முதலியவை கொடுத்து அரசாங்கம் கஷ்ட நிவாரணத்துக்காக விசேஷ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இதில் பொது மக்களாகிய நமக்கும் ஒரு கடமையுண்டு. மக்கள் மனதிலே அன்பு என்பது வரண்டு, ஒவ்வொருவரும் சுயநலத்துக்காகவே வாழ்கின்றோம். தன்னை நேசிக்கவேண்டியதுதான். ஆனால் தன்னையே நேசிக்கப்படாது. அது ஆபத்து. பிறர் இன்புறக் கண்டு தாம் இன்புறுவோர் கற்றறிந்தோர். உண்மையான இன்பம் பிறருக்கு உதவுவதில்தான் உள்ளது. இக்காலத்தில் சுயநலமும் பேராசையும் அளவு கடந்து, பிறரை எவ்வளவு சங்கடப்படுத்தியும் தான் வாழ்ந்தாற் போதுமென்ற அன்பற்ற எண்ணங்கள் அதிகமுள்ளன.

நம் மனதில் அன்பு வரண்டதை இடித்துக்காட்டி அதைத் திருத்தவே அன்பே வடிவான இறைவன் இந்த வரட்சியையும் ஓர் எச்சரிக்கையாகச்செய்துள்ளான்போலும். இது எப்படியாயினும், நாம் சுய நலப் பேராசைகளை விட்டு, பிறருக்கு உபகாரமாக அன்பு வாழ்வு வாழ இந்த வரட்சி ஒரு பாடமாகுமாயின் இதுவும் ஒரு நன்மைக்காகத்தான்.

## திபேத்

திபேத்திலே தலைலாமாவின் இராணுவப் படைகளுக்கும், ஆதிபத்திய அதிகாரம் வகிக்கும் சீன கொம்யூனிஸ்ட் படைகளுக்கும் கைகலப்பு ஏற்பட்டு, அங்கு நிலைமை மோசமாகி வருவதைப்பற்றி இந்தியப் பிரதமர் நேருஜி கவலை தெரிவித்துள்ளார். சீன கொம்யூனிஸ்ட்டுகள், ஏகாதிபத்திய ஆசைகொண்டு, திபேத்தை ஆக்கிரமித்து அங்கிருந்து இந்தியாவையும் ஏப்பமிட முயலுவார்களோ என்ற பீதியும் சில வட்டாரங்களில் இருக்கலாம். ஆனால் திபேத்திலுள்ள நிலைமைபற்றித் தெளிவான தகவல் கிடைக்காத நிலையில் நாம் திட்டமான கருத்து எதுவும் கொள்வதற்கில்லை.

புதிய அரசியல் மாறுதல்கள் ஏற்படும் நாடுகளில் இவ்வித சம்பவங்கள் ஏற்படுவது அசாதாரணமல்ல. ஆனால் சீன கொம்யூனிஸம் ஏகாதிபத்திய முறைகளைக் கையாண்டு சுதந்தரமான அண்டைநாட்டு மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த ஆசைகொள்ளுமாயின், அது ஆபத்தானது. சகிக்கப்படாதது. இந்தியாவின் எல்லையிலே திபேத் இருப்பதால், இது பற்றி இந்தியா விசேஷ கவலைப்படக் காரணமுண்டு. நல்லவேளையாக நேருஜிக்கும் சீனப் பிரதமர் சௌ என் லாய்க்கும் நட்பும் ஒத்துழைப்பும் இருப்பதாலும், எல்லாச் சிக்கல்களையும் பலாத்காரமின்றி அமைதியாகத் தீர்க்கவேண்டுமென்ற கருத்து பலப்பட்டு வருவதாலும், திபேத் நெருக்கடி பெரிய அளவில் வராமல், சுமுகமாகத் தீர்க்கப்படும் என்றே நம்ப இடமுண்டு. இன்றேல் புது சீனம், சிறப்பாக இந்தியாவுள்ளிட்டு அண்டையிலுள்ள ஆசிய நாட்டு மக்களின் அபிமானத்தை இழக்கநேரிடும்.

## ஈராக்

பாக்தாத் ஒப்பந்தத்திலிருந்து ஈராக் விலகியது எதிர்பார்க்கப்பட்டதே. இதை எதிர்பார்த்தே பாகிஸ்தானைப் பலப்படுத்த அதனுடன் புதிய இராணுவ ஒப்பந்தத்தை அமெரிக்கா செய்து கொண்டிருக்கவேண்டும். இன்றேல் இந்தியாவின் சந்தேகங்களுக்கு அது தன்னை இச்சமயம் உட்படுத்திக் கொண்டிருக்கத் தேவையில்லை. பாக்தாத் ஒப்பந்தத்திலிருந்து ஈராக் விலகினதும் ருஷியாவே கதி என்று அது அந்தப் பக்கம் சாய்ந்துவிடுமென்று கருதுவதற்கில்லை. ருஷியா இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஈராக்குக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் தாராளமாகக் கொடுக்கலாம். என்றாலும் அரபு நாடுகள் எந்த வல்லரசு கோஷ்டிகளுடனும் சேராமல், சுதந்தரமாக முன்னேறவே விரும்புகின்றன. வடக்கு ஈராக்கிலே மோசூல் புரட்சி காரணமாக எகிப்துக்கும் ஈராக்குக்கும் பிளவு ஏற்பட்டு அரபு ஒற்றுமை சிதைவதற்கான ஆபத்து ஏற்பட்டது. இதைத் தவிர்க்க, அரபுவும், யுகோஸ்லேவிய தலைவர் டிட்டோவும் முயன்று வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. ஈராக் தலைவர் காஸிம், எகிப்தியநாஸரைத் தாக்கவேண்டாமென்று ஈராக் பத்திரிகைகளுக்கு யோசனை கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. எகிப்தை விரோதித்துக்கொள்ளவோ, ருஷியாவின் பக்கம் சாய்ந்துவிடவோ, அவர் விரும்பவில்லை. அமெரிக்காவின் நட்பையும் உதவியையும் இழக்கவும் அவர் இஷ்டப்படவில்லை. இந்தியாவைப் போல் நடுநிலைமை வகித்து இரு வல்லரசு கோஷ்டிகளின் உதவிகளையும் கூடுமானவரை பெறவும், அரபு மக்களின் ஒற்றுமையில் பிளவு ஏற்படுத்தாமலும், தம் நாடு முன்னேற வேண்டுமென்ற ஆவலுடனேயே அவர் கூறியும் செய்தும் வருகின்றார். மேற்கு ஆசியாவிலே நடுநிலைமைக் கொள்கை பலப்படுவது, சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்கும் வழி செய்யும்.

## தையலின் தபசு

சென்ற புதன் கிழமையன்று தையல்நாயகி அம்மன், தலைவிரி கோலமாக, கோவிலுக்கு வெளி மண்டபத்தில் தபசு செய்தாள். ஏன்? தனக்கு இறைவனே கணவனாக வர வேண்டுமென்பதற்காக, அன்ன ஆகாரமின்றி அவர் செய்த அந்தத் தவத்தின் சக்தியால் மாலையில் சந்திரசேகரராகச் சுவாமி எழுந்தருளி மாலையிட்டு இருவருமாகத் திருவீதியிலே உலா வந்ததன் பிறகு கன்னி ஊஞ்சல், திருக்கல்யாணம், புஷ்பப்பல்லக்கில் ஊர்வலம் எல்லாம் விமரிசையாக நடந்தன.

இதைக்கண்டதும் எனக்கு காந்தி அடிகள், 32 ஆண்டுகளுக்கு முன்பாக யாழ்ப்பாணம் இராமநாதர் கல்லூரியிலே மாணவிகள் கூட்டத்தில் செய்த ஒரு பிரசங்கம் ஞாபகம் வந்தது.

"இங்கே வரதட்சணை அல்லது சீதன வழக்கம் அதிகம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். படித்த பெண்களாகிய நீங்கள் இந்தக் கூடாத பழக்கத்தை எதிர்க்க வேண்டும். வரதட்சணை கேட்பவரை மணப்பதில்லை என்று நீங்கள் கட்டுப்பாடாக உறுதிகொள்ள வேண்டும். இந்துக்களாகிய உங்களுக்குப் பார்வதி எப்படித் தனக்கேற்ற நாயகனை மணந்தாள் என்பது தெரியும்.

"பரமசிவனைமணம் புரிய மலைமகள் பார்வதி தவம் செய்தாள். நாரதர் வந்தார். ஏன் அம்மா அரசகுமாரியாகிய நீ இப்படித் தவம் செய்கிறாய்? அந்தச் சங்கரனார்க்குக் குலம் இல்லை. தாய் தந்தை அறியாத அனாதி. சுடுகாட்டுச் சாம்பரைப் பூசிக்கொண்டு திரியும் ஒரு பித்தன். அவரை மணம் புரிய நீ தவமிருப்பது ஒரு விந்தை" என்றார்.

இப்பேச்சுகளைக் கேட்ட பர்வதராஜ புத்திரி, தன் செவிகளை மூடிக்கொண்டு, "இது என் சொந்த விஷயம், நீர் இதில் தலையிடத்தேவையில்லை" என்று கூறியதும் நாரதர் ஆசீர்வதித்துச் சென்றார். பின்னர் பரமசிவனே., பார்வதியின் தபசக்தியைக் கண்டு வியந்ததாகக் கதை.

தனக்குரிய நாயகனைச் சீதனம் கொடுத்துப் பார்வதி விலைக்கு வாங்கவில்லை. தன் தவசக்தியாலேயே பெற்றாள். பார்வதி காட்டிய அந்த மேலான வழியை, நீங்களும் பின்பற்றி, யாழ்ப்பாணத்தில் சீதனக்கொடுமை இல்லாமற் செய்வது பெண்களின் இக்கஷ்டத்தை, அவமதிப்பை நீக்கவேண்டும்" என்றார்.

வருஷம் 30 க்கு மேலாகியும், இங்கு சீதன வழக்கம் இன்னும் நீங்கவில்லை. இது காரணமாகவும், அரசாங்க உத்தியோக மோகம் இன்னும் விடாததாலும், பல பெண்கள் கன்னியாகவே விவாகமாகாமல் மனம் புழுங்குகின்றனர்.

வண்ணையில் தையல்நாயகி, வருஷாவருஷம் தவமிருந்து தன் புனிதமான கணவனைப் பெற்றதை ஞாபகமூட்டிவருகிறாள். அந்த வழியை, காந்தி அடிகள் கூறிய யோசனையை நமது பெண்குலம் துணிச்சலுடன் கடைப் பிடித்தால் ஈழத்திலே நம் பெண்குலத்துக்கு ஏற்பட்டுள்ள விவாகப் பிரச்னை வெகுவாகத் தீர்ந்து, நம் பெண்குலமும் அதனுடன் நம் சமூகமும தலைநிமிர்ந்து முன்னேற வழிபிறக்குமல்லவா?

— ஐயாறன்

# 'தீதும் நன்றும் பிறர்தர வாரா'

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வைபவம்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று நம்மில் பலரும் சொல்லுகின்றோம். ஆனால் அதற்கு அடுத்த அடியான "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்பதை விட்டுவிடுகிறோம். நமது சுக துக்கங்களுக்கு நாமேதான் காரணம். பிறர் மீது குற்றம் கூறுவதைத் தமிழர்களாகிய நாம் நிறுத்தவேண்டும். அதிகம் பேசுவதை விடுத்து, பிறருக்குத் தன்னலமற்ற சேவை செய்யவேண்டும்" என்று சேர் கந்தையா வைத்தியநாதன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 12வருடங்களுக்குப்பின் கொண்டாடிய பரிசளிப்புவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்கத் தமிழ் காலத்தில் தமிழர்நிலை மிகவும் சிறப்பாக இருந்தது. ஆனால் ஏழாம் நூற்றாண்டில்தான் சைவசமயத்தவருக்குத் தமிழ் நாட்டில் அதிக இன்னல்கள் ஏற்பட்டன. அந்த இன்னல்களிலிருந்து விடுபடத் தேவாரங்கள் போன்ற பல தமிழ் இலக்கியங்கள் ஏற்பட்டன. அந்த இலக்கியங்களே நமக்கு இன்று அதிகம் பயன்படுவதும் தேவையுமாகும். தெய்வ பக்தி, கட்டுப்பாடு, தன்னடக்கம், தியாகம் முதலிய பண்புகள் தாம் தமிழருக்குத் துன்பங்களைத்தீர்த்து நல் வழி காட்டவல்லன" என்றார்.

கல்லூரி அதிபர் திரு.ஆசைப்பிள்ளை கல்லூரி அறிக்கையைப் படிக்கையில் 18 வயது வாலிபருக்கும் வாக்குரிமை அளிப்பதை வரவேற்றார். தன்னலமற்ற வாலிபர்கள் தேசபக்தியுடன் வாக்களிப்பது அரசியலுக்கு நல்லதென்று கூறியதுடன், ஏற்கனவே பள்ளிக்கூடங்களிற் பல பாடங்கள் மூலம் அரசியல் புகுந்துள்ளதென்றும், அரசியல் என்பது, பதவிப் போட்டிகளல்லாமல், நாட்டு, உலக அரசியலில் சிரத்தை கொண்டு ஈடுபடுவதாயின் அது வரவேற்கத் தக்கதே என்றும் கூறினார். பி. ஏ. பட்டதாரி ஆசிரியர் நியமனத்தைக் கட்டுப்படுத்தி அரசாங்கம் வெளியிட்ட சுற்றறிக்கை, வளர்ந்து வரும் இக் கல்லூரிக்கு அதிக இடையூறு செய்யுமென்றார். பல்கலைக்கழக புகுமுக பரீட்சையில், இலங்கையிலே இக் கல்லூரி முதன்மையாகவுள்ளதென்று பலத்த கரகோஷங்களுக்கிடையே அறிவித்தார்.

ஸ்ரீமதி வைத்தியநாதன் மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

## உயிர்த்தெழுந்த திருநாளை முன்னிட்டு
## யாழ்ப்பாணம் மேற்றிராணியாண்டவர் அவர்கள் விடுத்துள்ள செய்தி



அதி வண. டக்டர் ஜே. எமலியானுஸ்பிள்ளை அவர்கள்.

கிறீஸ்துவின் உயிர்த்தோற்சவம் உலகிற்குப் பல உண்மைகளை உரைக்கின்றது. கிறீஸ்து நாதர் தமது மரணத்தினாலும், உயிர்ப்பினாலும் தாம் முழுமுதற் கடவுள் என மறுக்கொணா அத்தாட்சி தருகின்றார். உலகம் அற்பம் மடைத்தனம் எனமதிப்பவை இறை அன்பின் பேராலும், மக்கள் இரட்சிப்புக்காகவும் நிறைவேற்றப் பெற்றால் அவை உண்மை உயர்வும், மதி நுட்பமும் பொருந்தியவையாகும் எனக் காட்டியுள்ளார்.

ஆன்மார்த்தமுயற்சியின் முக்கியத்துவத்தையும் லௌகீக கருமங்கள் நீதிக்குப் பிற்பட்டவை என்பதையும் கிறீஸ்துவின் உயிர்த்தெழுதல் கூறுகின்றது.

உத்தம தனம் இறுதியில் வெற்றிபெறும். இறை அன்பு எவ்வெதிர்ப்பையும் மேற்கொண்டு ஜெயம் பெறும் என மங்களம் பொங்கும் உத்தானத் திருவிழா எமக்கு உணர்த்துகின்றது.

## தொகுதிகளின் எல்லைகள் ....

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வைத்துச் சிங்களத் தொகுதிகளை வகுக்கச் செய்வது, முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதாகச் சில தொகுதிகளையேனும் அமையச் செய்வது, மேற்கண்ட இருவித போக்குக்கும் இடமளிக்காத வகையில் காரியத்தைச் சமாளிப்பது என்பனவே அந்த மூன்றுவித கருத்துக்களுமாகும்.

### நேரில் அறிந்தனர்

தமிழரசுக் கட்சி தன் அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன் கிழக்கு மாகாணத்துக்குப் போய் நிலைமையைப் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருந்தது.

தமிழ்பேசும் மக்களில் ஒரு பகுதியினரான முஸ்லிம்களுக்கு எந்த வகையிலும் குந்தக மேற்படாத வகையில் தங்கள் சிபார்சு அமைய வேண்டுமென்பதே தமிழரசுக் கட்சியினரின் முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது. இதனால் தான் அவர்கள் நேரிற் சென்று தங்கள் கட்சியோடு தொடர்புடைய பிரமுகர்களையெல்லாம் சந்தித்துப் பேசினர்.

### வடமாகாணம்

கிழக்கு மாகாணத்தின் நிலை ஒருபுறமிருக்க வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மிக மிக வேடிக்கையான கற்பனை தொகுதிகளெல்லாம் வகுக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கற்பனை வாதிகளின் பிடியிற் பருத்தித்துறைத் தொகுதி தான் பெரும்பாலும் சிக்கிக்கொண்டு அவதிப்படுகிறது.

அரசியற் கட்சிகளும் சரி தனிப்பட்ட அரசியல் வாதிகளும் சரி தங்கள் வெற்றிக்குச் சாதகமான வகையில் ஒவ்வொரு தொகுதியையும் மாற்றியமைத்துவிடவேண்டும் என்பதையேகுறிக்கோளாகக்கொண்டிருக்கின்றனர். இந்தவகையில் அவர்கள் ஒவ்வொரு தொகுதியையும் துண்டு போட்டும் இணைத்தும் கனவுகண்டு கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாகப் பருத்தித்துறைத் தொகுதியை எடுத்துக்கொண்டு அதுபற்றிய பல வகையான அபிப்பிராயங்களையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

### பருத்தித்துறை

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள உடுப்பிட்டி, தொண்டமானாறு ஆகிய பகுதிகளைக் கோப்பாயுடன் சேர்த்துவிடுவது நல்லதென்று ஒரு சாரார் சொல்லுகின்றனர். இன்னொரு சாரார் அத்தொகுதியின் கிழக்குப் பக்கத்தைச் சாவகச்சேரியுடன் சேர்த்துச் சாவகச்சேரியின் தென் பகுதியில் புதிய குடியேற்றத் திட்டப் பகுதிகளையடக்கி மற்றொரு தொகுதியைச் சிருட்டிக்கலாம் என்று கருதுகின்றனர். தற்போது இருப்பதுபோல் அமைவதுதான் தங்களுக்கு வெற்றிதருமென்று மற்றொரு வட்டாரம் அங்கலாய்க்கிறது.

இப்படியே ஒவ்வொரு தொகுதிகளைப் பற்றியும் பல விதமான அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன.

இந்தக் கற்பனை தொகுதிகள் எல்லாம் எந்த அளவிற் கைகூடப் போகின்றன என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒரு காரியமாகும்.

தொகுதி நிர்ணய விசாரணைச் சபையிடம் ஒரே முகமான அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் பிரச்சனை சுலபமாகத் தீர்ந்துவிடலாம் என்பது நடுநின்று ஆராய்பவர்களின் கருத்தாகும்.

## நெசவுத் தொழில் விருத்தியுற யோசனை

கைத் தொழில் விருத்தி நாட்டின் செல்வ நிலையைச் சீராக்கும் சக்திவாய்ந்த தென்பதை இன்று எல்லாரும் உணர்ந்து வருகின்றனர். முக்கியமாகக் குடிசைக் கைத்தொழில்கள் நாட்டிற் பல்கிப் பெருக வேண்டுமென்பதைத் தலைவர்களும், அரசாங்க அதிகாரிகளும் பொதுக் கூட்டங்களில் வற்புறுத்தி வருகின்றனர். சமீபத்திற் பண்டத்தரிப்பு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆண்டு விழாவிற் பேசிய வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் உள்நாட்டு நெசவுத் தொழிலை மக்கள் ஆதரிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார். உள்நாட்டு நெசவுத் தொழிலில் விருத்தியடைய வேண்டுமாயின் கூடிய மட்டிற் கைத்தறி ஆடைகளையே அனைவரும் அணிய வேண்டுமென வட்டுக்கோட்டைப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

வண. எஸ். டி. ஆசீர்வாதம் இவ் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

## தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தின் எதிரொலி

யாழ்ப்பாணம்

வருடாந்தக் கூட்டத்தில் நிகழ்ந்த ஊழல்கள்பற்றி ஆராய மற்றொரு பொதுக்கூட்டத்தை நடத்துமாறு ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் அனுப்பியிருந்த கோரிக்கையை யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கம் நிராகரித்துவிட்டது.

சென்ற புதன்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சபையைவிட்டு இடையில் வெளியேறியவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் பற்றித் தமிழாசிரியர் சங்கத்தின் நிர்வாகசபைக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

விசேடபொதுக் கூட்டத்தை எதற்காகக் கூடவேண்டுமென்பதையும் வருடாந்தக்கூட்டத்தில் நடந்த ஊழல்கள் எவையென்பதையும் விளக்கமாகத் தெரிவிக்கும் பட்சத்தில் விசேட பொதுக் கூட்டம் நடத்துவது பற்றி ஆலோசிக்கலாமென முடிவு செய்யப்பட்டது.

## வரவேற்பு வைபவம் நடைபெறாததேன்?

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வித்துவசபையினால் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகருக்கு அளிக்கப்பட இருந்த வரவேற்பு வைபவம் பெரும் ஏமாற்றத்தில் முடிந்தது. இக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு வந்திருந்த கலைஞர்களும் பொதுமக்களும் வைபவம்நடைபெற மாட்டாதென்பதைக் கடைசிநேரத்தில்தான் அறிந்து கொண்டனர்.

இசையரசு தண்டபாணி தேசிகர் ஏதோ காரணத்தால் அதில் பங்குபற்ற முடியாமற் போய்விட்டதெனவும் அவரை எப்படியும்அழைத்துவந்து வைபவத்தை நடத்துவதற்காகக் கடைசிவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்காமற் போய்விட்டனவென்றும் கூட்டத்துக்கு வந்து ஏமாந்தவர்கள் மத்தியிற் பேசிக்கொள்ளப்பட்டது.

இசைக் கலைஞர்களிடையே பெரும் பரபரப்பையுண்டாக்கியிருக்கும் இச்சம்பவம் பல வகையான வதந்திகளுக்கும் இடமளித்துள்ளது.

## எதிர்கால வாழ்வுக்கு உதவாத கல்வித் திட்டம்

கோப்பாய் ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று திரு. எம். எஸ். இராசசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா பேசியதாவது:

இலவசக் கல்வி முறை வந்ததும்,பெற்றோர் தம்பிள்ளைகளுக்குத்தொழிற் கல்வியைப்பயிற்றாமல் உத்தியோகங்கள் கிடைக்குமென்று எண்ணியே, அவர்களுக்குக் கல்வி கற்பித்தனர். இன்றைய கல்வித் திட்டம் மாணவரின் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையாதிருப்பது துக்கத்துக்குரிய தொன்று.

எமது நாட்டுக்குத் தேவையான பெருந்தொகை பீடிவேறு நாடுகளிலிருந்தே இறக்குமதியாகிறது. இப்போது பீடி இறக்குமதியை அதிகாரிகள் ஐம்பது சதவீதம் குறைத்துள்ளதால் உள்நாட்டு பீடி உற்பத்தி விருத்தியடைவதாக அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

கோப்பாய் வடக்குக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. கே. இ. குமாரசாமி கிராமத்தின் சில முக்கிய தேவைகளை எடுத்துக் காட்டிக் கூறியதாவது: சந்தை வசதி கிடையாமல் இப்பகுதி மக்கள் கஷ்டப்படுகின்றனர். அவர்கள் ஏறத்தாழ நாலு மைலுக்கு அப்பாலிருக்கும் சுன்னாகம், கல்வியங்காடு ஆகிய இடங்களிலுள்ள சந்தைகளுக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. கோப்பாய் நாற்சந்திக்குச் சமீபத்திலுள்ளமுடிக்குரியநிலத்திற்சந்தைக்குரியகட்டடம் ஒன்றை அமைத்தல் சாத்தியமானது. இத்தேவையைப் பூர்த்தியாக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

# ஈராக்கில் அமைதியற்ற நிலை

## இராணுவ சர்வாதிகாரம் நிலைக்குமா?

— வ. மகாதேவன் —

மேற்கு ஆசிய நாடாகிய ஈராக்கில் அமைதியற்ற நிலை காணப்படுகின்றது எனச் செய்திகள் கூறுகின்றன. இந்நிலைக்குரிய காரணங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### 1958 வரை முடியாட்சி

1958 ஜூலை மாதப் புரட்சிக்குமுன் ஈராக் ஒரு முடியாட்சி நாடாக இருந்தது. முதலாவது உலக மகாயுத்தத்தின்பின் அமைக்கப்பட்ட இந்நாடு ஈரானுக்கும் அரேபியாவுக்கும் இடையேயுள்ள நாடுகளுள் ஒன்ருகும். இதன் பழைய பெயர் மெசொப்பொற்றேமியா. வடக்கே துருக்கியும், வடமேற்கே ஐக்கிய அரேபியக் குடியரசைச்சேர்ந்த சீரியாவும், மேற்கே ஜோர்டனும், தெற்கே அரேபியாவும், கிழக்கே ஈரானும் அயல்நாடுகளாக இருக்கின்றன. 1923 இல் கைச்சாத்திடப்பட்ட லௌசான உடன்படிக்கையின்படி துருக்கி ஈராக்கை ஆக்கிரமித்து ஆட்சிபுரியும் நோக்கத்தைக் கைவிட்டது. பெய்சால் மன்னரின் குடும்பத்தவர் 1958 ஜூலை வரை ஆட்சிபுரிந்து வந்தனர்.

### மண்ணெய், பேரீச்சம்பழம்

உலகிலுள்ள பிரதான மண்ணெய் ஏற்றுமதிசெய்யும் நாடுகளுள் ஈராக்கும் ஒன்று. நாட்டின் தேசிய வருமானத்தில் மூன்றிலொன்று மண்ணெயில் இருந்து பெறப்படுகின்றது. உலகில் பெறப்படும் பேரீச்சம்பழத்தில் 80 வீதம் ஈராக்கில் இருந்து கிடைக்கின்றது. கோதுமை, வாற்கோதுமை, அவரை, நெல் ஆகியனவும் விளைவிக்கப்படுகின்றன. நாட்டின் மொத்த நிலப்பரப்பு 1,75,100 சதுர மைல்; சனத்தொகை 65,38,109; தலைநகர் பாக்தாத் சென்ற ஜூலை மாத புரட்சியின்பின் நாட்டின் முதலமைச்சராக மேஜர் - ஜெனரல் அப்துல் கரிம் கசிம் கடமையாற்றிவருகிருர்.

### இராணுவப் புரட்சி

1959 மார்ச் மாத ஆரம்பத்தில் வட ஈராக்கில் உள்ள மிகப்பெரிய நகரமான மொசலில் பாக்தாத் அரசாங்கத்துக்கு எதிராக ஒரு இராணுவப் புரட்சி நடைபெற்று முறியடிக்கப்பட்டது. இப் புரட்சிக்குத் தலைமை தாங்கி உயிர்நீத்தவர் ஐந்தாவது இராணுவக் கோஷ்டியின் தளபதியாக இருந்த கர்னல் அப்டெல் வஹாப் செவாவ். இக் கலவரத்தில் ஏறத்தாழ 2,000 மக்கள் கொல்லப்பட்டனர் எனச் செய்திகள் கூறுகின்றன. கர்னல் சவாவின் அனுமதியின்றி பாக்தாத் அரசாங்கத்தின் அனுமதியுடன் நடைபெற்ற கொம்யூனிசத்தை ஆதரிக்கும் கட்சிகளின் கூட்டு மகாநாடு இப்புரட்சிக்கு உடனடிக் காரணமாக இருந்த போதிலும் வேறுபல அடிப்படைக் காரணங்களும் இருந்திருக்கின்றன.

### காரணங்கள்

புரட்சிவாதிகள் தெரிவித்த காரணங்களுட் சில பின்வருமாறு:

1. பாக்தாத் அரசாங்கத்தின் கொடுங்கோலாட்சி 2. பாக்தாத் அரசாங்கம் கொம்யூனிசத்தை ஆதரித்துவருதல் 3. பெப்ரவரி மாதத்தில் செய்யப்பட்ட அமைச்சர்அவை மாற்றங்கள். 4. அரசாங்கம் அராபிய மக்களின் ஒற்றுமைக்கு உழைக்கும் கொள்கையைப் புறக்கணித்து வருதல்.

ஐக்கிய அராபிய குடியரசுடன் ஈராக் இணைக்கப்படவேண்டும் என்ற கொள்கையை ஆதரித்த கர்னல் அரெப் விசாரணை செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டது அவருடைய நண்பர்களை அரசாங்கத்தின்மீது ஆத்திரமடையச்செய்தது. சவாவும் அரெப்பின் நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய அராபியக் குடியரசுத் தலைவரான ஜெனரல் நாஸார் ஈராக் முதலமைச்சராகிய ஜெனரல் கசீமைச் சந்தித்து அளவளாவ விரும்பினர். கசீம் கெய்ரோவுக்குச் செல்லவோ அல்லது நாஸரை பாக்தாத்துக்கு அழைக்கவோ இதுவரை முயற்சிக்கவில்லை. மேலும் எகிப்தில் கொம்யூனிஷ்ட் கட்சி சட்டவிரோதமாக்கப்பட்டும் ஈராக்கில் சட்டவிரோதமாக்கப்படாமலும் இருக்கின்றது.

### புதிய அமைச்சரவை

ஈராக் அமைச்சர் அவை பெப்ரவரி மாதத்தில் மாற்றியமைக்கப்பட்டபொழுது இடதுசாரிகள் அமைச்சர் அவையில் சேர்க்கப்பட்டனர் என கெய்ரோ பத்திரிகைகள் குற்றஞ் சாட்டின. ஆனல் புதிய அமைச்சர்கள் இடதுசாரி இயக்கத்தவரல்லர் என்பதற்குக்கூடிய ஆதாரமிருக்கின்றது. புதிய அமைச்சர் நால்வர் இராணுவவீரர்கள்; இருவர் அரசாங்க உத்தியோகம் வகித்தவர்கள்; ஏனைய இருவருள் ஒருவர் தேசிய சனநாயகவாதி; மற்றவர் முன்பு ஐக்கியநாடுகள் தாபனத்தில் ஈராக்கின் பிரதிநிதியாக இருந்தவர். எனவே, அரசாங்கத்தின் போக்கு கொம்யூனிஷ்டுகளுக்கு முரணான போக்காக இருக்கிறதென்றே கூறவேண்டும். கொம்யூனிஷ்டுகளும் இடதுசாரிகளும் நாட்டின் வீதிகளில் பலமுறை ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தியிருக்கின்றனர். உதாரணமாக, ஒரு அமெரிக்கப் பிரதிநிதி முதலமைச்சர் கசீமைச் சந்திக்க வந்தபொழுது நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்களையும் அடக்குவதற்கு இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையும் குறிப்பிடலாம்.

### மார்ச் மாதக் கலகம்

மார்ச் மாதக் கலவரம் ஈராக் இராணுவம் பிளவுபட்டிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டுகின்றது. கசீம் ஐக்கிய அராபிய குடியரசுடன் ஈராக்கை இணைக்காமல், இடதுசாரிகளுக்கு இடமளித்து அரசாங்கத்தை வெற்றிகரமாகக் கொண்டுநடத்த முடியுமா? நாட்டிலுள்ள அமைதியற்ற நிலை உள்நாட்டு யுத்தமாக விருத்தியடையுமா? ருஷியாவும் மேற்கு வல்லரசுகளும் தலையிடாமலிருப்பார்களா? என்ற கேள்விகள் எழுகின்றன.

ருஷியாவுக்கும் ஐக்கிய அராபியக் குடியரசுக்கும் இடையே 'கெடுபிடி யுத்தம்' உச்சநிலையை அடைகின்றது. ஐக்கிய அராபியக் குடியரசும் ஈராக்கும் தம் பிணக்குகளைத் தீர்த்து ஒரு உடன்பாட்டுக்கு விரைவில் வரவேண்டும் என ருஷிய முதலமைச்சர் கேட்டிருக்கிருர். ருஷியா ஈராக்கில் கொம்யூனிஷ்டுகளுக்கு ஆதரவளித்து வருவதாகத் தலைவர்நாஸர் குற்றம் சாட்டி ருஷியாவின் தலையீட்டைக் கண்டனஞ் செய்து, "கொம்யூனிஷ்ட் ஏகாதிபத்தியவாதத்தை ஐக்கிய அராபிய குடியரசு முழுமூச்சுடன் எதிர்த்துப் போராடும்.," எனக் கூறியிருக்கிருர். ருஷியா ஈராக்குக்கு பொருளாதார உதவியும் தொழில்நுட்ப உதவியும் அளிக்க முன்வந்திருக்கிறது. ஆகவே, மத்திய கிழக்கில் ஐக்கிய அரேபிய இயக்கம் தலைதூக்குமா? அல்லது சீர்குலையுமா! என்ற வினக்களுக்குக் காலம்தான் பதிலளிக்கவேண்டும்.

குறிப்பு: [ஐக்கிய அராபியக் குடியரசு—எகிப்தும் சீரியாவும் இணைக்கப்பட்டு 1-2-58 இல் தாபிக்கப்பட்டது.]

# சென்ற வாரத்தில்

### வெள்ளி 20

வாஷிங்டனில் அமெரிக்க ஜனதிபதியை, பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் சந்தித்து ருஷியாவுடன் 'உச்சி' மகாநாடு கூடுவதைப்பற்றிப் பேசினர்.

இலங்கைக்கு இஸ்ரேலின் சரக்குகளுடன் சென்ற மேற்கு ஜெர்மன் கப்பலை எகிப்து தடுத்து நிறுத்திச் சரக்குகளை இறக்கிவிட்டு, சூயஸ் வழியை மறித்ததை இஸ்ரேல் ஐ. நா. பாதுகாப்புச் சபையிடம் ஆட்சேபித்துள்ளது.

சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் கஹாவத்தையில் தார்ப்பூச்சு இயக்கத்தைத் தழுவி ஏற்பட்ட இரட்டைக்கொலை வழக்கில் எஸ். எம். செல்லத்துரை, எஸ். பாஸ்தியான் பிள்ளை என்ற இருவரும் நிரபராதிகள் என்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

30 கோடி ரூபாய் மூலதனத்தில் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியை நடத்த இலங்கை விவசாய உணவு மந்திரி திட்டமிட்டிருக்கிருர்.

மாலைத்தீவில் புரட்சியை மூட்டிவிட்டதற்கு அங்குள்ள இலங்கையரான மேஜர் பிலிப்ஸ் காரணமல்லவென்று பிரிட்டிஷ் அரசாங்கம் மறுத்துள்ளது.

அடுத்த மே மாதத்தில் 'இந்திய மொழிச் சிறுபான்மையோர்' மாநாடு சென்னையில் கூடுமென்று டில்லி லோக் சபையின் உள்நாட்டு அமைச்சர் அறிவித்தார்.

இந்திய ராஷ்டிரபதி இராஜேந்திரருக்குத் தெற்கு வியட்ணும் தலைநகரான சைகோனில் விசேஷ வரவேற்பு.

### சனி 21

தொழிற்சங்கங்கள் அரசியல்வாதிகளின் கைப் பாவைகளாக இன்றி சுதந்திரமாக இருக்கவேண்டுமென்று பிரதமர் பண்டாரநாயக்கா கொழும்பில் ஒரு தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் கூறினர்.

கிழக்கு மேற்கு வெளிநாட்டு மந்திரிகளின் மகாநாடு மே 11-ந் திகதி நடைபெறுவதை ருஷியா ஆதரிக்கிறது.

நயாஸாலந்தில் ராணுவப் போலிசார் ஒரு ஆபிரிக்கப் பெண்ணைச் சுட்டுக் கொன்றனர். 17 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அமெரிக்க விஞ்ஞானிகள் அனுப்பிய ஒரு ராக்கெட் வாணம், வீனஸ் எனும் சுக்ரன் கிரகத்தைத் தாக்கி அங்கிருந்து ஒரு ரேடர் எதிரொலியும் கிடைத்துள்ளதாம். மனிதன் மற்ருெரு கிரகத்துடன் தொடர்பு கொண்டது இதுவே முதல் தடவை.

இனி இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்துக்கான லைசன்ஸ் இலங்கையருக்கு மட்டுமே வழங்க வேண்டுமென்று வர்த்தக மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையில் செனேட்சபை ஒழிக்கப்படுவதுபற்றி அரசாங்கக் கட்சியும் சமசமாஜ, கொம்யூனிஸ்ட் கட்சிகளும் உடன்பாடு செய்துகொண்டுள்ளன.

திபேத்தில் தலைலாமாவின் துருப்புகளுக்கும் சீன இராணுவத்துக்கும் சண்டை. பலர் மாண்டனர்.

எல்லை காந்தி எனும் அப்துல் கபூர்கான் இராஜ துவேஷ குற்றத்துக்காகச் சென்ற ஆண்டில் விதிக்கப்பட்ட 14 ஆயிரம் ரூபாய் அபராத தண்டனையை ஆட்சேபித்துச் செய்த அப்பீல் நிராகரிக்கப்பட்டது. அவர் மே. பாகிஸ்தானில் தடுப்புக்காவலில் இருந்து வருகிருர்.

### ஞாயிறு 22

தீபேத்தில் தலைலாமாவைக் கைதுசெய்து, நாடுகடத்த சீன ராணுவ முயற்சி. இந்திய—சீன உறவில் நெருக்கடி.

அரபுநாடுகளை அங்கீகரித்துள்ள இந்தியா, இஸ்ரேலை இன்னும் அங்கீகரிக்காமல் இருப்பது, 'நடுநிலைமை' ஆகாது என்று இஸ்ரேல் தலைவர் இந்தியாமீது குற்றம் சாட்டினர்.

பர்மிய முன்னுள் பிரதமர் ஊ நூவுக்கு கல்கத்தா சர்வகலாசாலை, கமலா பதக்கத்தை பரிசளித்திருக்கிறது.

எகிப்திலுள்ள கொம்யூனிஸ்டுகளை ருஷிய குருேஷேவ் ஆதரித்து தலையிடுவதை தம்மால் சகிக்கமுடியாதென்று எகிப்திய நாஸர் எச்சரித்தார்.

"நாஸர் ஆத்திரக்கார வாலிபர், தன் பலம் தெரியாமல் துள்ளுகிருர்" என்று குருேசேவ் தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்துக்கும், ஏழ்மையை ஒழிக்கவும் கூட்டுறவு முயற்சி ஒன்றுதான் வழி என்றும் இந்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் ஒரு கூட்டத்திற் குறிப்பிட்டார்.

திராவிடக்கழகம், "நாம் தமிழர்" கட்சியுடன் இணையாதென்றும், இலங்கை ஒரு தனி நாடென்றும், அது தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக அமைய முடியாதென்றும் திரு ஈ. வெ. ரா பெரியார் திருச்சிக்குப் பக்கத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

மாலைத்தீவிலிருந்து பிரிட்டிஷாரை வெளியேற்ற உதவும்படி மாலைத்தீவு அரசாங்கம் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், எகிப்து, இந்தோனேஷியா, சீனம், ருஷியா, அமெரிக்கா முகலிய நாடுகளை கேட்டுக்கொண்டிருக்கிறது.

### திங்கள் 23

பாகிஸ்தான் தேசியதினம் தலைவர் அயூப்கான், ஒரு அரசியல் நிர்ணய விசாரணைச்சபை நியமிக்கப்போவதாக அறிவித்தார்.

மத்திய ஆபிரிக்காவில் கொடுங்கோல் ஆட்சி பிரிட்டிஷ் உதவியுடன் நடப்பதைக் கண்டித்து லண்டனில் "காலனி விடுதலை" இயக்கத்தார் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

திருச்சி ஸ்ரீரங்கம் கோவிலில் கர்ப்பக்கிருகத்தில் தீபிடித்து பெரும் சேதம்.

தீபேத்தின் தலைநகரான லாஸாவில் நடைபெற்றசண்டையில் 150 பேர் கொல்லப்பட்டனர்.

### செவ்வாய் 24

இலங்கைப் பிரதிநிதிகள் சபைத் தலைவர்மீது எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து விவாதம்.

ஜப்பானில் நடைபெறும் பௌத்த மாநாட்டுக்குச் செல்லும் வழியில் இலங்கை கலாசார அமைச்சர் ஜயவீரகுருப்பு பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், இலங்கை—மலாயா கலாசார உறவு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்வதை வரவேற்ருர்.

சென்னை இராச்சியத்திலே ஹரிஜன உதவிக்காக 2 கோடி 30 லட்ச ரூபாய்களை சென்னை சட்டசபை மான்யம் அனுமதித்தது.

நயினதீவிலுள்ள இராணுவத்தினரால், அங்கு அமைதியாக வாழும் மக்களுக்கு இம்சை ஏற்படுவதாயும், ஆகவே அங்கிருந்து இராணுவத்தை உடன் அகற்றவேண்டுமென்றும், திரு வி. ஏ. கந்தையா அரசாங்கத்திடம் வற்புறுத்தியுள்ளார்.

### புதன் 25

பாக்தாத் ஒப்பந்தத்திலிருந்து ஈராக் விலகியது.

இலங்கை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஸ்மன்ட் டி சில்வாவின் பதவியை நீடிக்காமல், அவரை ஜூலை மாதம் 25-ந் திகதி வேலையிலிருந்து விலகுமாறு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தெரிவித்துள்ளது.

**தேவை**

தமிழும், ஆங்கிலமும் நன்கறிந்தவரும் பத்திரிகை அனுபவம் வாய்ந்தவருமான ஆர்வமுள்ள வாலிபர் தேவை தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு மனுச்செய்க.

# சிறுவர் பகுதி

## "காவேரியின் தியாகம்"

(எம். கே. நடராஜா பதிவு எண்: 36)

மலர்புரி என்ற ஊரில் காவேரி என்ற ஒரு பெண் வசித்துவந்தாள். திருமணம் செய்து ஒரு வருடத்தில் அவள் கணவன் காலகதியானுன். அவளுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. இத்தருணத்தில் மலர்புரி அரசி, அரசனையும் குழந்தை இளவரசனையும் விட்டு உயிர் நீத்தாள். ஆகவே தாயைப் பிரிந்த சேயை அன்பாக வளர்ப்பதற்கு ஒரு தாதி அரண்மனைக்குத் தேவைப்பட்டாள். அரண்மனையில் உள்ள உயர்ந்த சேவையாளர்களின் உதவியினுல் அரண்மனைத்தாதியாகக் காவேரி நியமிக்கப்பட்டாள். தன் மகனைக்கூட அதிகம் கவனிக்காமல், இளவரசனை நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக நேசித்து வளர்த்து வரலானுள்.

மலர்புரி மன்னன் நீதி தவருதவன். அவனுக்குப் பல பகைவர் இருந்தனர். அந்த இராச துரோகிகள் மன்னனைக் கொல்ல மாபெரும் சூழ்ச்சிசெய்தனர். ஒருநாள் காவேரி இளவரசனுக்குப் பாலூட்டிக்கொண்டிருந்தாள். அவளின் மகன் தரையில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது இரு இராசவிசுவாசிகள் ஓடிவந்து, காவேரியிடம் "இராசத்துரோகிகள் இளவரசரைக் கொல்ல வருகிருர்கள். அவரை எப்படியாவது காப்பாற்று" என்று சொல்லினர். காவேரி அவசரமாக இளவரசனுடைய உடைகள் களைந்து தன் மகனை இளவரசனுடைய உடைகளால் அலங்கரித்து மகனுக்குக் கடைசி முத்தம் கொடுத்துத் தரையிலே இருத்திவிட்டு இளவரசனுடன் ஓடிவிட்டாள். இளவரசனைக் கொலைசெய்யவந்த கொலையாளிகள் விஷயம் தெரியாமல் ஒன்றுமறியாத காவேரியின் மகனைக் கொன்றுவிட்டார்கள்.

காவேரி அரசனிடம் இளவரசனை ஒப்படைத்தாள். பின்பு புத்திரசோகம் தாங்காது மடிந்தாள். அரசன் அவளின் இராஜபக்தியை மெச்சி அவளுக்குச் சிலை நாட்டினுன்.

## குள்ளனுக்கு ஏற்ற குள்ளன்

(ச. இராமச்சந்திரன் பதிவு எண்: 19)

முன்ெனாரு காலத்தில் சீனுவில் சிங்சுங், சுங்சிங் என்று இரண்டு மந்திரவாதிகள் இருந்தார்கள். இருவரும் மிகவும் புகழ்பெற்றவர்கள். மந்திரதந்திரங்களில் மிகவும் வல்லவர்கள். ஆகாயத்திற் பறக்க விரும்பியவர்களையும் விரும்பிய வடிவத்திற்கு மாற்றவும் வல்லமை உடையவர்கள். எனினும் தங்களுடைய வன்மைகளை நல்ல வழியிலேயே பயன்படுத்தி வந்தார்கள்.

ஒருநாள் சிங்சுங், "நான் அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுங்சிங்கை என்னுடைய வீட்டுக்கு அழைத்து ஒரு விருந்தளிக்க வேண்டும். அப்பொழுது அவனுடைய சாப்பாட்டில் என்னுடைய மாயப் பொடியைக் கலந்துவிடுவேன். அதைச் சாப்பிட்டவுடன் அவன் ஒரு கரடியாக மாறிவிடுவான். அவனை இப்படிச் சற்றுநேரம் ஆட்டிவைத்தபின் என்னிடம் இருக்கும் மாற்று மாயப் பொடியின் உதவியைக் கொண்டு அவனுக்கு மீண்டும் பழைய உருவத்தைக் கொடுப்பேன்" என்று எண்ணினுன். அந்த எண்ணம் அவனுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுங்சிங், சிங்சுங் வீட்டிற்கு விருந்துசாப்பிட வந்தான். இருவரும் சாப்பிட அமர்ந்தனர். தங்களிடமிருந்த மந்திரப் புத்தகங்கள், கோல்கள், கொடிகள் என்பவற்றைப் பக்கத்தில் இருந்த அலமாரியில் வைத்தனர். சாப்பாடு பரிமாறியதும் சிங்சுங் தன் விருந்தினனுக்குத் தெரியாமல் அவனுடைய உணவில் தனது திட்டப்படி மாயப் பொடியைத் தூவிவிட்டான்.

சாப்பாட்டுக்கிடையே சிங்சுங் தன் நண்பனை நோக்கி "இதென்ன ஆச்சரியம். நீ கரடியாக மாறிக் கொண்டிருக்கிருயே" என்று பரிகாசமாகக் கேட்டான். அதற்கு சுங்சிங் "நான் மட்டுமா உருவத்தில் மாறிவிட்டேன். நீயும்தான் குரங்காய் மாறிக் கொண்டிருக்கிருயே" என்ருன். மிக ஆச்சரியத்துடனும் ஆத்திரத்துடனும் சிங்சுங் கண்ணுடியிலே தன் உருவத்தைப் பார்த்தான். சுங்சிங் கூறுவது உண்மைதான் என்றறிந்துகொண்டான்.

மந்திரவாதியின் சக்தி எவ்வாறிருககும் என்று தான் உணரவில்லையென்று மிக விசனத்துடன் தெரிந்து கொண்டான் சிங்சுங். ஏனென்ருல் தான் சுங்சிங்கைக் கரடியாக மாற்றவேண்டும் என்று நினைத்த மாத்திரத்திலே சுங்சிங் தன்னை ஏதாவது மாயத்திற்கு ஆளாக்கி விடலாம் என்பதை மறந்துவிட்டான்.

### சேவல்

— அழகனுர் —
பதிவு எண்: 127.

ஓலைக் கூரை மீதிலே
    உறங்கும் கோழிச் சேவலும்
காலை நேரம் வந்ததும்
    கண்விழித்துக் கூவுமாம்;

குஞ்சைக் கூட்டிச் சென்றிடும்
    கோழி யோடு செல்லுமாம்;
வஞ்ச நெஞ்சக் கருடனை
    மடக்கி விரட்டி ஓட்டுமாம்.

தூக்கம் போக்கி எழுந்துநாம்
    தொண்டு தன்னைச் செய்யநல்
நோக்கம் கொண்டு கூவிடும்
    நல்ல பண்பைப் போற்றுவோம்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு இலக்கமும்

70. மகேஸ்வரி கந்தையா,
C/o சி. முத்துத்தம்பி,
(ஆசிரியர்)
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

71. "வழிவேந்தன்"
யோ. அ. விக்ரர்,
சம்பத்திரியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

72. சு. மகேஸ்வரசர்மா
தில்லைவாசம்
மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

73. க. சகாதேவன்
C/o பிள்ளையார் விலாஸ்
107, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

74. அ. சிவகுமாரன்,
19, 2வது மைல் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

75. K. பரஞ்சோதி,
சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.

76. செ. திருஆரூரன்,
378, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

77. நா. காசிநாதன்,
நிற்சாமம் கடை,
சங்கானை.

78. நே. புஷ்பநாயகி,
29, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

79. குருநாதி கணேசன்,
அச்சுவேலி தெற்கு,
நாவற்காடு.

80. சோ. குகச்செல்வி,
54, பிறவுண்ரோட்,
(Brown Rd.)
யாழ்ப்பாணம்.

81. ம. சபாரெத்தினம்,
சித்தாண்டி,
முறக்கொட்டாஞ்சேனை.
(கி. இ.)

82. மகாமணி,
97/1, மெயின் வீதி,
றக்குவானை.

83. ச. தவமலர்
38, லேக்ரோட், நிர். 2,
மட்டக்களப்பு.

---

செல்வச் சிறுவர்களே,

அனைவருக்கும் வணக்கம்.

எனது கிறீஸ்தவ மருமக்களுக்கு இது புனிதமான ஒருவாரம். பாவிகளை மன்னிப்பதற்காக உலகத்திலே அவதரித்தார் கிறீஸ்து நாதர். மக்களைப் பாவத்திலிருந்தும் மீட்பதற்காக அவர் முள் முடி சூடினுர். சிலுவையிலே அறையுண்டு பலியானுர். இப்படியாகத் தமது உயிரை உலகத்துக்காகப் பலி கொடுத்தார் கிறீஸ்து நாதர். அவரது புனிதமான மரணத்தை நினைந்து உலகிலுள்ள கிறீஸ்தவர்கள் அனைவரும் தியானம் செய்யும் காலமிது.

உலகத்தை உய்விக்கவந்த இந்த உத்தமரின் திருநாமம் வாழ்க!

சின்ன மாமா

### அழைப்பு

அழைத்தல் என்பது கூப்பிடுதல், (ஒருவரை) கொண்டு வருதல் என்ற பொருளில் இன்று வழங்கப்படுகின்றது. பண்டைக் காலத்தில் அழைத்தல் என்ற பொருளில் கூவுதல், விளித்தல் என்ற சொற்கள் வழங்கின. அச்சொற்கள் மறைதலும் அழைத்தல் என்ற சொல் புகுந்து இன்று பெருவழக்காகி விட்டது. அங்ஙனமாயினும், அழைத்தல் என்ற சொல் சில இடங்களில் பிழையாக வழங்கப்படுகின்றது. தந்தை மகனை அழைத்தான் என்பது சரியானது. கம்பனைக் கவிச்சக்கரவர்த்தி என அழைப்பர் என்பதில் அழைப்பர் என்பது ஒருவாறு பொருந்தும். ஆயினும், 'வேங்கடத்திற்கும் குமரிமுனைக்கும் இடைப்பட்டுக் கிடந்த நிலப்பரப்பினைத் தமிழ் நாடென அழைத்தனர்' என்பதில் 'அழைத்தல்' என்ற சொல் பொருந்தாது. 'கூறினர்' எனலே பொருந்துவதாகும். மக்களுள் ஒருவரை அழைக்கலாம், விலங்கினுள் ஒன்றையும் ஒவ்வொருபோது அழைக்கலாம்; நிலத்தையும், மரத்தையும் அழைக்க (கூப்பிட) முடியாதன்ருே?

பொன். மு.

## கஜேந்திரன் கதி

(மார்க்கண்டு இந்திராணி பதிவு எண்: 33)

ஒரு காட்டில் கஜேந்திரன் என்னும் பெயருடைய யானை இருந்தது. அது தனது பலத்தினுல் மற்றைய விலங்குகளை அடக்கி அரசாள வேண்டுமென எண்ணியது.

கஜேந்திரனின் பேராசையை அறிந்த குள்ளனெனும் நரி தனது புத்தியினுல் யானையைத் தோற்கடிக்க முடிவுசெய்தது. தனது முடிவுக்கு ஆதரவு தேடி ஏனைய விலங்குகளிடம் தனது எண்ணத்தை வெளியிட்டது. கஜேந்திரனின் தொந்தரவுகளினுல் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த மற்றைய மிருகங்கள் "எப்படியாவது யானையைக் கொன்று விடு" என்று நரியிடம் வேண்டின.

சிந்தனையுடன் சென்ற குள்ளன் வழியில் சேறும் சுரியும் நிறைந்த சிறு குளம் ஒன்று இருக்கக் கண்டது. அதன்மீது படர்ந்திருந்த பாசி பார்வைக்குப் பசுமையான தரையாகவே தெரிந்தது. இக் குளத்தைக் கருவியாகக் கொண்டே யானையைத் தொலைக்க வேண்டுமெனக் கருத்துக் கொண்டது.

ஒரு நாள் இரவு யானை தனித்திருக்கும் போது அங்கு சென்ற நரி அதனை வணங்கி "நீங்களே எமது மன்னராக வேண்டும். இன்று விலங்குகளாகிய நாம் எல்லாம் பக்கத்துக் காட்டில் கூடியிருக்கிருேம். நீங்கள் அவ்விடத்துக்கு வந்தால் அனைவர் முன்னிலையிலும் இராஜாவாக அறிமுகப் படுத்தப் படுவீர்கள்" என்றது.

ஏற்கனவே உதித்த தனது திட்டம் உருவாக இதுவே சந்தர்ப்பம் என்று கருதிய கஜேந்திர யானை குள்ளனுகிய நரியின் பின்னே சென்றது.

குளத்தைச் சமீபித்ததும் மெதுவாகக் கடந்து விட்டது நரி. யானையினுல் அதனைக் கடக்க முடியவில்லை. முன்னங்கால்களும் பின்னங் கால்களும் கிறுகிறென சேற்றுள் புகத் தொடங்கவே அது கூக்குரல் இடத் தொடங்கியது. நரி அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. முடிவில் யானையின் முழு உடலும் சேற்றுள் அமிழ்ந்தியது. நரியும் ஏனைய மிருகங்களும் அதனைக் கண்டு மகிழ்ந்தன. அரசனுக முடிசூடஎண்ணிய கஜேந்திரன் கதி அதோகதியாயிற்று.

மறுநாள் அந்தக் காட்டில் உள்ள மற்றைய மிருகங்கள் எல்லாம் ஒன்றுகூடி விருந்துண்டு மகிழ்ந்தன.

### பாவித்தல்

'முற்காலத்தில் போர்வீரர்கள் வில்லையும் அம்பையும் பாவித்தார்கள்'. என்று எழுதும் மாணவர்களும் உளர். பாவித்தல் என்ற சொல் இவ்வாக்கியத்தில் உபயோகித்தல் என்ற பொருளில் ஆளப்பட்டிருக்கிறது. அதற்கு அது பொருளன்று. பாவித்தல் என்பதற்கு எண்ணுதல், கருதுதல் என்பனவே பொருள். 'பிற மாதரைத் தாய்மாராகப் பாவிக்க வேண்டும்' என்பதில் அச்சொல் அதற்குரிய பொருளில் ஆளப்பட்டிருக்கிறது. முற்காலத்தில் போர்வீரர்கள் வில்லையும் அம்பையும் உபயோகித்தனர்' என எழுதுதலேசரி.

பொன். மு.

# ஓர் அனுபவ உண்மை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் கூறலாம். எண்பதுக்கு மேல் ஆந்தையின் குணம் என்பது நமக்குப் புலனாகின்றது!

இம்மூன்றில், தலையாட்டும் மாட்டின் குணமும் உங்கொட்டும் ஆந்தையின் குணமும் மக்களிடத்தே கண்டிருக்கின்றோம். இதற்கு விளக்கம் வேண்டியதில்லை. இனி நாற்பதுச்கு மேல் நாய்க்குணம் என்பதுபற்றிச் சற்று விரிவர்கக் காண்போம்.

### வேறுபாடு

நாம் இதுவரை கண்டிருக்கும் நாயின் குணத்திற்கும், இப்பழமொழி கூறும் நாயின் குணத்திற்கும் சற்று வேறுபாடிருப்பதுபோலத் தோன்றுகின்றது. நாற்பதுக்கு மேல் நாய்க்குணம் என்று சொல்லுகின்றபோது, இழித்துக் கூறுகின்றோமேயொழிய, புகழ்ந்து கூறவில்லை. ஆனால் நாம் உணர்ந்தவரை நாய்க்குணமோ சிறப்பினையுடையதுபோலத் தோன்றுகின்றது. நன்றி மறவாமையன்றோ சிறந்த குணம்! அக்குணத்திற்கன்றோ நாய் சிறந்து விளங்குகின்றது. அங்ஙனம் எனில் இப் பழமொழியால் இகழ்ந்து கூறப்படும் பொருள்தான் என்ன?

நம்மூருக்குப் புதியதாக—முன் அறிமுகமாகாதவர்—வந்தால், அவரை அன்புடன் வரவேற்பது மனிதனுடைய இயல்பு. இயந்திரங்களுடன் உறவாடிக்கொண்டு காலத்தைத் தொழிற் சாலையிலே கழித்துக்கொண்டு செல்லும் இந்நாளைய நகர்ப்புறத்தில் வாழும் மனிதனுங்கூட விருந்தினர்களை அன்புடன்தான் வரவேற்கின்றான். 'விருந்து' என்றதும் மகிழ்ந்து வரவேற்பதும், அவனுக்கு வேண்டுவனவெல்லாம் நல்குவதும் மனிதன் இயல்பு. விருந்தின் மென்மையினைத் தமிழர் நன்குணர்ந்திருக்கின்றனர். மருந்தாயினும் விருந்தோடுண்பதே தமிழர் கண்ட வாழ்வியல்.

### ஒரு விந்தை

நம்மூருக்கு வழி தவறிய வெளியூர் நாய் ஒன்று வருவதாக வைத்துக் கொள்வோம். உடனே உள்ளூர் நாய்கள் அனைத்தும் ஒருங்கு திரண்டெழும்—நல்வரவேற்பு அளிப்பதற்காக அன்று—துரத்தியடிப்பதற்காக! கூடியமட்டும் ஓடோடியும் விரட்டியடித்து விட்டுத்தான் வரும். இதனை நாம் நாள்தோறும் நம்மூரிலே தெருக்களிற் காண்கின்றோம். மனிதனிடத்தில் அத்துணையளவு அன்புடைய நாய், நன்றி மறவாத சீர்த்த குணம் வாய்ந்த நாய் ஏன் தன் இனத்தானைக் கண்டவிடத்து விரட்டுகின்றது? மனிதனுக்குத் துணைவனாக இருந்துகொண்டு, அவனைக் காப்பாற்றிக் கொண்டு வரும் பண்பாட்டிற்கெல்லாம் உறைவிடமாகக் கருதப்படும். நாய், தன் இனத்தானைக் கண்டவிடத்து, அன்புடன் வரவேற்காது, மேல்விழுந்து விரட்டுகின்றது! என்ன விந்தை!

நாய் ஒரு விலங்கு. உயிரினங்களின் பரிணமத்தையுணர்ந்த டார்வின் போன்றோர், நாடொறும் ஒவ்வோர் உயிரும் தன் வாழ்வுக்காகப் போரிடுகின்றது. போராட்டமே வாழ்வாகி விடுகின்றது. போராட்டத்தில் வலிமையற்றன மடிந்தொழிய வலிமையுடையன வாழ்கின்றன. பெரிய மீன் சிறிய மீனைப் பிடித்துத் தின்கிறது. ஒவ்வொன்றின் இனம் அழிவதற்கு அந்த இனத்தைச் சார்ந்ததே எமனாக வருகின்றது. பிறர்வருவதில்லை. குலத்தைக் கெடுப்பது கோடரிக் காம்பன்றோ! ஒவ்வொரு நாயும் தான் மட்டும் வாழ ஆசைப்படுகின்றது. பிற நாய் வருவதால் தன் வாழ்வுக்குக் கேடு நேரிடுமோ என்று அஞ்சுகின்றது. அதனால்தான் வாழ்வதற்காகத் தன் இனத்தைச் சார்ந்த பிற நாயை விரட்டுகின்றது.

### மனிதனிடத்தில் அன்பு

தம்மினத்தாருடன் சண்டையிட்டுக் கொண்டு பிற நாய்க்குக் கேடு சூழ்ந்து கொண்டு வாழும் நாய் மனிதனிடத்தில் மட்டும் அன்புடன் இருக்கின்றது. காரணம் மனிதன் தன் வாழ்விற் குறுக்கிடுவதில்லை. ஆனால் தன்னை வாழவைக்கிறான். தான் மேன்மேலும் வாழ்ந்து போவதற்காகவே மனிதன் கொஞ்சம் அன்புகாட்டினாலும், மிக்க அன்பு கொண்டு வாலைக் குழைத்துக் கொண்டு மனிதனைக் "காக்காய்" பிடிக்கின்றது! மனிதனுக்குத் துணைபுரிய வேண்டும் என்று நாய் அன்புடன் இல்லை, சுயநலம் காரணமாகவே அன்புடன் இருக்கின்றது. இதற்கோ அன்பு என்று பெயர்? தன் சுற்றத்தார் பிழை செய்த வழியும், அதற்காக அவர்களைத் தண்டிக்காது, தழுவிக்கொண்டு வாழ்தலையன்றோ அன்பு என்று தமிழ் நூல் கூறுகின்றது. "அன்பெனப்படுவது தன்கிளை செறாமை" யன்றோ? (கலித்)தன் இனத்தவன் வாழ்ந்தால் தான் வாழ முடியாது என்று அவனை விரட்டியடித்துவிட்டு மனிதனிடத்தில் வாலைக் குழைத்துக்கொண்டுபோவதை எப்படி அன்பு என்று கூறுவது?... பொறாமையன்றோ!

### பொறாமை

சுயநலமே பொறாமைக்குக் காரணமாவது. பொறாமை என்பது ஒத்த நிலையிலுள்ளவரைக் கண்டவிடத்தே தோன்றுகின்றது. தம்மைப் போன்ற பிறர் செல்வத்தைக் கண்டபோது தோன்றும் இக்குணத்தைத்தான் "பிறன் ஆக்கம் கண்டு பொறாமை" என்று பரிமேலழகர் கூறுகின்றார். தம்மினும் தாழ்ந்த நிலையிலுள்ளவரைக் கண்டவிடத்தோ தம்மினும் உயர்ந்த நிலையிலுள்ளோரைக் கண்டவிடத்தோ பொறாமைஉண்டாவதில்லை. தம்மினும் தாழ்ந்த நிலையிலுள்ளோரைக் கண்டவிடத்து இரக்க உணர்வு தோன்றுகின்றது; தம்மினும் உயர்ந்தோரைக் கண்டவிடத்து பக்தி தோன்றுகின்றது. ஆனால் நம்மைப்போன்ற சமநிலையிலுள்ளவரைக் காண்கின்ற போது நம் மனத்திலே ஏற்படும் மாற்றமே வேறு! நம்மைப் போன்ற சமநிலையில்உள்ள மற்றொருவன் வாழ்ந்தால்நாம்வாழக்கூடுமோ என்ற அச்சம் வாழ்க்கையில் உள்ள உயிர்களின் போராட்டக் குணத்தாற் பொறாமை ஏற்படுகிறது. ஒரு சேவகன் மற்றொரு சேவகனை வெறுக்கின்றான். ஒரு பாடகர் மற்றொரு பாடகரை வெறுக்கின்றார்; ஒரு மருத்துவர் மற்றொரு மருத்துவரை வெறுக்கிறார்; ஒரு ஆசிரியர் மற்றொரு ஆசிரியரை; ஒரு கல்லூரித் தலைவர் மற்றொரு கல்லூரித் தலைவரை; ஒரு அமைச்சர் மற்றொரு அமைச்சரை; ஒரு நாட்டின் தலைவர் மற்றொரு நாட்டின் தலைவரை இங்ஙனம் ஒருதலைவர் மற்றொரு தலைவரை வெறுக்கிறாரே ஒழிய தன்கீழ்ப் பணிபுரியும் ஏவலாளை அன்று. தன்நிலையிலுள்ள பிறர் வாழத் தனக்குப் பிடிப்பதில்லை, தன்நிலையிலுள்ள பிற நாய் வாழத் தனக்குப் பிடிக்காதது போல!

### பல குணங்கள்

மனிதனுடைய வளர்ச்சியில் பல குணநலன்களைக் காணமுடிகின்றது. குழவிப் பருவத்தில் தெய்வ மணங் கமழ்கின்றது. காளைப் பருவத்திற் காதல் மணம். எல்லோருடனும் அன்பு கொண்டு வாழ வேண்டுகின்றான். எல்லோரும் வாழத் தான் வாழவேண்டும் என்ற நோக்கமும் பிறரை அண்டிப் பிறருடைய ஆதரவினால் தான் வாழ வேண்டும் என்ற ஆசையுமுண்டு. ஆனால் நாளடைவில் நல்ல எண்ணம், அவனுடைய சிறந்த குறிக்கோள்எல்லாம்மெதுவாகமறையத் தலைப் படுகின்றன. நாற்பது வரை மிக நல்லவர்களாக இருந்தவர்கள்கூடப் பிறகு பிறரைக் கண்டு பொறாமைப்படுகின்றனர். முதலில் ஒன்றுமில்லாத போது தன்பாட்டில் இருக்கிறான். ஆனால் வளர வளரத் தன் மதிப்பினையுணரத் தொடங்கியதும், அவனை "யான்", "எனது" என்பன ஆட்கொள்கின்றன. எல்லாம் தன்னுடையது; தன்னைத்தவிர ஒருவரும் வல்லவர் அல்லர் என்ற இறுமாப்பு. பிறர் வாழ்ந்தால் தன் பெருமை குறையும் என்ற அச்சம். பிறரை அழித்தே—பிறருடைய நல்ல குணங்களைக் குறைத்துக் கூறியே—தன்னைப் பெரியவனாகக் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற அற்ப எண்ணம் எல்லாம் நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு சிலரிடத்தேயாகிலும் தலைவிரித்தாடுவதை இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

### நாற்பதுக்குமேல்

உண்மையிலேயே மனிதன் மனிதனாக வாழ வேண்டியது நாற்பதுக்கு மேற்பட்ட காலத்தில்தான். நாற்பதுக்கு முன் அவனிடத்தில் ஆற்றல் இல்லை; செய்துமுடித்தற்குரிய பொருள் இல்லை. வாய்ப்புக்கள் இல்லை. அதற்கு மேல்தான் அவனுக்கு நல்லது செய்தற்கு வேண்டிய நலன்கள் எல்லாம் வந்து பொருந்துகின்றன. ஆனால் பிறகுதான், அவைகளை வைத்துக்கொண்டு, உலகம் வாழத் தானும் வாழ வேண்டும் என்று எண்ணாது, தான் மட்டும் வாழ எண்ணி நாயைப்போல் தன் இனத்தார்மீது சீறி விழுகின்றான்; பிறர்மீது பொறாமை கொண்டு பிறரை அழித்தொழிக்க விரைகின்றான். ஒருமலையில் இரண்டு புலி வாழா என்பதன்றோ நம்நாட்டுப் பரிணமக் கொள்கையை விளக்கும் பழமொழி! இன்றைய வல்லரசுகளின் அணுக்குண்டு விளையாடலும் இக்குணத்தையன்றோ எடுத்தியம்புகின்றது!

ஒரு சில வேதாந்திகள் இப் பழமொழிக்குப் புதியதொரு விளக்கமும் தருவார்கள். அக்கூற்றும் மனிதனுடைய குணத்தை ஒருவாறு விளக்கிச் செல்லுகின்றது. காளைப் பருவத்தில் பலர் ஒழுக்கக் குறைபாடின்றி இருப்பர் எனவும், நாற்பதுக்குமேல் அவர்களிடத்தில் ஒழுக்கக்கேடு தோன்றக்கூடும் என்றும் சொல்வர். நாற்பதுக்கு முன் நடந்து கொள்ளும் நடத்தையை வைத்துக் கொண்டு ஒருவனை நல்லொழுக்கமுடையவன் என்று சொல்லமுடியாது. நாற்பதுக்கு மேல்தான் அவன் நடத்தையைக் காணவேண்டும். இங்ஙனம் கூறின் பலர் சிரிக்கக் கூடும்! நாற்பதுக்கு முன் வீட்டில் பெரியவர்கள் வாழ்வார்கள்; அதனால் அஞ்சிவாழ்கின்றான். அச்சமே அவனை நல்வழிப்படுத்துகின்றது. ஆனால் நாற்பதுக்குமேல்! வீட்டில் தாய் தந்தையர் இல்லை. மனைவியோ கிழவி! நாய்போல் அலைகின்றான்! இப்படியும் மனிதனுடைய நாய்க்குணத்தைக் கூறலாம்! இங்ஙனம் மனிதனின் அரிய குணத்தையெல்லாம் நன்குணர்ந்து கூறி வைத்த நம் முன்னோரின் அறிவின் நுட்பத்தை என்னென்று கூறுவது! (முற்றும்)

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிலே, மின்சார சக்தியை உற்பத்தி செய்யும் டர்பைன்களை ஓட்ட எருதுகளையும் பயன்படுத்துகின்றார்கள். இஸ்ரவேலில், வெயிலிலிருந்து சக்தியை எடுத்து பயன்படுத்தும்படியான முறையைக் கையாண்டுவருகின்றார்கள். நம்மிடம் எருதுகள் உள்ளன. சூரியனும் இருக்கிறான். மலிவாகச் சக்தியைப் பெறுவதற்கான வேறு வழிவகைகளும் உள. இந்த மண்டலத்திலுள்ள விஞ்ஞானிகளுக்கு, ஒரு திட்டப்படி தக்க சந்தர்ப்பமளித்தால், அவர்கள் எருதுகள், சூரியன் எல்லாம் நமக்கு நல்ல வகையில் பயன்படச் செய்யலாம்.

---

# ஏழ்மை எனும் சாபத்தீட்டை.....

### ஏழ்மையை ஒழிக்க

ஏழ்மை எனும் சாபத்தீட்டை ஒழித்துக் கட்டத்தான் நாம் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டியுள்ளது. வல்லரசாவதற்கோ, ஆதிக்கம் பெறுவதற்காகவோ அல்ல. ஏழ்மையைத் தீர்க்க அது ஒன்றுதான் வழி. நம் மக்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்த அதுதான் மார்க்கம். உண்ண உணவின்றி, ஒண்ட இடமின்றிச் சங்கடப்படுபவர்களுக்கு அது ஒன்றே விமோசனத்துக்கு வழி செய்யும். வெட்கக் கேடான வாழ்க்கை நிலைமாறி, எமது நாட்டில் இயற்கை எழில்களைக் கண்டு அனுபவிக்க, அவகாசமும் வசதியும் அவர்களுக்குக் கிடைக்கும். தங்கள் சொந்த கலாச்சாரத்தை அழகான முறையில் வளர்க்கவும் பிறரைப் பார்த்து அப்படியே 'காப்பி' அடிக்காமல், பழமையையும், புதுமையையும் இணைத்துப் புதுவழி செல்லவும் அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்.

ஒரு விரிவான அமைப்புத் திட்டப்படி நாம் நமது பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும். நாம் இன்னும் ஒரு திட்டத்தை உருவாக்கவில்லை. இதனால் சங்கடப்படும் விஞ்ஞானிகளும் கைத்தொழில் வல்லுநர்களும் அவ்வித திட்டம் வேண்டுமென்று முன் வந்து வற்புறுத்துவார்களென்றே நம்புகிறேன்.

### கட்டுப்பாடு

திட்டம் நடைமுறைக்கு வரும் புதிதில், அரசாங்கக் கட்டுப்பாடு பலமாக இருக்கவேண்டியது முக்கியமென்றே கருதுகின்றேன். ஆங்காங்கே நிலைமைக்கும், தேவைக்கும், நோக்கத்துக்கும் தக்கபடியான வாய்ப்புக்கள் உருவாகும்வரை, தலைமை அரசாங்கமே இவற்றை நடத்திவைக்கவேண்டும். மக்கள் தயாராகிப் பொறுப்பு ஏற்று அணிவகுத்து நடத்தும் திறமை பெறும் வரை இந்த ஏற்பாடு இருத்தல்வேண்டும்.

இன்று இலங்கையிலே ஒரு திட்டம் அமைக்க வேண்டியது மிகவும் அவசரமாகும். உடன் இதற்கான நடவடிக்கை எடுக்காவிடில், நமது நாடு, ஒருசில சுயநல வேட்கைக்காரர்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாகிவிடும். "தேசிய சமதர்மம்" என்று பெயரும் கொடுத்து நாட்டைக் குட்டிச் சுவராக்கி விடுவர். 25 வருடங்களுக்கு முன் உலகில் மற்றொரு பகுதியில் இவ்விதமே நடந்ததை நான் நினைப்பூட்டத் தேவையில்லை. (முற்றும்)

---

# மர்மம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தெப்படி? நோய் தீரவில்லை இந்த முடிவுக்காக ஒரு வருடகாலம் நடித்து வந்தேன்.

என்றோ ஒருநாள் நான் இப்போது மேற்கொண்ட செயலை கையாண்டிருப்பேன். ஆனால்: அண்ணாவின் திருமணத் திட்டங்கள், எனது பிரிவினால் ஒரு சில காலத்துக்குத் தடைப்படலாம். இந்தத் தடைக்கு நான் காரணமாகக் கூடாது என்ற தீவிர எண்ணத்தினாலேயே உடல் வாதையற்ற—உள்ளத்தின் வாதையுள்ள நிலையில் உழன்றேன்.

அன்ப; அண்ணாவுக்கு மணமாகி ஏறக்குறைய ஒருமாதமாகிவிட்டது. எனது பிரிவு அவர்களின் இன்பத்திற்கு இடையூறு விளைவிக்காது என்ற நிலை வந்த பின்பே இப்போதைய செயலைக் கையாண்டேன்.

என்வரைக்கும் அவள் வாழ்க்கைக்குத் தீபஸ்தம்பம். அந்த ஸ்தம்பத்தின் அருகினிலிருந்து ஒளியைக் கூர்ந்து நோக்கிக் கண்களைக் குருடாக்க விரும்பவில்லை. குருடாகும் எனது இருட் பார்வையில் வாழ்க்கைப் பாதையின் குறுக்கே போடப்பட்ட மற்றோரின் அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பட்டு உடைந்து தகர்ந்து விடலாம். உலகில் நாம் காணும் நடைமுறை உண்மை இது. எனது பிரிவு குறித்து நீ வருந்துவதிற் பயனில்லை. இங்கு உனக்கு எனது இதயம் திறந்துகாட்டப்படுகிறது. இது உன்னுடனேயே இருக்கட்டும் இது வெளியிலே தெரிந்தால் அண்ணாவின் நினைவில் வெறுப்பு வேரூன்றிக் குடும்பத்திற் பிளவுண்டாகும். பழியே அறியாத அப்பெண் எனது மனப் போராட்டத்துக்குப் பலியாவதா? இந்த உண்மை என்னோடு ஒழியட்டும்.

இக்கடிதம் உனக்குக் கிடைக்கும் அன்றே எனது உயிர் பிரிந்து சிலமணி நேரமாகிவிடும். அவசரத்திற் குட்டை வெளியாக்கி விட்டுவிடாதே! இதுவே நீ எனக்குச் செய்யும் சேவை. எனது இதய பாரம் இக்கடிதத்துடன் குறைகிறது. ஆனால்; நீ வார்த்தையைக் காப்பாற்றுவாய் என்ற நம்பிக்கையில் ஆத்மா சாந்தியடையும், என எதிர் பார்க்கிறேன். உடன் புறப்பட்டு வரின் என் கட்டையை நீ காணலாம்.

**விஸ்வலிங்கம்**

* * *

என்முன் செல்லும் கூட்டம் ஒன்றாக மரணவீட்டை யடைந்தது.

"என்ன தியாகு! உனக்குத் தந்தி கொடுத்து மாலை நாலு மணி வரை பிணத்தை வைத்திருந்தோம் உன் நண்பனைக் கடைசியாகப் பார்க்க உனக்குக் கிடைக்கவில்லை" என்றாள் விஸ்வத்தின் தாயார்.

"சவத்தை நான் சுடலையிற் கண்டுவிட்டேன். வண்டி சுணங்கிவிட்டது அதுதான் குறிப்பிட்ட நேரத்திற்கு வர முடியவில்லை"

விஸ்வத்தின் தாய் பெண்கள் மத்தியிற் கலந்து கொண்டாள்.

முற்றத்தில் விரிக்கப்பட்ட பாயில் இருந்து கொண்டேன். விஸ்வத்தின் இளைய அண்ணாவின் புதிய மனைவியைத் துழாவின எனது கண்கள். அவளைக் கண்டு பிடிப்பதில் அதிக சிரமமிருக்கவில்லை.

அந்த வதனத்தில் ஏதாவது அதீத சாயல் படர்ந்து விஸ்வத்தின் மரணத்துக்காக வருந்துகிறதா! என்று கவனித்தேன். உறவினன் என்ற பிரிவுத்துயர் தவிர; வேறு எதையுமே அவளிடம் காண முடியவில்லை.

விஸ்வம் எவ்வளவு தூரம் முன் ஜாக்கிரதையுடன் நடந்து கொண்டான். தனது பலவீனத்தை வெளிக்குக் காட்டியிருந்தால் அந்தப் பெண்ணுக்கு மாசு உண்டாகியிருக்கும். அப்புறம் அவளது வாழ்வு?

அந்த மரண வீட்டு வேதனையிலும் எனக்கு ஓர் உண்மை புலனாகியது. அந்தப் பெண்ணை விஸ்வலிங்கம் விரும்பியதற்குரிய சக்தியே அது. அங்கு குழுமியிருந்த அத்தனை பேரிலும் தனிப்பண்பு கொண்டவள் அவள்.

உருவிலும், ஒழுங்கிலும் துன்ப இருளை ஓட்டும் ஒளிச் சுடர்கள் அவளது வதனத்தில் இழையோடியிருந்தன. ஆயிரத்தில் ஒரு படைப்பே அந்த அழகு.

அருள் வழி

# உயிர்த்தெழுந்த திருநாள்

ஒரு கிறிஸ்தவன்

இயேசுபகவான் அன்று வெள்ளிக்கிழமை சிலுவையில் மரணமெய்தி மூன்றும் நாள் ஞாயிறு காலை உயிர்த்தெழுந்தார் என்பது கிறிஸ்தவ விசுவாசம். கோதுமை மணி செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும் என்று அவர் மரிக்க ஒரு கிழமைக்கு முன் கூறியதின் கருத்து இந்த உயிர்த்தெழுதலை விளக்கும். ஒரு கோதுமை மணி நிலத்துட் கிடந்து செத்த பின் அதிலிருந்து தோன்றி முளையில் பல மணிகள் காணப்படுவது போலத் தாமும் மரணமடைந்த பின் உயிருடன் எழுந்து உலகுக்கு மிகுந்த பலன் சம்பாதித்துக் கொடுப்பதாக விளக்கினர். இந்த உயிர்த்த திருநாளை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் கொண்டாடுவதின் மகத்துவம் பெரிது. இந்நாளை ஈஸ்டர் எனக்குறிப்பர். மரணம் அழிவுக்குரியது. அது பயங்கரமானது. அது நெருங்க நெருங்க மக்களின் மனமும் பயத்தினல் உடைந்துவிடும். ஆனல் இந்த மரணம் தமக்குப் பெரிய இலாபம் என்றும், இன்பமானது என்றும் கிறிஸ்து பெருமானுக்குச் சில வருடங்களின் பின் வாழ்ந்த பவுல் என்னும் கிறிஸ்தவ பக்தர் எழுதியிருக்கிறர். உயிர்த்தெழுந்த கடவுள் இருப்பதினலும், மரணத்துக் குட்படும் எவனும் இந்த உயிர்த்தெழுதலில் பங்கு கொள்ளுகிறதினலும் மரணம் பயத்துக்குரியதல்ல அது இன்பமானது என்பது அந்த அடியவனின் எண்ணம். இது சிந்திக்கவேண்டிய ஒரு சிறந்த கருத்து.

இயேசுபெருமான் "உயிர்த்தெழுவேன்" என்று கூறியமையினல் வேதபாரகர், பரிசேயர், ஆசாரியர்கள் தங்கள் காவற் சேவகர்களை அந்தக் கல்லறைக்குக் காவல் வைத்தனர். அவர் உயிர்த்தெழுந்து சென்றபின் அவரைச் சுற்றியிருந்த சேலைகள் இருந்த ஒரு வெறும் கல்லறையைச் சீடரும் ஞாயிறு காலை சென்ற பெண்களும் கண்டனர். ஒரு தேவதூதன் அங்கே நின்று அவர் இங்கேயில்லை என்றான். வெறுங் கல்லறை கிறிஸ்தவர்களின் வாழ்வின் வல்லமை தரும் இடம். அநேக பக்தர்கள் பரிசுத்தர்களின் கல்லறைகள் வெறுமையாக இல்லை. அவர்களது எலும்புக் கூடுகள் உண்டு. ஆனல் ஒரேயொரு கல்லறையே இந்த உலகம் தோன்றி இதுவரையும் வெறும் கல்லறையாகக் காட்சிதருகின்றது. வெறுங் கல்லறையே கிறிஸ்தவர்களின் நம்பிக்கை; வெற்றிவாழ்க்கை; விசுவாச நம்பிக்கை; சந்தோஷ செய்தி.

இந்த உயிர்த்தெழுதலை விண்ணும் மண்ணும் எவ்வாறு மகிழ்ந்தேற்றது என்று கிறிஸ்தவக் கவிஞர் கிருஷ்ணபிள்ளை விளக்குகிறர்.

வார்த்தையாய் நடுவராகி
மன்னுயிர்க் கிரட்சைநல்க
மூர்த்தியாய்ச் சமாதிகூடி
முறைவழா துயிர்த்தெழுந்
தீர்த்தனைத் தரிசித்தேத்தி [த
செயசெய வென்றுபோற்றி
கீர்த்தன நறும்பூ மாரி
பெய்தனர் கெழுமி விண்
[ணேர்.

அறந்தலை யெடுத்த தொல்லை
ஆரணத் துழனி யோங்கிச்
சிறந்தது சென்ம தோடத்
தீக்கருமத்தின் மூழ்கி
இறந்து பாழ்பட் டோராவிக்
கீறிலாச் சீவன் வந்து
பிறந்தது சுகிர்த போதம்
பிறங்கிய தவனியெங்கும்

என்றிவ்வாறு விண்ணுலகுக்கும் மண்ணுலகுக்கும் இந்த உயிர்த்தெழுதல் எத்துணை மகிழ்வையும் நலத்தையும் நிரப்பியதென்று கூறுவது கவனிக்கத்தக்கது. இந்த உயிர்த்தெழுதலினல் உலகுக்கு என்ன வந்ததென்பதையும் புலவரே சொல்லக் கேட்போமாக.

தன்மமும் தவமும் ஓங்கித்
தழைத்தன அருள் மெய்வேத
கன்மமும் ஒழுக்கும் வல்லே
கதித்தன கருணை பூத்த
நன்மையும் மெய்ம்மை தானும்
நடநவின் றுலக மெங்கும்
வன்மமும் பகையும் தேய
வளர்ந்தன மருவி மாதோ.

இத்தகைய உயிர்த்தெழுதலின் மகத்துவத்தைத் தான், முன் குறித்த பவுல் என்னும் அடிகளார் தம் வாழ்விலேயே அனுபவித்தார். அவர் ஒருநாள் கிறிஸ்தவர்களுக் கெதிரான மனநிலையுடன் செல்லும்போது உயிர்த்தெழுந்த கர்த்தன் யேசு அவருக்குக் காட்சியீந்தார். உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசக்கூடாதென்று ஆசாரியர்கள் கண்டித்துத் தண்டித்து அடித்துச் சிறையிலிட்டு வருத்தியபோதிலும் இந்தப் பவுலும் ஏனைய அடியாரும் தாம் கண்டதை எப்படிக் கூருது விடலாம் என்று கேட்டுவிட்டு அதையே திரும்பத் திரும்பக் கூறி அடியுமிடரும் பெற்றனர். அதிற் சிலர் மடிந்தனர். சிலர் சிறையில் வாடினர். தமக்கிடர் வரக்கூடிய இந்த உயிர்த்தெழுதலை அவர்கள் கூறியது ஒன்றே இயேசுபகவானின் உயிர்த்தெழுதலை உண்மைப்படுத்துமன்றே? நடவாத பொய்யைக் கூறி இடரையும் மரணத்தையும் வலிதில் பெற யாரும் விழைவார்களோ?

இவ்வாறு உண்மையும், உந்நதமும் மகிமையும் தந்து மண்ணுலகை விண்ணுலகாக்கி மரண பயத்திலிருந்து மக்களை மீட்டு பாவத்தின் கோரத்தை அழித்து எல்லா மக்களையும் உயிர்த்தெழும்பப்பண்ணி உலகில் ஒளியை நிலைநிறுத்தும் இந்த உயிர்த்தெழுதல் திருநாள் ஒப்பற்ற ஒரு பெருநாள் என்பதற்கையமில்லை.



## தன்னுயிர் ஈந்த ஈசன்

மன்னுல கத்து மாந்தர்
மடமையாம் இருளில் மூழ்கி
பன்னரும் சிறுமைச் சேற்றில்
பதிந்துளம் குறுகும் காலை
தன்னுயிர் கொடுத்து அன்னர்
சார்பினிற் குருசில் தொங்கி
இன்னருள் செய்த இயேசு
இன்பதம் போற்றி செய்வோம்.

அந்தநற் சுதனர் செய்த
அரும்பெரும் அருளிற் காக
சிந்தையில் தேங்கும் தீமை
சிதறிடச் சீர்மை சேர்த்து
நிந்தையே கொள்ளா நேர்மை
நெறியினிற் சென்று நாமும்
இந்தமா நிலத்தில் என்றும்
இடரினைச் செய்யா துய்வோம்.

அலையென வீசித் துன்பம்
அகத்தினைத் தாக்கும் போதும்
நிலையினில் தளரா நெஞ்சும்
நேர்மையும் கொண்டே இந்த
உலகிடை அறங்கள் கோடி
உவந்துமே செய்து சாந்தி
நிலவிடச் செய்து மாற்றர்
நெஞ்சினில் இன்பம் காண்போம்.

## ஒரு குறைவுமில்லை

நமது உயிர்க்குயிராய் இருப்பவர் கடவுளே.
ஆகையால் நாம் அவருடைய உடைமை.
அவருடைய அடிமை.
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே.
நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது.

நமக்கு ஒரு குறைவுமில்லை
நாம் என்றுமுள்ளோம்
எங்கு மிருக்கிரேம்
எல்லா மறிவோம்

இப்படியே நாம் இடையருது சிந்தித்துச் சிந்தித்து கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக.

—நற்சிந்தனை

## மணிமொழிகள்

உண்மை பொய்யை அவித்துவிடும். அன்பு கோபத்தை அவித்துவிடும். துன்பம் நோற்றல் ஹிம்சையை அவித்துவிடும். இந்த அழியாத விதி ஞானிகளுக்கு மட்டுமின்றி அனைவர்க்கும் உரியதே.

* * *

உலகத்தைத் தாங்கி நிற்பது அன்பு ஒன்றே என்பது என் திடமான நம்பிக்கை. அன்புள்ள இடத்தே வாழ்வுண்டு. அன்பில்லா வாழ்வு மரணமே.

—காந்திஜி


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**
**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**
மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாஞல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**
கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை**
**என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| சூ. பு. கே. | வெ | செ. | |
| சூ | இவ்வார கிரக நிலை | | |
| | | | |
| சனி | வியா | | ரா |

இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.

(28-3-59 — 4-4-59)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) எண்ணியதிலும் பார்க்க இவ்வாரம் தொழில் முறைகளில் நன்மையுண்டாகும். பிரயாண அலைச்சலும், சினேகிதர்கள் உறவாற் கவலையுமுண்டு.

**இடபம்** (கார்த்திகை 2,3,4-ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1,2-ம் பாதம்) இவ்வார முற்பகுதியில் பணச்செலவுகள் சிறிது அதிகரிக்கும், எதிர்பார்க்காத முறையில் சில நற்கருமங்கள் நிறைவேறும்.

**மிதுனம்** (மிருக சீரிடம் 3,4, திருவாதிகை, புனர் பூசம் 1,2, 3-ம் பாதம்) சினேகிதர்களது உதவி அதிகரிக்கும். குடும்பக் கவலை சிறிது இருக்கப்பெற்ருலும், வார இறுதியில் மனம் நிம்மதி அடையும். சத்துருக்களால் தீங்கு வரப்பெறினும், அது பின்னர் நன்மையையே வரச்செய்யும். தொழில், வியாபாரம் ஆகியன இவ்வாரம் அதிக கவனத்தைக் கவரும்.

**கடகம்** (புனர் பூசம், 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) தேகாரோக்கியக் குறைவு இடையிடையே ஏற்படக்கூடும். பெண்களின் நட்பும் அனேக நாட்களாக இருக்கப்பெற்ற மன எண்ணம் நிறைவேறும். எதிலும் மன ஆறுதல் இல்லாதிருப்பின் இடமாற்றம் ஏற்படக்கூடும்.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) பந்துக்களின் விரோதத்தால்,சிக்கல்கள் உண்டாகும்.புதுச் சினேகிதர்களால் நன்மைகள் வந்தடையும்.நடந்த கருமங்களினுல் பண விருத்தி ஏற்படும். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களுண்டாகும்.

**கன்னி** (உத்தரம் 2,3,4-ம் பாதம், அத்தம், சித்திரை 1-ம் 2-ம் பாதம்) வீட்டில் நன்மையான கருமங்கள் நடைபெறும். புதுமுயற்சிகளினுல் பிரயாசைகள் அதிகரிக்கும். சில கஷ்டநஷ்டங்கள் தோன்றி மறையும், அன்னியர் நட்புண்டு.

**துலாம்** (சித்திரை 3-ம், 4-ம் பாதம், சுவாதி, விசாகம், 1,2, 3-ம் பாதம்) சினேகித வழியால் உதவிப் பேறுகள் கிடைக்கும். வியாபாரத் துறைகளில் முன்னேற்றங்கள் உண்டாகும். குடும்பக் கவலைகள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை) பெரியோர்களின் உதவிப் பேறுகள் கிடைக்கும்: கொடுக்கல் வாங்கல் மூலம் மனக் கிலேசம் ஏற்படும். நன்மையாகத் தோற்றுங்கருமங்கள் பின் கவலையுண்டாக்கும்.

**தனுசு** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) குடும்பத்தில் புண்ணிய கருமங்கள் நிறைவேறும், பெண்களின் உறவுகளால் தொல்லைகள் தோன்றி மறையும், தொழில் முறைகள் வழமைபோல் நடைபெறும். பணச் செலவுகள் அதிகரிக்கும், பெரியோர்களின் உறவுகள் ஏற்படும்.

**மகரம்** (உத்தராடம், 2,3,4-ம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்) எல்லாக் கருமங்களிலும் பிரயாசை அதிகமாகவிருக்கும். சடுதியாய் சில மாற்றங்கள் ஏற்படும், நடந்த கருமங்களினுல் நன்மை உண்டாகும், குடும்பத்தின் செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்** (அவிட்டம் 3-ம்,4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) தொழில் முறைகளில் செல்வாக் குண்டாகும், பெரியோர்களின் உறவுகளேற்படும்,குடும்பத்தில்சிறப்புடைய கருமங்கள் நிறைவேறும், வியாபாரத் தொழிலால் வருமானம் கூடும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) நிலை மாற்றங்களும் அற்ப வருமானமுமுண்டாகும். சினேகிதர்களின் உதவியால் நன்மைப் பேறுகள் கிடைக்கும். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும், அரச கருமங்களில் முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.


## அசௌக்கரியத்திலும் ஆரோக்கியத்திலும் இன்றியமையாதது



இன்றைய வாழ்க்கை மிகவும் கரடுமுரடானது .... கடினமானது .. அதோடு மிகக் குறுகிய கால எல்லைக்குள் எவ்வளவோ வேலைகளைச்செய்து முடிக்க வேண்டியுளது. எனவே இதனை செவ்வனே செய்ய உங்களுக்குப் பிரத்தியேக ஆற்றல் அவசியம். அது நெஸ்டோ மால்ட்டில் அபரிமிதமாகக் கிடைக்கின்றது. ஒவ்வொரு அவுன்ஸ் நெஸ்டோ மால்ட்டிலுமுள்ள விட்டமின் $B_1$-ன் 137 யூனிட்டுகளும், உங்கள் உடல், நரம்பு ஆகியவைகளின் இழந்த பலத்தை மீட்டுத் தருகின்றது ..... உண்மையிலேயே, நெஸ்டோமால்ட்டில் உங்களுக்கு அநுகூலமாகவிருக்கும் அத்தனையும் இடம்பெற்றுள்ளது. அதோடு இது அருந்துவதற்கும் பிரீதிகரமாகவுள்ளது.

**NESTOMALT** விட்டமின $B_1$ சேர்க்கப்பட்ட மால்ட்டட பால்

நெஸ்டோ மோல்ற் மாதிரி (Sample) வேண்டுவோர் -/25 சத முத்திரையைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்:-




ஒவ்வொரு அவுன்ஸ் பவுடரிலும் விட்டமின் B 1-ன் 137 யூனிட்டுகள், முழு பாலாடை, மால்ட்டட் பார்லி, கோதுமை மா ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. சுவையானது, ருசி-பார்க்கத் தூண்டுவது ... எனினும் சிக்கனமானது.

**½ ருத்தல், 1 ருத்தல் மற்றும் 5 ருத்தல் டின்களில் கிடைக்கும்**

விலாசம்:

**நெஸில்ஸ் ஸ்தாபனத்தார்** — த. பெ. 189, **கொழும்பு.**


நாடக விமர்சனம்

## சிரிக்காதே

மீசாலை சனசமூக நிலைய நிதிக்காகச் "சிரிக்காதே" எனும் இந்த நாடகம் சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி மண்டபத்தில் கொழும்பு வெள்ளவத்தை ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினரால் 21-3-59 சனிக்கிழமை இரவு நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணச் சூழ் நிலையை நிலைக்களனுக்கி யாழ்ப்பாணத்தில் நடமாடும் பாத்திரங்களைப்புகுத்தி யாழ்ப்பாணச் சம்பாஷணைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சிரிக்காதே என்ற தலைப்புக்குப் பொருந்தாவிடினும், ஆங்காங்கு பிரதம பாத்திரமான முருகரால் வெளியிடப்பட்ட விகடத் துணுக்குகள் இரசிகர்களைச் சிரிக்கவே செய்தது என்பதை மறுப்பதற்கில்லை.

தமது நெடுநாளைய விருப்பத்தை நிறைவேற்ற முயலும் முருகர் கொழும்பிலிருந்துவரும் உத்தியோக நண்பர்களைக் காக்காய் பிடிக்கிருர். அவர்கள் இவரைப் பெரிய மனிதராக்க எண்ணினரோ, அன்றி வேடிக்கை செய்ய முற்பட்டனரோ தெரியாது. கிராமத்திலுள்ள வாசிகசாலையொன்றில் பிரசங்கம் செய்ய வைக்கின்றனர். அந்த இடத்தில் அவர் யாழ்ப்பாணப் பாணியிற் செய்த பிரசங்கம் தத்ரூபமாக அமைந்துவிடுகிறது.

முருகுப்பிள்ளை அம்மானுகப் பாத்திரமேற்ற இராஜரத்தினம் முற்றுமுழுதும் அப்பாத்திரமாகிவிட்டார் என்ருல் அது மிகையாகாது. அவரது குடுமியும் வேட்டியும், 'மேஸ்'பெனியனும் சாட்சாத் யாழ்ப்பாணக் கிராமப்புறத்து முதியவரை நினைவூட்டுகின்றன.

நடிப்பென்ருல் சினிமாவில் பிரபலமடைந்தவர்களின் பாவத்தை அப்படியே பின்பற்றுவதுதான் சிறப்பென்ற எண்ணம் சில நடிக இளைஞர்களிடம் வலுத்து வருகிறது. இதற்கியைய சினிமாத் தயாரிப்பாளராக வரும் அழகக்கோன் என்பவர் சிவாஜி கணேசனைப் பிரதிபலிப்பதாக நடிப்பதாகக் கூறி ரசனையை விரசமாக்குகிருர். எதற்கும் தனித்துவம் வேண்டுமென்னும் எண்ணம் நினைவில் இடம் பெற வேண்டும்.

வள்ளியாகப் பாத்திரமேற்றுள்ள செல்வி ராஜி தனது பகுதியைச் சரிவரச் செய்து சபையின் பாராட்டுதலைப் பெற்ருர்.

முருகரின் மைத்துனராகத் தோன்றும் அருளம்பலம், முருகரின் சிங்கள வேஷத்தில் ஏமாறும் போதும் முடிவில் ஏமாற்றம் அம்பலமாகையில் திகைக்கும்போதும் பாத்திரத்திற்கேற்ற குணும்சங்களைப் பிரதிபலிக்கிருர்.

கதையம்சம், நடிப்பு ஆகியவற்றை வைத்துக்கொண்டு இந்த நாடகத்தைச் சிறப்புளது என்று கருதாவிடினும், காட்சியமைப்பு, நடிகர்களுக்கு அமைத்த வேஷம் ஆகியவற்றில் தரம் கூடியதாகவே உள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

## கல்லடி உப்போடையில் விளையாட்டுப் போட்டி

கல்லடி உப்போடை, இ.கி.மி. பெண்கள் பாடசாலை இல்லங்களின் விளையாட்டுப் போட்டி, பாடசாலைத் தலைவி திருமதி வி. சாரதாதேவியின் தலைமையில் நடைபெற்றது.

மாணவர்கள் 'பிரபா','சாரதா', 'நிவேதிதா'என மூன்று இல்லங்களாகப் பிரிந்து போட்டியிட்டனர். விளையாட்டின் போது அதிக புள்ளிகளைப் பெற்ற 'பிரபா இல்லம்' முதலிடத்தைப் பெற்றது. 'சாரதா இல்லம்', 'நிவேதிதா இல்லம்' என்பன சமபுள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றன.

முடிவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கப்பாடசாலைகளின் பொது முகாமைக்காரர் ஸ்ரீ நடராஜானந்தா அவர்கள் பரிசுகளை வழங்கினுர்.

### ஹாட்லிக் கல்லூரியின் வெற்றி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் வண்ணுர்பண்ணையில் நடைபெறற கிரிக்கட் ஆட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி வெற்றி பெற்றது. முதலாவது இன்னிங்சில் ஹாட்லிக் கல்லூரி 176 ஓட்டங்கள் பெற்றது. யாழ்ப்பாணம் இந்துவால் 94 ஓட்டங்கள் மட்டுமே பெறமுடிந்தது. இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கட்டுகளுக்கு 133 ஓட்டங்கள் எடுத்ததுடன் நிறுத்திக் கொண்டு யாழ் இந்துவை அடிக்க விட்டனர். யாழ்ப்பாணம் இந்து பொழுதைப் போக்கி விளையாடி வெற்றி தோல்வியின்றி முடித்திருக்கக் கூடிய ஆட்டத்தில், கடைசியில் 15 நிமிஷங்களிருக்கையில் எல்லா விக்கட்டுகளையுமிழந்து 102 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தையும் தோற்றனர்.

### கைப் பந்தாட்டச் சம்மேளனம்

இப்போது விமரிசையாக நடைபெற்று வரும் கைப்பந்தாட்டப் போட்டிகள் சம்மேளன மொன்றில், யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட திறமை வாய்ந்த பதினைந்து கோஷ்டிகள் பங்குபற்றி வருகின்றன.

மொத்தமாக நாற்பது போட்டிகள் விளையாடப்படும். இச் சம்மேளனத்தை வழக்கறிஞர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் அங்குரார்ப்பணஞ் செய்து வைத்தார். சம்மேளனத்தின் உதவியாற் கிடைக்கும் பணம் மல்லாகம் திருமுருகன் ஆலய நிதியுடன் சேர்க்கப் பட்டுத் திருப்பணியிற் செலவாகுமென்றும் அறியப்படுகிறது.

### அச்சுவேலிக்கு வெற்றி

"கொஸ்மிக்" கழகம் (அச்சுவேலி மத்திய சனசமூக நிலையம்), சூராவத்தை வேல்முருகன் கழகம் ஆகியவற்றிற் கிடையே நடைபெற்ற போட்டியின் போது விளையாடப் பட்ட இரண்டு ஆட்டங்களிலும் அச்சுவேலி இளைஞர்களுக்கே வெற்றி கிடைத்தது.

ஆரம்பத்திலிருந்தே போட்டி சுவராஸியமாயிருந்தது. வெற்றிக் கோஷ்டியினருள் திரு. எஸ். செல்லையா, திரு. கே. பரராசசிங்கம் ஆகியோரின் மின்வெட்டுகளையும், உற்சாகமான விளையாட்டையும் ரசிகர்கள் பெரிதும் பாராட்டினர். போட்டியின்போது திரு. எஸ். செல்வநாயகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

இச் சம்மேளனம் முடிவுற இன்னும் நாலுவார காலம் வரை செல்லுமென்ற செய்தியும் கிடைத்திருக்கிறது.

# பிரதேச சுயாட்சி

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி செய்துவருகிறது. ஆனல் சென்றவாரத்தில் செனேட்டர் தாமஸ் அமரசூரியாவை, யு. என். பி யிலிருந்து விலகச் செய்து, தமது பாதுகாப்புத் திருத்தமசோதாவை ஆதரிக்கச் செய்தது, பிரதமருக்குப் பெரியதோர் அரசியல் வெற்றியும், டட்லிக்கு பெரிய தோல்வியுமாகும்.

தமிழருக்கு எம். ஈ. பி நல்லதா? யு. என். பியா? எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?

பண்டாரநாயகா, நியாயமான அளவு தமிழையும், பிரதேச சுயாட்சிச் சபைகள் அமைக்கவும் ஒப்புக் கொண்டார். ஆனல் யு. என். பி இதைக்கூட ஒப்புக்கொள்ளாத நிலையில் தமிழரின் அபிமானத்தை அது எப்படிப் பெற முடியும்?

### கூட்டு அரசியல் கமிட்டி

கூட்டு அரசியல் அமைப்புக் கமிட்டி சமஷ்டிக் கொள்கையை ஒப்பவில்லை என்று ஒரு பத்திரிகை ஜோஸ்யம் கூறுகிறது. இதுஉண்மையாயின் வியப்பில்லை. சமஷ்டிக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. அச்சபையிலிருந்து விலகியபின் அக்கொள்கையின் நன்மைபற்றி வாதித்து எடுத்துச்சொல்லவும் ஆளில்லை. பிரதமருடன், திரு. எஸ். ஜே. வி. செய்துகொண்ட ஒப்பந்தத்தில் பிரதேச சுயாட்சி சபை அமைப்புக்கு இடமிருந்தது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் யாரைக் குடியேற்றுவது என்பதுபற்றிய உரிமையும் அதன்படி அங்குள்ள மக்களுக்கே இருக்கும். இந்தக் கொள்கையையாவது, அச்சபை ஏற்குமா? இதையும் கைகழுவி விடுமா? அதை வற்புறுத்தவும் அங்கு ஆள் உண்டா?

### தமிழ்த் திருநாள்

யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரியில், பங்குனி மாதம் முதல் திகதியன்று தமிழ்த்திருநாள் நடைபெற்றது. கலக்கமடைந்து சோர்வுற்ற தமிழ் மக்களுக்குப் புத்துயிரும் புது நம்பிக்கையும் அளிப்பதற்காக இனி ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் திகதியன்று தமிழ்த் திருவிழாவை நடத்த ஒழுங்கு செய்வதாகத் தலைவர் திரு. சிவபாதசுந்தரம் தெரிவித்தார். தமிழரெல்லாம் கட்சிபேதம் இன்றி ஒரே மேடையில் அடிக்கடி ஆங்காங்கே பலபல ஊர்களிலும் கூடுவது நல்லது. வேற்றுமைகளை வற்புறுத்தாமல், அதைவிட்டு, தமிழ் மக்களின் எதிர்கால நன்மைக்காக, உருப்படியான காரியங்களைப் பலகட்சித் தலைவர்களும் கலந்து யோசித்து ஒற்றுமையாகச்செய்தாலே பலன்உண்டு.

காந்தி அடிகள் நெருக்கடியான சமயங்களில் தெய்வ சக்தியையே நம்பினர். அது தான் துணைசெய்து வழிகாட்டும் என்று தவமிருந்தார். ஆனல் இதில் எல்லாச் சமயத்தவரும் கலந்துகொள்ள மிகக் கவனமாக வகை செய்தார். அவர் காட்டிய வழியைப் பின்பற்றித் தமிழ்த் திருநாளை, கொண்டாடுவதாயின் திகைத்துள்ள தமிழ்ச் சமூகத்துக்குப் புது வழிகாட்டி புது நம்பிக்கையுமளிக்கும்.

## வேலணை வாசிகளுக்கு ஒரு வசதி

சென்ற 18-3-59 புதன்கிழமை மாலை வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களிலுள்ள வாகனச் சொந்தக்காரர்களின் வசதிக்காக வேலணையில் ஷெல் பெற்றோல் ஸ்தாபனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. திருமதி பரமேஸ்வரி அட்சரமூர்த்தி முயற்சியால் உருவான இந்த ஸ்தாபனத்தை வேலணை கிராமச் சங்கத் தலைவர் திரு. அ. செல்லையா திறந்து வைத்தார். ஷெல் கொம்பனியாரின் யாழ்ப்பாணப் பகுதி மனேஜர் திரு. வல்லவராயன் குத்து விளக்கேற்றிவைத்தார். ஷெல் கொம்பனிப் பகுதி விற்பனைப் பிரதிநிதி திரு. ஏ. கே. கனகநாயகம் விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த ஸ்தாபனத்தில் வாகனங்களுக்கு வேண்டிய வேறு வசதிகளும் விரைவிற் செய்து வைக்கப்படுமெனத் தெரிகிறது.

## அகில இலங்கை முற்போக்கு இளைஞர் சம்மேளனம்

சாதிசமய வேறுபாடின்றி சமுதாய நல்லுணர்வைப் பலப்படுத்தவும் சமதர்மக் கருத்துக்களைப பரப்பவும் 15.3.59 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஜிந்துப்பிட்டித் தெருவிலுள்ள முத்தமிழ்மன்றப் பணிமனையில் திரு. ஜே. சோமசுந்தரம் தலைமையில் அகில இலங்கை முற்போக்கு இளைஞர் சம்மேளனம் ஆரம்பிக்கப் பெற்றது.

சம்மேளனத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் :-

தலைவர். திரு. வீ. ஆனந்தசங்கரி, துணைத் தலைவர்: திரு: சு. தியாகராசா, இணைச் செயலாளர்கள்: திரு. ஜே. சோமசுந்தரம், திரு. கு. இராமச்சந்திரன், பொருளாளர். சா. முகைதீன், செயற்குழு உறுப்பினர்களாக அறுவர் தெரிவு செய்யப்பட்டனர்.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

- ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய சிறுவர் சிறுமியர் அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.
- உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 24-4-59க்குப்பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினல் போதுமானது.
- ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதிக்கு** உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்பவேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.
- **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும் :

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**(28-3-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதியில்** என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..........................................................

விலாசம்..................................................

..........................................

..............................
கையொப்பம்

..............................
பெற்றார் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

*விளையாட்டுப் பகுதி*

## பற்றிக்ஸ் பரம்சோதியின் பந்து வீச்சு

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே வட்டுக்கோட்டையில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது. முதலாவது இன்னிங்சில் 74 ஓட்டங்கள் மட்டுமே அவர்கள் பெற்றனர். ஜோசப் 18 ஓட்டங்களும், சபாரத்தினம் 13 ஓட்டங்களும் பெற்றனர் என்பதைத் தவிரக் குறிப்பாகச் சொல்லக்கூடியது எதுவும் இருக்கவில்லை. யாழ்ப்பாணக் கல்லூரி ஆட ஆரம்பித்து 24 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளை இழந்ததும் எல்லாம் தலைகீழாகிவிடுமோ என்றுபயப்பட வேண்டியிருந்தது. அதன்பின் நிலைமை ஒருவாறு திருந்தியது. அவர்கள் 87 ஓட்டங்களைப் பெற்றனர். சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாவது இன்னிங்சில் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளை இழந்தனர். ஆனல் ஜோன்பிள்ளையும் பரம்சோதியும் வந்து விளாசத் தொடங்கினர்கள். பரம்சோதி விக்கட்டை இழக்காமல் 141 ஓட்டங்கள் பெற்றுர். அவர்கள் 9 விக்கட்டுகளை இழந்து 237 ஓட்டங்கள் பெற்றதும் நிறுத்திக்கொண்டு யாழ்ப்பாணக் கல்லூரியை ஆடவிட்டனர். யாழ்ப்பாணக் கல்லூரியால் 166 ஓட்டங்கள் மட்டுமே பெற முடிந்தது. தவயோகராசா 58 ஓட்டங்கள் பெற்றுர். சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்கு 54 ஓட்டங்களால் வெற்றி கிடைத்தது. ஆட்ட முடிவில் பழைய மாணவர்களால் பின்வரும் ஆட்டக்காரருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பந்துவீச்சுக்கு பற்றிக்ஸ் பரம்சோதிக்கும் யாழ்ப்பாண வைரவநாதனுக்கும், பந்து அடித்ததுக்கு பற்றிக்ஸ் பரம்சோதிக்கும், யாழ்ப்பாண தவயோகராசாவுக்கும், பந்து பிடித்ததற்கு பற்றிக்ஸ் ஜோன்பிள்ளைக்கும் யாழ்ப்பாண ஜெகநாதனுக்கும்.

இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையே நடைபெற்ற இவ்வருடாந்தப் போட்டி 42 வது ஆகும்.

### சென்ற் யோன்ஸ் கல்லூரிக்கு வெற்றி

மத்திய கல்லூரிக்கும் சென்ற் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டி சென்ற் யோன்ஸ் கல்லூரிக்கு 8 விக்கட்டுகளால் வெற்றியாக முடிந்தது. மத்திய கல்லூரி முதல் இன்னிங்சில் 147 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்சில் 165 ஓட்டங்களும் பெற்றனர். சென்ற் ஜோன்ஸ் முதல் இன்னிங்சில் 9 விக்கட்டுகளை இழந்து 239 ஓட்டங்களைப்பெற்றதுடன் நிறுத்திக்கொண்டனர். இரண்டாவது இன்னிங்சில் ஒரு மணி நேரத்தில் 73 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. 45 நிமிஷங்களிலேயே வெற்றிக்குத் தேவையான அவ்வளவு ஓட்டங்களையும் 2 விக்கட்டுகளை மட்டும் இழந்து பெற்றனர்.

ஏராளமான மக்கள் கூடிநின்று இவ் வாட்டத்தைக் கண்டு களித்தனர்.

### கிரிக்கட் போட்டி ஏற்பாடு

சென்ற் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஏப்ரல் 10, 11-ந் திகதிகளில் கொழும்பிலிருந்து வரும் மாணவருக்கும் யாழ்ப்பாண மாணவர் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெறவிருக்கும் கிரிக்கட் போட்டிக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி இ. சச்சிதானந்தம் இப் போட்டிக்கு ஏற்பாட்டுச் செயலாளராகக் கடமையாற்றுகிருர். இருந்து பார்க்க தினசரி 1 ரூபாயும் நின்று பார்க்க தினசரி 25 சதமும் வசூலிக்கப் படுமெனத் தெரிகிறது.


பத்திரிகைகளும் பொதுமக்களும் போற்றிப் புகழ்கின்றனர்!

**3 -வது மகத்தான வாரம்**

**சென்ட்ரல்** (மருதானை) – **ஓடியன்** (கல்கிசை) – **ராணி** (யாழ்ப்பாணம்)

**லிஸா** (கண்டி) – **ஜோதி** (திருக்கோணமலை)

தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணி சனி, ஞாயிறு மாலை 2 மணி
ஞாயிறு காலைக் காட்சி 10 மணி



ஏ. நாகேஸ்வரராவ்
சாவித்திரி
ராஜசுலோசன
கே. ஏ. தங்கவேலு
பி. கண்ணும்பா
ரங்கராவ்
ஜி. வரலெட்சுமி
நடித்த

அன்ன பூரண பிக்சர்சாரின்

**மஞ்சள் மகிமை**

(தமிழ்)

ஒவ்வொருவரும் தவருமல் பார்க்கவேண்டிய
ஓர் குடும்பச் சித்திரம்

கடைசி வாரம்

கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)

சிவாஜி கணேசன் - ஜமுனா - நாகையா - ரங்கராவ்
— நடித்த —

# பொம்மைகல்யாணம்

சித்திரை 1ம் திகதி புதன்கிழமை முதல்

கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)

அஸ்திவாரம் இழந்த ஆலயத்தின் கதி என்ன?
பணப் பேய்களுக்குப் புதையல் கிடைத்ததா?
பார்வையற்ற பத்மா பார்வை அடைந்தாளா?
பிரபாகர் உயிர் பெற்று எழுந்தாரா?
கடைமை வீரன் ராமதாஸ் கதி என்ன?
இத்தனைக்கும் பதில் காணப் பாருங்கள் இத்திரைக் காவியத்தை




ஸ்ரீரஞ்சனி
ரேலங்கி
ஈ. வி. சரோஜா
எம். லிங்கமூர்த்தி
கௌரிநாத சாஸ்திரி
ஏ. நாராயணராவ்
சி. ஹேமலாதா
கே. பத்மாவதிதேவி
பிரபாவதி
நடித்தது.

பின்னணி:
பி. லீலா, ஜிக்கி, சீர்காழி கோவிந்தராசன், எஸ். ஸி. கிருஷ்ணன்

## சினிமாஸ் தாபனத்தாரின்

தியேட்டர்களில் வெகுவிரைவில்

வெற்றிமாலைசூடி, வீரமுரசு கொட்ட வருகிறான்!

இரு வேட நடிப்பு, டைரக்ஷன், தயாரிப்பு முதலியவைகளை
ஏற்று வெற்றி கண்ட

புரட்சிநடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்



நடித்த

# "நாடோடி மன்னன்"

அதிவிரைவில் எதிர்பாருங்கள்!

சிலோன் தியேட்டர்ஸ் தாபனத்தாரின் தியேட்டர்களில்

# மாய மனிதன்

(தமிழ்)



நட்சத்திரங்கள்:



ஸ்ரீராம்
வனஜா
ஜி. எம். பஜீர்
காக்கா ராதாகிருஷ்ணன்
டி. பி. முத்துலெட்சுமி

மற்றும் பலர் சேர்ந்து நடித்த

ஓர் உன்னத திரை ஓவியம்.

நடனம்: ஹெலன்

பின்னணி:
ஜிக்கி
டி.வி.ரெத்தினம்
ரத்னுமாலா
எஸ். சி. கிருஷ்ணன்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் ஈழநாடுப் பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28ம் திகதி வெளியிடப்பெற்றது.